Vembadi Girls' High School

Dare To Do Right

# வர்த்தகி



# வர்த்தகி

## இதழ் - 10

## 2010

**வர்த்தக மாணவர் மன்றம்**
**யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**
**யாழ்ப்பாணம்**

***Commerce Students Union***
***Vembadi Girls' High School***
***Jaffna***

# கல்லூரிப்பா

இராகம்: ஹம்சத்வனி தாளம்: ஆதி

மன்னு புகழி பரவி ஒளியுறவே
மன்னவனே நினைப் பணிந்திடுவோம்
மனமொழி மெய்யதை வளர்த்திடவே
தினமுமே சித்தியை அருளிடுவாய்.

பல்லவி

உண்மையிலே உளத் திண்மையிலே
வண்மயிலே மதி நுண்மயிலே
தன்நலம் தவறா தனிப்பெரும் வேம்படி
நந்நல மகளிர் கழகம் வளர்க.
தொண்டொன்றே நமது இலட்சியமாம்
கொண்டனம் நட்பு கல்வி ஜெபம்
கண்டனமே செய்வோம் பிழையதனை
கொண்டிலோமே அச்சம் எதுவரினும்

# வணிக மன்றகீதம்

வாழிய வேம்படிவணிகமன்றம்
வாழிய வாழிய வாழியவே
சூழ்க நல் வளங்கள் துலங்குமகளிர்
சுடர்பணி வாழிய வாழியவே

(வாழிய)

பொருளியல் கணக்கியல் கணணிப் பொறிமுறை
புதுக்கியே பலதுறை வளர்ப்போம்
கருவிகள் கணிப்புகள் கைவர நுட்புகள்
கற்றுச் சாதனை படைப்போம்

(வாழிய)

மண்ணின் இயற்கை வளங்கள் மாண்புற
எண்ணியே விருத்திகள் செய்வோம்
வண்ணமாய் வாழ்வு வாய்த்திட உழைப்பின்
திண்ணமாய் சிரசாய் உயர்வோம்

(வாழிய)

வர்த்தகி போன்ற வலுவுள்ள சஞ்சிகை
அர்த்தமுடன் நாம் ஆக்கி
நித்தமும் உத்தம கருத்துக்கள் பகிர்ந்து
வித்தக விதையென விதைப்போம்

(வாழிய)

எங்கள் பள்ளிச்சாலை புறந்தரும்
எவ்வார் வண்மையும் உயர்த்தி
தங்கு புகழுடன் வேம்படிமகளிர்
தனித்துவம் பெற்றிடச் செய்வோம்

(வாழிய)

## ஈடில்லாப் பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகையே......

யாழ்ப் பெருநகராம் தலை நகரில்
சீர் பெரு ஊராம் ஆனைப்பந்திதனில்
வாழ்வது சீராயக் கொண்ட பதியதனில்
தாழ்வேது மில்லாத் தலைமகளாய் நன்
நாளதனில் உதித்த சந்திரா தேவி வாழி வாழி

வேம்புகள் புடைசூழ்ந்த வேம்படியாள் நிழலினிலே
ஆரம்பக் கல்வியொடு ஆசிரியராய் தொழில் பெற்று
பல பள்ளி பாங்காய் பணி பல ஆற்றி
சில ஆண்டில் மீண்டு வந்து சிறப்பான
களிப்புடனே சேவையாற்றிய உயர்வான உள்ளமது வாழி வாழி

கருமத்தில் கண்ணாகி பல காரியங்களில்
களமிறங்கி திறனோடும் சிறப்போடும் செய்திடுவீர்
விருப்பொடு இணைபாடவிதானச் செயற்பாடுகளில்
கடுப்பாக நில்லாது ஒழுங்காற்று சேவைகளில்
சிறப்பாக நம் வாழ்வு சீர் பெற விளக்கேற்றி நின்றார் வாழி

விஞ்ஞான ஆசிரியராக வந்து தன் வித்துவத்தால்
பகுதித்தலைவராக, உபஅதிபராக, ஒப்பனையாளராக
எத்தனை பாத்திரங்கள் வகித்தாலும் தன் கைப்
பக்குவத்தால் கலை மேடைகளில் சிறப்பான
உயிர்பாத்திரங்கள் உருவாக்கி நம்மவரும் பயிற்சிபெற வழி சமைத்த சித்திரமே வாழி வாழி

ஆசிரியப் பணியினிலே பல ஆண்டு தன்
ஆற்றலால் அனுபவத்தால் ஆர்வமொடு
அன்பான வார்த்தையொடு மனங்கோணாச் சேவையொடு
மேன்மையான வாழ்வு ஓய்வுக் காலமதனில்
தகப்பன் சாமி தங்கவேலன் தர வேண்டி நீடுழி வாழி வாழி

ஈடில்லாப்பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகை




திருமதி S. சொக்கலிங்கம்

## எமது அதிபர்




**திருமதி க. பொன்னம்பலம்**

B.sc(Hons), Dip in Bd, Dip in pub. Admin., S.L.P.S - I

# அதிபரின்
# ஆசிச் செய்தி

விஞ்ஞானத்தின் விந்தைகள் வியாபித்துள்ள இன்றைய உலகில் கணனிக்கல்வி முகாமைத்துவக்கல்வி என கல்வியானது பாரிய வளர்ச்சியை கண்டு வருகிறது. அது மட்டுமல்லாது இதனோடு இணைந்து பல கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

"வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது." என்ற வாசகத்திற்கேற்ப மாணவர் களின் வாசிப்பாற்றலையும் வர்த்தகக்கல்வியையும் மென்மேலும் வளப்படுத்தி வர்த்தகக் கல்வியின் வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டும் என்ற உயர் நோக்கில் எமது கல்லூரியின் வர்த்தகப்பிரிவு மாணவியர் தமதுகடின முயற்சி காரணமாக வர்த்தகி எனும் பத்தாவது இதழ் வெளிவருவதனை இட்டு பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன்.

எமது மாணவியரின் பல்வேறுபட்ட ஆக்கங்களை உள்ளடக்கிய இம்மலர் காலத்தின் தேவைக்கேற்ப புதிய தகவல்களை தாங்கி வெளிவந்துள்ளது. தொடர்ந்தும் வர்த்தகியாழ் வெளிவந்து எம்மாணவ சமுதாயத்திற்கு தமது சேவையை ஆற்றிட எனது நல்லாசிகள் மேலும் இப்பணியில் ஈடுபட்டுள்ள வர்த்தகமன்ற மாணவர்களிற்கும் அவர்களை நெறிப்படுத்திய மன்றப்பொறுப்பாசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறேன்.

திருமதி க. பொன்னம்பலம்
அதிபர்
யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

# யாழ் வலயக்கல்விப்பணிப்பாளரின் இதயத்திலிருந்து
## ஆசிச் செய்தி

வட மாநிலத்தின் சிறந்தபாடசாலைகளில் ஒன்றான யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவியரினை கொண்டமைந்த வர்த்தக மன்றம் "வர்த்தகி" எனும் பத்தாவது இதழினை வெளியிடுவது மகிழ்ச்சிக்குரிய செயற்பாடாகும். க.பொ.த (உயர்தர) வகுப்பில் பாடசாலை மட்ட கணிப்பீட்டில் உள்ள கருவிகைளப் பிரதிபலிப்பதாக இது அமைகின்றது. மாணவர்களின் ஆக்கங்களை தாங்கிவரும் இச் சஞ்சிகை ஏனைய மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமைவதுடன் இப்பாடசாலையின் பண்பாடு விழுமியங்களைப் பேணுவதாகவும் அமைகிறது.

இதுமட்டுமல்லாமல் இம் மாணவர்களின் இவ்வாறான உயிரோட்டம் மிக்க செயற்பாடுகள் காரணமாக கணக்காய்வாளர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கணக்காளர்கள், முகாமையாளர்கள் போன்ற பலர் உருவாகியுள்ளனர். இவ்வாறாக எதிர்காலத்திலும் பல நற்பிரஜைகள் உருவாக எனது ஆசிகள்.

ஆகவே இவ்வாறான ஆக்கத்தை நெறிப்படுத்திய அதிபர் மற்றும் ஆசிரியர்களையும், பாராட்டுவதுடன் "வர்த்தகி" தொடர்ந்தும் வருடா வருடம் புதுபொலிவோடு வெளிவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு சகலரையும் வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியும் பேருவகையுமடைகின்றேன்.

**வலயக் கல்விப்பணிப்பாளர்,**
வலயக்கல்வி அலுவலகம்,
**யாழ்ப்பாணம்.**

# மன்றப் பொறுப்பாசிரியர்களின்
# ஆசிச் செய்தி

2010 வணிக பிரிவு மாணவர்களினால் 10வது வருடாந்த சஞ்சிகையாக வர்த்தகி வெளியீடு செய்வதனையிட்டு மகிழ்வடைகின்றோம். வணிகமன்றமும் அதன் வெளியீடான வர்த்தகியும் மாணவர்களின் அறிவு மற்றும் ஆளுமை விருத்திக்கு களமாக அமைகின்றன.

தமக்குதேவையான வற்றை தாமே உற்பத்தி செய்து பூர்த்தி செய்து கொண்ட மனிதன் இன்று இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே இணையத்தின் ஊடாக தமது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்கிறான்.

இன்றைய வணிக செயற்பாடுகள் தகவல் தொழில் நுட்பத்துடன் பின்னிப் பிணைந்து வியாபித்து நிற்கின்றன. "The sky is the limit of Business" ஏன்நாளை இவ்வணிக செயற்பாடுகள் வேற்று கிரகங்கள் வரையும் கூட செல்லலாம் அந்தவகையில் வேகமாக வளர்ந்து வரும் இத்துறையை மாணவர்கள் தெரிவு செய்வது ஒரு சாதனை தான் எனவே மாணவர்கள் வணிகத்துறையில் பலம் (strength) பலவீனம் (weakness) சந்தர்ப்பம் (opportunity) சவால் (threat) இனங்கண்டு தமது துறையில் முன்னேற வேண்டும்.

இம்மாணவர்களின் ஆக்கத்திற்கும் ஊக்கத்திற்கும் காரணமாக அமைந்த பாடசாலை அதிபர், பிரதி அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இவ்விதழை அழகுற அச்சேற்றிதந்த அச்சகத்தினருக்கும் இதர உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

வாழ்க வளர்க வர்த்தகி

**செல்வி. த.புண்ணியமூர்த்தி**
**திருமதி. கி.சிவமோகன்**
**மன்றப்பொறுப்பாசிரியர்கள்**
**வணிக மன்றம்**
**யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

# தலைவரின் உள்ளத்திலிருந்து ...

இன்று வணிகத்துறையானது ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில் முதன்மை துறையாக உள்ளது. தகவல் தொழில் நுட்ப யுகம் என அழைக்கப்படும். தற்காலத்தில் வணிக மன்றங்களிலிருந்து வெளிவரும் இதழ்மூலம் சமூகம் இன்று விழிப்புணர்வை அடைகின்றது. இவ்வாறு மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் வர்த்தக உலகில் மாணவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து முன்னேற எமது "வர்த்தகி" சஞ்சிகை தன்னாலான பங்களிப்பை நல்குமென நம்புகிறேன்.

அதற்கிணங்க எமது யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வர்த்தக மாணவர் மன்றத்தின் 10வது வெளியீடாக வர்த்தகி வெளியிடப்படுகின்றது. எமது கல்லூரியின் வணிக மன்ற வளர்ச்சியின் வெளிப்பாடாக வர்த்தகி இம் முறையும் மலர்கின்றது. இவ் சஞ்சிகையானது மாணவர்களின் எழுத்தாற்றலையும் ஆளுமையை யும் வளர்த்தெடுப்பதாக அமைந்தது.

இச்சஞ்சிகையின் வெளியீட்டிற்கு எப்போதும் துணை நின்ற அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் வர்த்தகியானது தொடர்ந்து சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**செல்வி. க.நிவேதா**
**தலைவர்**
**வணிகமன்றம்**
**யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை**

# செயலாளரின் பேனாவிலிருந்து ...

பாடசாலை வரலாற்றில் தனக்கே உரித்தான பாரம்பரியம் கொண்ட எமது பாடசாலையின் வணிக மாணவர்களின் பெருமையினையும் திறமைகளையும் பல்வேறு ஆக்கங்களினூடாக எடுத்தியம்பும். "வர்த்தகி" எனும் சஞ்சிகையின் பத்தாவது இதழினை பல விசேட அம்சங்களுடன் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல்வேறு இன்னல்கள் பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் ஆசிரிய மாணவர்களின் அயராத முயற்சியினாலும் வணிகத்துறை சார்ந்த தகவல்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் இவ்விதழை வடிவமைத்து வெளியீடு செய்கின்றோம். உரியகாலத்தில் எவ்வித இடையூறுமின்றி எல்லோரும் போற்றும் வண்ணம் இம்மலர் வெளியீட்டிற்கு உதவிபுரிந்த பெரியோர்கள், ஆசிச்செய்தியினை தந்துதவிய எமது பாடசாலை அதிபர் அவர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதோடு பல்வேறு வழிகளிலும் இச்சஞ்சிகை வெளியீட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கிய பொறுப்பாசிரியர் வர்த்தக ஆசிரியர்கள் மாணவர்கள் நிதியுதவியளித்த அனைவரிற்கும் எமது மனமுவந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் வர்த்தக மாணவர் மன்றம் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வி. அ.றெஜினியா
செயலாளர்
வணிகமாணவர் மன்றம்
யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

# இதழ் ஆசிரியரின் இதயத்திலிருந்து ...

கலையோடு பண்பாடு அமைந்த யாழ்ப்பாணத்தில் மாணவர்களின் ஆற்றலை வளர்த்து வரும் தேசிய பாடசாலைகளில் ஒன்றான யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வணிக மாணவர்களின் ஆக்கங்களை தாங்கி வரும் எம் 10வது இதழ் வர்த்தகி இன்று உங்கள் கைகளில் தவழ்வதை இட்டு மகிழ்வடைகிறேன்.

மலராக இன்று மலர்ந்து வேம்படியாளின் புதல்விகளின் சுயதேடலினை வெளிப்படுத்தும் ஊடகமாக விளங்குகின்றது. வர்த்தகி இம்மலரினை வெளியிட அன்பான வழிகாட்டலைதந்த எமது மன்றத்தின் ஆசிரியர் அவர்களிற்கும் பல ஆக்கங்களுடன் இவ்விதழை வெளியிட உதவிய அனைத்து அன்புள்ளங்களிற்கும் நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.

எம்வர்த்தகி அனைவருக்கும் பயனுடையதாக அமையும் என்ற நம்பிக்கையில் எதிர்வரும் காலங்களில் மேலும் மேலும் வளர்ச்சி பெற உங்கள் ஆதரவை அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

"சரியான விமர்சனங்களை முன்வைத்து தவறுகளை திருத்தி மாணவர்களின் ஆக்கங்கள் மேலும் வளர ஊக்கமளியுங்கள்"


செல்வி. றே.க.கபிரியேலா செபஸ்ரினி

செல்வி. கி.அர்த்திக்கா

இதழாசிரியர்,

வணிகமாணவர் மன்றம்

யாழ். வேம்படி உயர்தர பாடசாலை

# G.C.E. A/L University Entrance - 2008

| | *Name* | *Result* | *Rank* |
|---|---|---|---|
| 01. | Panathy Kandasamy | 3 A | 14 |
| 02. | Aichchutha Thirugnanasampantham | 3 A | 26 |
| 03. | Menuka Rajendram | 3 A | 34 |
| 04. | Raji Kulothungan | 2 A B | 35 |
| 05. | Desika Thankaioja | A 2 B | 36 |
| 06. | Malarmathy Jayaratham | 2 A B | 38 |
| 07. | Josika satkunanathan | 2 A B | 40 |
| 08. | Nirogini Balakrisnasarma | 2 A B | 57 |
| 09. | Pavithira Gobala Kirushnan | A 2 B | 66 |
| 10. | Suganiga sotchithananthasivam | A B C | 87 |
| 11. | suthaisana sabaratnam | A B C | 107 |

# G.C.E. A/L University Entrance - 2009

| | *Name* | *Result* | *Rank* |
|---|---|---|---|
| 01. | Siyama Pathumanithy | 3 A | 01 |
| 02. | Icewarya Chandran | 3 A | 02 |
| 03. | Niruja Rajagulanajagam | 3 A | 20 |
| 04. | Nishalini Sivathasan | 2 AB | 37 |
| 05. | Jalatharani Rajaratham | 2 AB | 40 |
| 06. | Irene julita Joseph | A 2 B | 55 |
| 07. | Vinthuja Murugesampillai | A 2 B | 66 |
| 08. | Kajanthy Shanmuganathan | 2 AB | 68 |
| 09. | Sureka Sivapatha suntharam | A 2 B | 73 |
| 10. | Jasintha Balasubramoniyam | A 2 B | 100 |
| 11. | Anitina Boniface | A 2 B | 114 |

# 2010 வணிக மாணவர் மன்ற செயற்குழு

| | | |
|---|---|---|
| **காப்பாளர்** | : | திருமதி. க. பொன்னம்பலம் |
| **மன்றப்பொறுப்பாசிரியர்** | : | செல்வி. த. புண்ணியமூர்த்தி<br>திருமதி. கி. சிவமோகன் |
| **தலைவர்** | : | செல்வி. க. நிவேதா |
| **உபதலைவர்** | : | செல்வி. ம. லக்ஸ்ரெலா |
| **செயலாளர்** | : | செல்வி. அ. றெஜினியா |
| **உபசெயலாளர்** | : | செல்வி. அ. கஜாந்தினி |
| **பொருளாளர்** | : | செல்வி. அ. அனுசியா |
| **உபபொருளாளர்** | : | செல்வி. அ. ஜான்சியா |
| **இதழாசிரியர்** | : | செல்வி. றே. க. கபிரியேலா செபஸ்ரினி<br>செல்வி. கி. அர்த்திக்கா |
| **விளம்பரதாரர்** | : | செல்வி. ப. அபிலாஜினி<br>செல்வி. மு. ஸ்ரீரங்கனி<br>செல்வி. ரா. நிஷாதனா<br>செல்வி. ஜெ. பிரியா<br>செல்வி. சு. துஷாந்தினி<br>செல்வி. சி. வைஷிகா<br>செல்வி. கி. டயர்ணி<br>செல்வி. ஜெ. ரூபினி<br>செல்வி. சி. ராமதரணி<br>செல்வி. ஜெ. சிந்துஜா<br>செல்வி. ப. நிரோஷியா |

# வணிக மாணவர் ஒன்றியம்




இருப்பவர்கள் – இடமிருந்து வலம்

செல்வி த. புண்ணியமூர்த்தி (மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி ரா. முத்துக்குமாரசுவாமி (பிரதி அதிபர்), செல்வி க. நிவேதா (தலைவர்), திருமதி க. பொன்னம்பலம் (அதிபர்), செல்வி க. றெஜினியா (செயலாளர்)

நிற்பவர்கள் – இடமிருந்து வலம்

செல்வி அ. கஜாந்தினி (உப செயலாளர்), செல்வி றே. க. கபிரியேலாசெபஸ்ரினி (இதழ் ஆசிரியர்), செல்வி அ. அனுசியா (பொருளாளர்), செல்வி கி. அர்த்திக்கா (உப இதழ் ஆசிரியர்), செல்வி ம. லக்ஸ்ரெலா (உப தலைவர்), செல்வி அ. ஜான்சியா (உப பொருளாளர்).

## 2010 வர்த்தக மாணவர்கள்



# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| வர்த்தகிக்கு ஓர் வர்த்தகக்கவி | 01 |
| கணக்கீட்டு எண்ணக்கருக்கள் | 02-06 |
| உற்பத்தி தரத்தைப் பரிசோதிப்பதற்கு பயன்படுத்தும் நுட்பமுறைகள் | 07-08 |
| பத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளில் இலங்கையின் நிலை | 09-11 |
| பெறுமதி சேர்வரி | 12-14 |
| அங்கீகார வணிகம் | 15-16 |
| பொருளாதார பின்னடைவு பற்றிய கண்ணோட்டம் | 17-19 |
| நன்மதிப்பு | 20-33 |
| இணையமும் பிரதேசவளர்ச்சியில் அதன் பங்களிப்பும் | 34-35 |
| இலங்கைக்கான ஒரு சுபீட்ச சுட்டெண் | 36-37 |
| இலங்கை ணக்கீட்டு நியமம் – 29 – வருமானம் | 38-40 |
| வெளிநாட்டு வர்த்தகம் | 41-45 |
| SME Bank (தேசிய தொழில் முயற்சி வங்கி) | 46-47 |
| எல்லைக்கிரயவியல் | 48-51 |
| உள்நாட்டு கடன்கருவிகள் | 52-54 |
| பொருளாதார சிக்கனமும், பொருளாதார சிக்கனமின்மையும் | 55-58 |
| நிதிக்கணக்கியல் எண்ணக்கருவுடனான வரைவு | 59-60 |
| இருப்புக்கட்டுப்பாட்டு முறைகள் | 61-65 |
| உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பும் அதனால் உருவாகியுள்ள தாக்கமும் | 66-68 |
| சந்தைப்படுத்தல் எண்ணக்கரு | 69-73 |
| உலக உணவு நெருக்கடி | 74-75 |
| The place of English In the Modern World | 76-77 |
| முகாமைத்துவ வளர்ச்சியில் திட்டமிடுதல், கட்டுப்படுத்தலின் கண்ணோட்டம் | 78-80 |
| இன்ரெல் நிறுவனம் கண்டு பிடித்த Micro Processor | 81-82 |
| தலைமைத்துவம் | 83-85 |
| இணைய உலக வரலாறு | 86-88 |
| பல்தேர்வு வினாக்கள் | 89-94 |

# வர்த்தகிக்கு ஓர் வர்த்தகக் கவி

*Mary Ajitha Amirtharasa*
2010 (*Com*)

ஆதி நாளில் ஆடையின்றி
அலைந்து திரிந்தேன்
ஆட்டுத் தோலுக்காக வென்றி
ஆயுதம் ஏந்தினேன்

பண்டம் கொடுத்து பண்டம் வாங்கி
பசியை போக்கினேன்
பணம் நிறைய பண்டமாற்று
பாதை மாறி போகக் கண்டேன்

சுயமான வாழ்வையெண்ணி
சுண்டக்காய் நட்டு வைத்தேன்
சுயதேவைப் பொருளாதார
சுகத்தினை உணர்ந்து கொண்டேன்

மிஞ்சிய இஞ்சியை
விற்றிட விருப்பம் கொண்டேன்
சந்தைப் பொருளாதார
நலன்களை அறிந்து கொண்டேன்

இஞ்சி தந்த இலாபத்தை
வங்கியிலே வைப்பிலிட்டேன்
வளர்ந்திட்ட செல்வத்தினால்
வாழ்க்கைத் துணையும் தேடிக் கொண்டேன்

நீரிறைத்தும் மண்வெட்டியும்
நான் களைத்த வேளையிலே
மாற்று வழி எது என
வங்கியிடம் கேட்டேன்

Credit card, Visa card
Master card என
அட்டைகள் பணத்தை
அள்ளியே தந்தன

ரைக்டர் ஒன்றும், நீர் இறைக்கும்
இயந்திரம் இரண்டும் வாங்கினேன்
கைத்தொழில் புரட்சியை
கண்ணார அனுபவித்தேன்

கருமங்கள் விரைந்திட
கணனியையும் நாடினேன்
கடல்கடந்து லண்டன் ஈறாய் - என்
வணிகம் செழிக்க கண்டேன்

# கணக்கீட்டு எண்ணக் கருக்கள்
# (Accounting Concepts)

Abilagini Paramasivam
2010 (Com)

**அறிமுகம்:**

நிறுவனம் பற்றிய தகவல்களை நிறுவனத்தில் அக்கறை கொண்டுள்ள தரப்பினர்களுக்கு பொருத்தமான வழியில் வழங்குவதற்கான தொடர்பாடல் ஊடகமாகக் கணக்கீட்டுத் தொழிற்பாட்டின் விளைவுகள் அமைகின்றன. அவ்வகையில் கணக்கீட்டுத் தொழிற்பாட்டின் விளைவுகள் (நிதியறிக்கைகள்) அனைவராலும் விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும் ஒப்பீட்டுத் தன்மை உடையதாகவும் அமைய வேண்டியது அவசியமாகும். இத்தகைய பண்புகளை நிதியறிக்கைகள் கொண்டிருப்பதற்கு அவற்றைத் தயாரிக்கும் போது சில அடிப்படைகள் கைக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அவ்வகையில் நிதியறிக்கைகள் தயாரிக்கப்படும் போது அனைவராலும் பின்பற்றப்படல் வேண்டும். என எதிர்பார்க்கப்படும் நடைமுறைகளே அல்லது அடிப்படைகளே கணக்கீட்டு முதன்மைகள் என்பர்.

கணக்கீட்டு முதன்மைகளை மூன்றாகப் பாகுபடுத்தி நோக்கப்படுகிறது.

1. கணக்கீட்டு எண்ணக்கருக்கள்
2. கணக்கீட்டு மரபுகள்
3. கணக்கீட்டு விதிகள்

நிறுவனங்களின் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது அனைவராலும் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்க்கப்படும் பொதுவான எடுகோள்கள், விதிமுறைகள், மரபுகள் என்பன கணக்கீட்டு எண்ணக்கருக்கள் என வரையறுத்துக் கொள்ளலாம்.

**கணக்கீட்டு எண்ணக்கருக்களின் அவசியம்**

1. கணக்கீட்டுத் தகவல்களில் அக்கறையுடையோருக்கு தகவல்களை வழங்கல்
2. நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு உதவுதல்
3. நம்பகத் தன்மையுடையதாக அமைதல்
4. ஒத்த நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள் ஒரே முறையாக தயாரித்தல்

**முக்கிய கணக்கீட்டு எண்ணக்கருக்கள்**

1. வியாபார அலகுகள் எண்ணக்கரு
2. பண அளவு எண்ணக்கரு
3. தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு
4. கால எண்ணக்கரு
5. இரட்டை விளைவு எண்ணக்கரு
6. இணைத்தல் எண்ணக்கரு
7. அட்டுறு எண்ணக்கரு
8. வரலாற்றுக் கிரய எண்ணக்கரு
9. தேறல் எண்ணக்கரு
10. பாதுகாப்பு எண்ணக்கரு
11. பொருண்மை எண்ணக்கரு
12. கொள்கை மாறா எண்ணக்கரு

**வியாபார அலகுகள் எண்ணக்கரு** (Business Entity concept) **(தொழில் முழுமை எண்ணக்கரு / தொழில் முழுமைக்கூற்று எண்ணக்கரு /உளதாந்தன்மை எண்ணக்கரு)**

இவ் எண்ணக்கருவிற்கமைய நிறுவனமானது அதன் உரிமையாளரிடமிருந்து வேறுபட்ட தனியான ஒரு அலகாகக் கருதப்படுகிறது. அதாவது நிறுவனம் வேறு உரிமையாளர் வேறு என்பதாகும்.

இவ் எண்ணக்கருவினால் தோற்றம் பெறும் கணக்குகளாவன

1. மூலதனக் கணக்கு
2. பற்றுக்கணக்கு
3. நடைமுறைக்கணக்கு

**பண அளவு எண்ணக்கரு**
(Money measurement Concept)

பணத்தினால் அளவிடக்கூடிய தகவல்களை மட்டுமே கணக்குப் பதிவிற்கு உட்படுத்தப்படல் வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

இங்கு பின்வருவன எடுகோளாக கொள்ளப் படுகின்றன

1. பணத்தின் பெறுமதி மாறாது
2. பணத்தால் யாவற்றையும் அளவிட முடியும்

இவ் எண்ணக்கருவின் குறைபாடுகளாவன

1. பணத்தினால் அளவிடமுடியாத விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.
   Eg:- முகாமையாளர் திறன், ஊழியர் திறன்
2. பணவீக்கம் பெறுமதி மாற்றங்கள் கணக் கீட்டில் புறக்கணிக்கப்படுதல்

**தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு** (Going Concern Concept) **(செயற்படு அமைப்பு எண்ணக்கரு)**

நிச்சயமற்ற நிகழ்வுகள் எவையும் எதிர் காலத்தில் நிகழாது என்ற எடுகோளின் அடிப்படை யில் வரையறையற்ற காலத்தில் ஒரு நிறுவனம் தொடர்ந்து செயற்படுமென கருதி கணக்கீடுகள் பேணப்பட வேண்டுமென இவ் எண்ணக்கரு விளக்குகின்றது.

இதற்கமையவே நிதிக்கூற்றுக்கள் இலாப நட்டக்கணக்கு ஐந்தொகை என வெவ்வேறாக தயாரிக்கப்படுகிறது.

தொழிற் முயற்சியானது தொடர்ந்தும் பல ஆண்டுகளுக்கு இயங்கிச்செல்லும் எனக் கருத வில்லையாயின் சொத்துக்களும் பொறுப்புக் களும் நடைமுறைப் பெறுமதியில் (Current of Exit value) பதிவு செய்ய வேண்டி ஏற்படும்.

**கால எண்ணக்கரு** (Period Concept) **(ஆவர்த்தன எண்ணக்கரு)**

ஒரு நிறுவனத்தின் ஆயள் வரையறை யற்றுத் தொடர்ந்து செல்வதால் அது கலைக்கப் படும் வரை காத்திருந்து பெறுபேற்றை கணிப்பது சாத்தியமற்றது. எனவே நிறுவனத்தின் ஆயுளை சிறு காலப்பகுதிகளாக பிரித்து அக்காலப்பகுதி களுக்கேற்ப பெறுபேறுகளை கணிப்பிட வேண்டு மென இவ்எண்ணக்கரு கூறுகின்றது. இதற்கு பெரும்பாலும் 12 மாதங்கள் பின்பற்றப்படுகிறது.

**இரட்டை விளைவு எண்ணக்கரு** (Dual Aspect Concept)

ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் இரு விளைவுகள் உண்டு. அவ் விளைவுகளை ஒரு கணக்கிலோ அல்லது கணக்குகளிலோ வரவு செலவு என பதிவு செய்தலை இவ் எண்ணக்கரு விளக்குகின்றது.

**இணைத்தல் எண்ணக்கரு** (Matching Concept) **(வருமானங்களை செலவுடன் ஒப்பிடுதல் / பொருந்தச் செய்தல் / இயைபு)**

குறித்த காலப்பகுதி யொன்றின் இலாபம் அல்லது நட்டத்தை அறி அக்காலப்பகுதிக்குள் அடையப்பட்ட வருமானங்கள். அவ் வருமான த்தை உழைக்க ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை ஒப்பிடல் வேண்டுமென இவ் எண்ணக்கரு விளக்கு கின்றது.

இங்கு பின்வரும் இரு விடயங்கள் நிச்சயிக் கப்படல் வேண்டும்.

1. குறித்த காலப்பகுதிக்கான வருமானத்தை நிச்சயித்துக் கொள்ளல்.
2. அவ் வருமானங்களை உழைப்பதற்கான செலவீனங்களை நிச்சயித்துக் கொள்ளல்

**அட்டுறு எண்ணக்கரு** (Accrual Concept) **(சேர்வுறு எண்ணக்கரு)**

குறித்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக் களை தயாரிக்கும் போது காசாகப் பெற்ற வரு

மானங்களையும் காசாகக் கொடுத்த செலவீனங் களையும் கருத்தில் கொள்ளாது முழுச் செலவு களையும் முழு வருமானத்தையும் கருத்தில் கொள்ள வேண்டுமென இவ் எண்ணக்கரு விளக்குகின்றது.

இவ் எண்ணக் கருவிற்கமைய தோன்றும் கணக்குகள்

1) சென்மதிச் செலவுக் கணக்கு
2) முற்பணச் செவுக் கணக்கு
3) வருமதி வருமானக் கணக்கு
4) முற்பண வருமானக் கணக்கு

**வரலாற்றுக் கிரய எண்ணக்கரு** (Historical Cost Concept)

நிலையான சொத்துக்களானது அதன் கொள்விலையிலேயே (கிரயம்) நிதியறிக்கையில் விளக்குகின்றது. அதாவது விலைமட்ட வேறுபாடு கள் கணக்குப் பதிவுக்கு உட்படாது.

**தேறல் எண்ணக்கரு** (Realization Concept) **கைத்தேறிய எண்ணக்கரு**

நிச்சயமாகக் கிடைக்கக் கூடிய வருமானங் கள் அவை பெறப்பட முன்னரே வருமானமாகக் காட்ட முடியும் என இவ் எண்ணக்கரு விளக்கு கிறது. இதற்கமைய கடன் விற்பனைகள் விற் பனையாகக் காட்ட முடியும் ஆனால் விற்பனை இன்றேல் திருப்புக என்ற முறை விற்பனையாக கருத முடியாது

**பாதுகாப்பு எண்ணக்கரு** (Prudence Concept) **(முன்னெச்சரிக்கை / நுண்மதி / புத்தி சாதுரிய / கூர்ந்தமதி / கவன எண்ணகரு)**

நிறுவனத்தின் இலாபமும், நிதிநிலமையும் உண்மை நிலையைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும். இதனால் போலி நிலை தவிர்க்கப்படுவ தோடு எதிர்காலத்தில் எழக்கூடும் என எதிர்பார்க் கப்படும் நட்டங்களுக்கும் பாதுகாப்பு ஏற்படுகிறது என இவ் எண்ணக்கரு விளக்குகின்றது. இவ் அடிப் படையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

1) ஐயக்கடன் ஏற்பாடு
2) பெறுமானத் தேய்வுக்கு ஏற்பாடு செய்தல்
3) இருப்பின் கிரயத்தை விட தேறக்கூடிய நிகரப் பெறுமதி குறைவாகக் காணப்படும் போது குறைவான தொகையை கணக்கில் எடுத்தல்.

**பொருண்மை எண்ணக்கரு** (Materiality Concept) **(முக்கியத்துவ எண்ணக்கரு)**

கணக்கீட்டில் உள்ளீடுகளைப் பதிவு செய்வ தற்கு முன்னர் அவ் உள்ளீடுகளால் நிறுவனத்தின் கணக்கியல் தகவல்களில் ஏற்படக் கூடிய செல் வாக்குகளின் முக்கியத்துவம் எத்தகையது என்பது கவனத்தில் கொள்ளப்படல் வேண்டுமென இவ் எண்ணக்கரு விளக்குகின்றது.

**கொள்கை மாறா எண்ணக்கரு** (consistency Concept) **(மாறாநிலை / பழமை பேணல் எண்ணக்கரு)**

ஒரு நிறுவனத்தின் கணக்கீடு தொடர்பாக பின்பற்றி வந்த கணக்கியல் கொள்கைகள் விசேட காரணங்களேதுமின்றி மாற்றப்படாது தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென்பதை இவ் எண்ணக் கரு விளக்குகின்றது.

இவ் எண்ணக்கருவின் முக்கியத்துவம்

1) வேறுபட்ட காலப்பகுதி கணக்கறிக்கைகளை ஒப்பிட முடிதல்
2) உண்மையானதும் முழுமையானதுமான தகவல்களை பெற முடிதல்
3) காலதாமதமின்றி கணக்கறிக்கைகளை தயாரிக்க முடிதல்

## கணக்கீட்டு எண்ணக் கருக்களும் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் பிரயோகங்களும்

கால எண்ணக்கரு

**சசிகலா வியாபார நிறுவனத்தின்**

**31.12.2009ல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக்கணக்கு**

பணஅளவு எண்ணக்கரு

| *விபரம்* | *தொகை (ரூபா)* | *தொகை (ரூபா)* | *விபரம்* | | *தொகை (ரூபா)* | *தொகை (ரூபா)* |
|---|---|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | | XXX | விற்பனை | காசு | XXXX | |
| கொள்வனவு | | XX | விற்பனை | கடன் | XXX | XXXX |
| விற்கதயாரான இருப்பு | | XXX | | | | |
| இறுதி இருப்பு | | (XX) | | | | |
| விற்பனைக் கிரயம் | | XXX | | | | |
| மொத்த இலாபம் | | XXX | | | | |
| | | XXXX | | | | XXXX |
| | | | மொத்த இலாபம் | | | XXX |
| **நிலைய நிர்வாக செலவுகள்** | | | | | | |
| வாடகை | XX | | **ஏனைய வருமானம்** | | | |
| சம்பளம் | XX | | பெற்ற தரகு | | XX | |
| காப்புறுதி | XX | XXX | பெற்ற வட்டி | | XX | XX |
| **விற்பனை விநியோக செலவுகள்** | | | | | | |
| விளம்பரம் | XX | | | | | |
| பொதி செய் பொருள் | XX | | | | | |
| அறவிடமுடியாக்கடன் | XX | XXX | | | | |
| **நிதிச்செலவு, ஏனைய செலவு** | | | | | | |
| வங்கிக் கடன் வட்டி | XX | | | | | |
| வங்கிக் கட்டணம் | XX | | | | | |
| தீயழிவு நட்டம் | XX | XXX | | | | |
| தேறிய இலாபம் | | XXX | | | | |
| | | XXXX | | | | XXXX |

தேறல் எண்ணக்கரு

இணைத்தல் எண்ணக்கரு

## சசிகலா வியாபார நிறுவனத்தின்
## 31.12.2009ல் உள்ளவாறான ஐந்தொகை

| பொறுப்பு | தொகை | தொகை |
|---|---|---|
| **உரிமையாண்மை** | | |
| மூலதனம் | | XXXX |
| தேறிய இலாபம் | XXX | |
| பற்று | (XX) | XXX |
| | | XXXX |
| **நடைமுறையல்லா பொறுப்பு** | | |
| வங்கிக்கடன் | XXX | |
| ஈட்டுக்கடன் | XXX | XXX |
| **நடைமுறைப் பொறுப்பு** | | |
| கடன் கொடுத்தோர் | XX | |
| முற்பணவருமானம் | XX | |
| சென்மதி செலவுகள் | XX | |
| வங்கி மேலதிகபற்று | XX | XXX |
| | | XXXX |

| சொத்து | கிரயம் | திரள் பெறுமான தேய்வு | தேறிய மீதி |
|---|---|---|---|
| **நடைமுறையில்லா சொத்து** | | | |
| காணி கட்டிடம் | XXXX | XX | XXXX |
| மோட்டார் | XXX | XX | XXX |
| தளபாடம் | XXX | X | XXX |
| | XXXX | XX | XXXX |
| முதலீடு | | | XXX |
| நன்மதிப்பு | | | XXX |
| **நடைமுறைச் சொத்து** | | | |
| இருப்பு (குறிப்பு 2) | | XXX | |
| கடன்பட்டோர் | XX | | |
| ஐயக்கடன் ஏற்பாடு | (X) | XX | |
| வருமதி வருமானம் | | XX | |
| முற்பண செலவு | | XX | |
| வங்கி | | XX | |
| காசு | | XX | |
| | | | XXXX |

தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

வரலாற்றுக்கிரய எண்ணக்கரு

அலகுசார் எண்ணக்கரு

பாதுகாப்பு எண்ணக்கரு

அட்டுறு எண்ணக்கரு

**குறிப்பு 01:–** இறுதியிருப்பாக தேறத்தக்க நிகரப்பெறுமதியானது காட்டப்பட்டுள்ளது

வெளிப்படுத்தல் எண்ணக்கரு

**உசாத்துணைகள் :**

கணக்கீட்டு நியமங்களும் எண்ணக்கருக்களும் R. சுகிர்தன்

நிதிக் கணக்கீட்டுக்கோர் அறிமுகம் K. கலைச்செல்வன்

# உற்பத்தி தரத்தைப் பரிசோதிப்பதற்கு பயன்படுத்தும் நுட்ப முறைகள்

Lokana Tharmarajah
2010 (Com)

தரம் எனப்படுவது உற்பத்தி நுகர்வு வர்த்தகம் மட்டுமன்றி பொருளாதாரத்திலும் உச்ச செயற் திறனை பெறுவதற்கான விஞ்ஞானம் தொழில் நுட்ப, அனுபவம் என்பன விளைவுகளை சுருக்கி எல்லா துறையினுடைய ஒத்துழைப்புடன் தயார் செய்யப்படும் சர்வதேச தேசிய வலைய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் தொழில் நுட்பத்தின் சான்று மத அறிக்கை தரம் எனப்படும்

தரத்தினைப் பரிசோதிப்பதற்கு பல்வேறுபட்ட நுட்ப முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1) தரக்கட்டுப்பாடு
2) தரப்பாதுகாப்பு
3) தரவட்டம்/தரச்சுற்று
4) மொத்த தர முகாமைத்துவம்
5) கெய்சன் (Kaizan)
6) கென்பான் (Kanban)

**தரக்கட்டுப்பாடு**

உற்பத்திச் செயற்பாட்டில் வெவ்வேறு உற் பத்தி கட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள் கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். தரக்கட்டுப் பாட்டில் முதலாவது கட்டம் வழங்குனரிடமிருந்து கிடைக்கும் மூலப் பொருட்களையும் கருவிகளை யும் பெறும் சந்தர்ப்பத்தில் பரிசீலனைக்கு உட் படுத்துதலாகும். அவை JIT முறைக்கு வழங்கப் படுமானால் மூலப் பொருள்களையும் கருவிகளை யும் ஒப்படைக்கும் சந்தர்ப்பத்தில் பரிசோதித்து குறைபாடுகள் இல்லையென உறுதி செய்தல் வேண்டும். அடுத்த நடவடிக்கை நடைமுறை வேலைகளைப் பரிசோதித்தல் ஆகும். இதில் நடைபெற்று வரும் கொருள்களில் மாதிரிகளை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பரிசோதனைக்கு உட்படுத்துதல் வேண்டும். இறுதி வேலை முற்றுப் பெற்ற பண்டங்களை பரிசோதனைக்கு உட்படுத்து தலாகும். குறைபாடுடைய பொருட்கள் இருப்பின் இக்கட்டத்தில் அப்பொருட்கள் அகற்றப்படும்.

உற்பத்தி நிறுவனம் உருவாக்கிக் கொண்ட தரத்திற்கு அமைவாக உற்பத்தி நடைபெறுகிறதா. இழிவுச்சட்டத் தேவைக்கு அமைய உற்பத்தி நடை பெறுகிறதா? என்பதை உறுதி செய்யும் செயற் பாடு தரக்கட்டுப்பாடு என அழைக்கப்படும் ஆக்கத் தின் தரம் தரக்கட்டுப்பாட்டாளர்களால் உற்பத்தி வழியின் போது பரிசீலனைக்கு உட்படுத்தப்படும் அவர்கள் எல்லாப் பொருள்களையும் மாதிரி களைப் பரிசோதனைக்கு உட்படுத்துவார்கள். சில நிறுவனங்களில் கணியச் செயற்பாடுகளின் கட்டுப்பாடு தரக்கட்டுப்பாட்டுக்கு பதிலீடாகும். இங்கு இயந்திரங்களை இயக்குபவர்கள் இயந்திரச் செயற்பாட்டில் பிழையற்ற தன்மையை பரிசோ தனைக்குட்படுத்துவார்கள். சில நிறுவனங்கள் குழு வேலையூடாக தரக்கட்டுப்பாட்டை நடை முறைப்படுத்தும். இதில் குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் ஏனைய அங்கத்தவரின் கருமங் களின் தரத்தை பரிசோதனைக்கு உட்படுத்துவர். இச் செயற்பாடு குழு உறுப்பினர்களிடையே இடம்

பெறும். இப்பொழுது இக்குழுக் தரக்கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் முழுமையான தர முகாமைத்துவ எண்ணக்கரு என விருத்தி அடைந்துள்ளது. TQM இன் கீழ் குழுக்களில் எல்லா உறுப்பினர்களுக்கும் அவரவருடைய கருமங்களுக்கு சந்தர்ப்பமளிக் கப்படும். TQM முறை மிகவும் உயர் தரத்திலான பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்வதனை உறுதி செய்துள்ளது.

## தரப்பாதுகாப்பு

பொருட்களை உற்பத்தி செய்தலையும் உற் பத்தியின் பின்னுள்ள முழுமையான செயற்பாடு களையும் இதிலடக்க முடியும் பொருட்களை உற்பத்தி செய்யும் போது தரப் பரிசோதர்களின் கட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக ஊழியர்களால் அவர்களே தமது கருமங்களைப் பரிசீலனைக்கு உட்படுத்துதல் ஒரு தரப்பாதுகாப்பு நடைமுறை யாகும். இது ஊழியர்களால் சுயவிருப்பில் செய் யப்படும் கருமமாகும். யப்பானில் பெரும்பாலான தொழிற்சாலைகளில் ஊழியர்களால் இப் பொறுப்பு நிறைவேற்றப்படுவதைக் காணமுடியும் பொருள் உற்பத்தியின் பின்னர் வாடிக்கை யாளருக்கு விற்பனை செய்யும் போது அதன் தரம் பற்றி எழுத்தில் அளிக்கப்படும் சான்று மற்றொரு தரப்பாதுகாப்பு நடைமுறையாகும். இன்று பெரும் பாலான உற்பத்திகள் தொடர்பில் உற்பத்தியாளர் களால் வழங்கப்படும் உத்தரவாதச் சான்றுகள் இதற்கான நல்ல உதாரணமாகும். தரத்துக்கமை யாத குறைபாடுடையவற்றை உற்பத்தியாளர் களிடம் மீள ஒப்படைத்து புதிய பொருளைப் பெற்றுக் கொள்ள அல்லது செலுத்திய பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள அல்லது செலுத்திய பண சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. விற்பனைக்கு பின் சேவையும் மற்றொரு தரப்பாதுகாப்பு நடைமுறை யாகும். இதன்படி உற்பத்தியாளர் உத்தரவாதம் அளித்த காலத்திற்குள் பிழை ஏற்பட்டால் திருத்தம் செய்வதற்கான கிரயத்தைச் செலுத்த உடன்படுவர் அல்லது இலவசமாக திருத்தம் செய்து கொடுப்பர்.

## மொத்தர முகாமைத்துவம்

ஜப்பான் நாட்டின் அதிநவீன தரக்கட்டுப்பாட்டு முறைமை மொத்தர முகாமைத்துவம் ஆகும். இதற்கு எல்லாப் பகுதி ஊழியர்களின் ஒத்துழைப் பும் பெற்றுக்கொள்ளப்படும். ஊழியர்கள் எல்லாச் சந்தர்ப்பத்திலும் சரியானதையே செய்ய வேண் டும் எனும் தரக்கட்டுப்பாட்டு முறைமை இதுவாகும்.

இங்கு மூலப்பொருளை பெறுவதிலிருந்து முடிவுப் பொருளை சந்தைப்படுத்துவது வரை அனைத்து சந்தரப்பங்களிலும் உற்பத்தியின் தரம் உறுதிப்படுத்தப்படும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலா வது பொருள் தரம் அற்று காணப்பட்டால் அந்த இடத்தில் அப்பொருள் தடுத்து நிறுத்தப்படும் அதா வது அப்பொருள் சந்தைக்குள் நுழைவது தடுக்கப் படும்.

## தரக்கட்டுப்பாட்டு வட்டம்

ஜப்பானில் ஆரம்பிக்கப்பட்ட தரக்கட்டுப்பாட்டு வட்டம் இன்று பொது விருப்பும் பெற்றுள்ளது. ஒரே கருமங்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் சிறுகுழுக் களாக ஒன்று சேர்ந்து உரையாடல் மூலம் அவர் கள் எதிர்நோக்கும் பிரச்சனையை இனங்கண்டு அதற்கான தீர்வை முன்வைத்தல் இத்தரவட்ட முறையில் நிகழ்த்தப்படுகிறது.

## References:-

ஜெகத் பண்டார நாயக்கா

# புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளில் இலங்கையின் நிலை

Sinthujah Jeyabalasarma
2010 (Com)

அறிமுகம்:-

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் உதவியுடன் வரி முன்னெடுப்புக்களை நிதி திட்டமிடல் அமைச்சு கண்காணித்து வருகின்றது.

இதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டாகின்ற போது உலகின் அனைத்து நாடுகளாலும் நிறைவேற்றப்பட வேண்டிய எட்டு இலக்குகள் தொடர்பில் இவர்கள் இணைக்கப்பாட்டிற்கு வந்தனர். இவற்றிற்கு புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் என பெயரிட்டன.

கடும் வறுமையையும் பட்டினியையும் ஒழிக்கின்ற தேவை இந்த அனைத்து இலக்குகளூடாகவும் செல்கின்ற பிரதானமான விடயமாக உள்ளது. இதனை நிறைவேற்றுவதற்கு எட்டு இலக்குகளில் முதல் ஏழு இலக்குகளையும் வறிய நாடுகள் நிறைவேற்றுதல் வேண்டும். எட்டாவது இலக்கின் மூலம் அபிவிருத்தியடைந்த நாடுகள் உதவிகளையும் கடன் சலுகைகளையும் மிகவும் நியாயமான வர்த்தக நிபந்தனைகளையும் தேவைப்படுகின்ற நாடுகளுக்கு வழங்குவதன் மூலம் மேற்படி பிரதானமான விடயத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்பது சுட்டிக் காட்டப்படுகின்றது. இலங்கை உள்ளிட்ட 191 நாடுகள் மேற்படி புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான செயற்பாட்டின் தரப்பினர்களாக ஆவதற்கு இணக்கம் தெரிவித்தன. இவ் இலக்குகளில் உள்ளடங்கியுள்ள பெரும்பாலான குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்கின்ற போது இலங்கை சரியான பாதையில் தொடர்ந்தும் முன்னேறிச் சென்றுள்ளது என்பதை அறிய முடிகின்றது. எவ்வாறாயினும் 1, 6 மற்றும் 7 ஆவது இலக்குகளின் குறிக்கோள்களை நிறைவேற்றி கொள்ளும் பொருட்டு இலங்கை அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

இன்றைய சூழலமைவினுள் முதலாவது இலக்கான ”கடும் வறுமையையும் பட்டினியையும் இல்லாதொழித்தலை” நிறைவேற்றிக் கொள்வதற்கு இலங்கை தொடர்ந்தும் அதிக கவனம் செலுத்துதல் அவசியமாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய முரண்பாடுகள் மற்றும் சுனாமியின் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர்களது எண்ணிக்கை அதிகரித்ததை தொடர்ந்து குறிப்பிடத்தக்க அளவு மக்கள் வாழ்வாதார வழிமுறைகளை இழந்தனர். இதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சனத்தொகையில் வறுமை விகிதாசாரம் அதிகரித்துள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் பொருளாதார சமூக நிலைமைகளை சீராக்குவதற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மறுசீரமைப்பு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வளிப்பு கருத்திட்டங்களை மேலும் எளிதாக்குவதற்கு முன்னுரிமையளித்தல் மிக முக்கியமானதாகும்.

போசாக்கின்மை பிரச்சனையை தீர்ப்பதற்கு பல்வேறான நலனோம்புகை மற்றும் நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் சமுர்த்தி திட்டத்தின் கீழுள்ள மேலதிக வருமான கருத்திட்டம் மற்றும் உலர் உணவு கூப்பன் கருத்திட்டம் அதேபோன்ற ஏனைய போசாக்கு நிகழ்ச்சி திட்டங்களான கர்ப் பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் போசாக் குப்பை, குழந்தைகளுக்கும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குமான பால்மா நிவா ரணம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு நிகழ்ச்சித் திட்டம் ஆகிய கருத்திட்டங் களை குறிப்பிடலாம். எவ்வாறாயினும் மாவட்டம் என்ற வகையில் கருதுகின்ற போது 5 வயதுக்கு குறைந்த நிறை குறைந்த பிள்ளைகளின் சதவீதம் அனைத்து மாவட்டங்களிலும் 15% த்தை தாண்டி யிருத்தலான இன்னமுமே நிலவுகின்றதும் அதேபோன்று கடும் முயற்சியுடன் தீர்வு காணப்பட வேண்டியதுமான ஒரு பிரச்சனையாக உள்ளது.

இலங்கை இரண்டாவது இலக்கான "அனை வருக்கும் ஆரம்பக் கல்வியை எய்தக்கூடிய நிலை யிலுள்ள ஒரு நாடாகும்."

இலங்கையில் கல்வி ஒரு அடிப்படை உரிமை யாக வலியுறுத்தப்படுகின்றமையே இம்முன் னேற்றத்தை எய்தப் பெறுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. இதன் விளைவாக எமது நாட்டில் பாடசாலை செல்கின்ற வயதிலுள்ள அனைத்து சிறுவர்களும் பாடசாலைக்கு செல்வ தற்கு ஊக்கமளிக்கின்ற கொள்கைகள் வகுக்கப் பட்டன. ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை ஆகிய அனைத்து மட்டங்களிலு மான இலவசக் கல்விக் கொள்கை மேற்படி முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்த முக்கிய மான காரணியாக உள்ளது. மேலும் இதனை வலியுறுத்தி 1997இல் பாராளுமன்ற சட்ட மொன்றின் மூலம் 5-14 வயதுக்கு இடையிலான சிறுவர்கள் பாடசாலை செல்லல் கட்டாயமாக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இலங்கை மூன்றாவது இலக்கான "பால் நிலை சமத்துவத்தினையும் மகளிர் வலுவூட்ட லையும் ஊக்குவித்தல்" தொடர்பிலும் குறிப் பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம கல்விக்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டமை கல்வியில் பால்நிலை சமத்துவத்தை அடைவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. மற்றும் இலங்கையில் பெண்கள் ஆண்களை போன்றே சிறந்த சமூக நிலையுடன் தொழில் நிலையங்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.

நான்காவது இலக்கான "சிறுவர் மரணத்தை குறைத்தல்" இலக்கினை அடைவதிலும் இலங்கை பிராந்தியத்தின் ஏனைய நாடுகளை விட முன்ன ணியில் உள்ளது. கர்ப்பிணிகள் மற்றும் குழந்தை கள் சுகாதார சிகிச்சை நிலையங்களின் தேவை களையும் சிறந்த பயிற்சி பெற்ற குடும்ப சுகாதார சமூக அபிவிருத்தி ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்தது. சிசு மரணத் தையும் 5 வயதிற்குட்பட்ட குழந்தை மரணங்களை யும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டன. பரந்தளவான மகப்பேற்று சேய் நலன்புரி சிகிச்சை நிலையங்களும் பயிற்றப்பட்ட பொது சுகாதார மகப்பேற்று தாதிகளையும் கொண்ட வலையமைப்பு காணப்படுகின்றது.

ஐந்தாவது இலக்கு "கர்ப்பிணிகள் சுக நலத்தை முன்னேற்றுதல்" ஆகும். 2003 ஆம் ஆண்டில் 100,000 பிறப்பிற்கு 19.7 ஆக கர்ப் பிணிகள் இறப்பு வீதம் அறிக்கையிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் அடையப்பெற வேண்டிய இலக்கு 100,000 பிறப்புக்கு கர்ப்பிணிகள் இறப்பு 10.6 ஆகும். பயிற்சி பெற்ற சுகாதார ஊழியர் களின் உதவியோடு நடைபெறுகின்ற மகப்பேறு களின் எண்ணிக்கை 98.5 சதவீதத்தை அடைந் துள்ளதோடு இதில் அடையப்பெற வேண்டிய இலக்கு 100% ஆகும்.

HIV / எயிட்ஸ், மலேரியா மற்றும் ஏனைய நோய்களை ஒழித்தல் ஆறாவது இலக்காகும். 15-49 வயதுக்கு உட்பட்ட பிரிவினர்களிடையே எயிட்ஸ் தொற்றுக்கு ஆளாகியுள்ள நோயாளிகள் 0.1 சதவீதத்திலேயே அறிக்கையிடப்பட்டுள்ளது. கடந்த சில வருடங்களினுள் அறிக்கையிடப்பட்ட எயிட்ஸ் தொற்றுக்கு ஆளாகிய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்ததை தொடர்ந்து HIV தடுப்பு நிகழ்ச்சிகளை நடாத்துவது அவசியம். வைத்தியசாலைகளில் நோயுற்றவர்களுக்கான வசதிகளை மேம்படுத்துதல், பாடசாலை மற்றும் கிராமிய மட்டங்களில் விழிப்புணர்வுகளை மேற் கொள்ள வேண்டும்.

ஏழாவது இலக்கு "சுற்றுச் சூழலின்" நிலை பேறான தன்மையை உறுதிசெய்தல்" தொடர்பில் மேலதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும். சுற்றாடல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை வீழ்ச்சியடைய செய்கின்ற செயற்பாடுகள் தொடர்பான விரைவான தலையீடு நடைபெறுதல் வேண்டும்.

எட்டாவது இலக்கு அபிவிருத்திக்காக "உலகப் பங்காளிகளை அபிவிருத்தி செய்தலாகும்." அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் சமூக பொருளாதார நிலைகளும் இவை அத்தகைய அதிர்வுகளினால் இயல்பாகவே பாதிக்கப்படக் கூடியனவாகவும் இருப்பதனால் உலக பொருளாதார நெருக்கடியினால் ஏற்படுத்தப்பட்ட வளங்களின் தடைகளை சீர்செய்வதற்கு உலக சமூகத்தின் கூட்டு முயற்சி அவசியமாகின்றது என்பதைப் பற்றி கூறுகின்றது.

உசாத்துணை நூல் :

குறிப்பேடு 2009 மே-ஜீன்

பக்கம் 3-8

# பெறுமதி சேர்வரி
# (Value Added Tax)

Tharmila Bavananthan
2010 *(Com)*

**பெறுமதி சேர்வரி (Value Added Tax) என்றால் என்ன?**

பொருட்கள் சேவைகளின் உற்பத்தி விநியோக நடவடிக்கையின் போது ஒவ்வொரு நிலையிலும் அவற்றில் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது விதிக்கப்படும் வரி பெறுமதி சேர்வரியாகும்.

**பெறுமதி சேர்வரியின் நன்மைகள்**

1) இரு தடவை வரிசேர்த்துக் கொள்வது தவிர்க்கப்படுகிறது.
2) இது நுகர்வோர் மீது சுமத்தப்படுவதால் உற்பத்தியாளர் நுகர்வோர் ஊக்குவிக்கப்படுவர்.
3) இவ்வரி தொடர்பான கணக்கு வைப்பு முறை இலகுவானது
4) இதில் மோசடிகள் மேற்கொள்வது கடினம்.

**பெறுமதி சேர் வரியின் தீமைகள்**

1) இவ்வரி தொடர்பான விளக்கம் குறைவாக காணப்படுகிறது
2) இவ்வரி தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்வது செலவு கூடியது ஒன்றாகக் காணப்படுகிறது.
3) இவ்வரி தொடர்பான விளக்கம் குறைவாக காணப்படுவதால் வழுக்கள் ஏற்படுவது அதிகமாக காணப்படுகிறது.
4) வேறுபட்ட பொருட்களுக்கு வேறுபட்ட வீதத்தில் வரி விதிப்பதால் இது கணிப்பிடுவதும் நடைமுறைப்படுத்துவதும் கடினமானதாகும்.

**பெறுமதி சேர் வரியின் தற்போதைய போக்கு**

- பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2008ம் ஆண்டில் 9 சதவீதம் கொண்ட குறைந்த வீதத்தால் அதிகரித்தது.
- இக்குறைந்த வளர்ச்சி அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய கைத்தொழில்களுக்கு அவற்றை ஊக்குவிப்பதற்காக பெறுமதி சேர் வரி விலக்களிப்புக்களை வழங்கல்.
- பெற்றோல் மீதான பெறுமதி சேர் வரியை குறைத்தல்.
- வாழ்க்கைச் செலவைக்கட்டுப்படுத்துவதற்கு விசேட பண்டத் தீர்வையின் கீழ்வரும் தெரிந்தெடுக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மீதான பெறுமதி சேர் வரியை நீக்கல்.
- குடிவகை மற்றும் சிகரெட் விற்பனைகளிலான வீழ்ச்சி, உந்து ஊர்திகள் இறக்குமதிகளிலான வீழ்ச்சி, அரச அலுவலர்களுக்கு உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான சலுகை ரீதியான தீர்வைத் திட்டத்தைத் தொடர்ந்தமை
- குறிப்பாக 2008ம் ஆண்டின் நான்காம் காலாண்டில் ஒப்பீட்டு ரீதியில் குறைவான இறக்குமதி விலைகள் மற்றும் இறக்குமதி அளவு என்பனவற்றின் தாக்கத்தால் ஏற்பட்டது.
- எனினும் வரிநிருவாகத்திலான மேம்பாடுகள், தொலைத் தொடர்பூட்டல் மற்றும் பெறுமதி சேர் வரி உள்ளீட்டு வரி வரவுகள் மீதான வரையறைகளுடன் இணைந்து நிதியியல் துறையி

லான உயர் செயலாற்றம் மேற்கூறப்பட்ட வழி முறைகள் காரணமாக பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது.

**பெறுமதி சேர்வரி (VAT) தொடர்பான இரட்டைப் பதிவு**

கொள்வனவிற்கு

கொள்வனவுக் கணக்கு வரவு
VAT கணக்கு வரவு
கடன் கொடுத்தோர் / காசுக்கணக்கு செலவு

விற்பனைக்கு

காசு / கடன்பட்டோர் கணக்கு வரவு
விற்பனைக் கணக்கு செலவு
VAT கணக்கு செலவு

உட்திரும்பலுக்கு

உட்திரும்பல் கணக்கு வரவு
VAT கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு

வெளித்திரும்பலுக்கு

கடன் கொடுத்தோர் கணக்கு வரவு
VAT கணக்கு செலவு
வெளித்திரும்பல்க்கணக்கு செலவு

அறவிடமுடியாக் கடனுக்கு

அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு
VAT கணக்கு வரவு
கடன்பட்டோர் கணக்கு செலவு

**பெறுமதி சேர் வரி கணிப்பீடு**

நிறுவனத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

**05.01.2009** அமலுக்கு விற்பனை ரூபா 50000 (தேறியது)

**10.01.2009** விமலுக்கு விற்பனை ரூபா 30000 (தேறியது)

**25.01.2009** கமலுக்கு விற்பனை ரூபா 20000 (தேறியது)

VAT 10% எனக்கொண்டு விற்பனை நாளேட்டைத்தயாரித்து பேரேட்டுக்கு மாற்றுக.

**விற்பனை நாளேடு**

| திகதி | கொள்வனவாளன் | தொகை | VAT | மொத்தம் |
|---|---|---|---|---|
| **05.01.2009** | அமல் | 50000 | 5000 | 55000 |
| **10.01.2009** | விமல் | 30000 | 3000 | 33000 |
| **25.01.2009** | கமல் | 20000 | 2000 | 22000 |
| | | | | 110000 |

**அமல் கணக்கு**

| | | |
|---|---|---|
| விற்பனை | 55000 | 55000 |

**கமல் கணக்கு**

| | | |
|---|---|---|
| விற்பனை | 22000 | 22000 |

### விமல் கணக்கு

| | |
|---|---|
| விற்பனை 33000 | 33000 |

### விற்பனைக்கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 1000000 | அமல் | 50000 |
| | | கமல் | 30000 |
| | | விமல் | 20000 |
| | 1000000 | | 100000 |

### VAT கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீ/செ | 10000 | அமல் | 5000 |
| | | விமல் | 3000 |
| | | கமல் | 2000 |
| | 10000 | | 10000 |

**உசாத்துணை நூல் :**

பா. முகுந்தன் VAT மத்திய வங்கி அறிக்கை 2008

# அங்கீகார வணிகம் (FRANCHISES)

Nivetha Kathirkamathampy
2010 (Com)

பூகோளமயமாக்கல் காரணமாக இன்று உலகமானது கிராமம் போன்று சுருங்கி வந்துள்ளது. அதற்கேற்ப வணிகத்திலும் பலமாற்றங்கள் நாளுக்கு நாள் வந்த வண்ணம் உள்ளன. இந்த வகையில் இன்று அங்கீகார வணிக முறை என்பது வணிகத்துறையில் காணப்படும் ஒரு விஷேடமான வணிக முறையாக உருவெடுத்து வளர்ச்சியடைந்து வருகின்றது.

அங்கீகார வணிகம் என்பது உற்பத்திப் பொருளொன்றுக்கு அல்லது சேவையொன்றுக்கு உரிமையாளராக காணப்படும் நிறுவனமொன்று தனது உற்பத்திப் பொருளை அல்லது சேவையைத் தனது வியாபாரப் பெயரிலேயே விற்பனை செய்வதற்கோ அல்லது உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கோ வேறோர் தனிப்பட்ட ஒருவருக்கு அல்லது நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கும் வணிக முறை ஆகும்.

**மிகவும் உலகப் பிரசித்தி பெற்ற வணிகமுறைக்கு உதாரணங்கள்**

Mc Donalds
Subway
Domino's pizza hut
Ups store
KFC போன்றவற்றை கூறலாம்.

இன்று பல்வேறு வித்தியாசமான துறைகளிலும் அங்கீகார வணிகங்கள் காணப்படுகின்றன. அதாவது இன்று உலகம் முழுவதும் 120க்கு மேற்பட்ட அங்கீகார வணிகங்கள் வித்தியாசமான துறைகளிலும் காணப்படுகின்றன. உதாரணமாக,

- துப்பரவாக்கலும் பராமரிப்பும்
- சுகாதாரமும் உடற்தகுதியும்
- நிதிச்சேவைகள் மற்றும் தன்னியக்க நடவடிக்கைகள் போன்றவற்றைக் கூறலாம்.

இவ் அங்கீகாரவணிகத்தின் வரலாறு பற்றி Don Doszkoswki கூறுகையில் சிங்கர் தையல் இயந்திரத்தை கண்டுபிடித்தவுடனேயே இதன் வரலாறு ஆரம்பமானதென கூறுகின்றார். அதாவது 1850 களிலே Isaac Singer என்பவர் தையல் இயந்திரத்தை கண்டுபிடித்தவுடன் அவ் இயந்திரத்தை தமது புவியியல் பிரதேசத்துக்கு அப்பால் விநியோகம் செய்ததுடன் விநியோகம் செய்வதற்கான பயிற்சிகளை வாடிக்கையாளர்களுக்கும் வழங்கினார்.

**அங்கீகார வணிகத்துடன் தொடர்புடையோர்**

1. அங்கீகாரம் வழங்குவோர்

அங்கீகாரம் பெறுபவர் யாரிடம் அங்கீகார வணிகத்தை கொள்வனவு செய்கின்றாரோ அவர் அங்கீகாரம் வழங்குபவர் ஆவார். அதாவது உற்பத்திப் பொருளொன்றுக்கு சேவையொன்றுக்கு உரிமையாளராக காணப்படும் நிறுவனம் அங்கீகாரம் வழங்குபவர் ஆவார்.

2. அங்கீகாரம் பெறுவோர்

யார் அங்கீகார வணிகத்தை கொள்வனவு செய்து நடத்துகின்றாரோ அவர் அங்கீகாரம் பெறுபவர் ஆவார்.

**அங்கிகார வணிக உடன்படிக்கை**

அங்கீகார வணிக உடன்படிக்கை என்பது அங்கீகாரம் வழங்குபவருக்கும் அங்கீகாரம் பெறுவோருக்கும் இடையே உடன்படிக்கை யொன்று உருவாக்கப்படும் குறித்த அங்கீகார வணிகம் தொடர்பாக இரு சாராரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பது பற்றி இதில் குறிப்பிடப் படும்.

அங்கீகார வணிகம் பிரசித்தியடைய மற்றொரு காரணம் யாதெனில் நதிவசதியற்ற வணிக முயற்சியாளர்களுக்கு கூடஅங்கீகாரம் வழங்குபவரால் நிதி வசதி வழங்கப்படுவதால் வணிக முயற்சிகளை நடாத்தி செல்ல முடிகிறது.

**தற்பொழுது அங்கீகார வணிகங்களை மூன்று வகைப் படுத்தலாம்.**

1. உற்பத்திப்பொருளுக்கான அங்கீகார வணிகம்

அங்கீகாரம் வழங்குபவரின் உற்பத்திகளை தெரிவுசெய்து வியாபார குறியுடன் மீளவிற்கும் உரிமை அளிக்கும் அங்கீகார வணிகம் ஆகும்.

2. உற்பத்தி அங்கீகார வணிகம்

அங்கீகார வழங்குபவரின் வியாபார பெயரின் கீழ் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் விநியோகம் செய்வதற்கும் அங்கீகாரம் வழங்குபவரால் வழங்கப்பம் உரிமை ஆகும்.

3. வியாபார முறை அங்கீகார வணிகம்

அங்கீகாரம் அளிப்பவருடைய பெயரிலும் அவரது வியாபாரத்தன்மை முறையிலும் வணிகம் நடாத்த அங்கீகாரம் பெற்றவருக்கு வழங்கும் உரிமை ஆகும்.

இன்றைய வணிகச்சூழலானது ஏதோ ஒரு வகையில் நாளாந்தம் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றது. அந்த வகையில் அங்கீகார வணிகமும் சர்வதேசரீதியில் பிரபல்யம் பெற்ற ஒன்றாக மாறி வருகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**

CIMA நிறுவனத்தால் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகை – அறிவுதேடல்

வணிக கல்வி – ஐகத் பண்டாரநாயக்கா

# பொருளாதாரப் பின்னடைவு பற்றிய கண்ணோட்டம்

Baskaran Kapiltan
Kaanchana
2010 (Com)

**அறிமுகம்:-**

பொருளாதாரப் பின்னடைவு (Recession) என்பதன் மூலம் தொழில்துறை வட்டமொன்றின் சுருங்கும் சந்தர்ப்பம் கருதப்படுகிறது. இது பொருளாதாரச் செயற்பாடுகள் குறைவடைகின்ற ஒரு காலப் பகுதியாகும். ஐக்கிய அமெரிக்காவில் தாபிக்கப்பட்டுள்ள பொருளாதார ஆராய்ச்சி நடவடிக்கைகள் பற்றிய தேசிய பணியகம் (National Bureau of Economic Research - NBER) இந் நிலைமையை விரிவாக விளங்குகின்ற வகையில் பொருளாதாரம் பூராவும் பரவியுள்ள பொதுவாக உண்மை மொத்தத் தேசிய உற்பத்தி உண்மை தனிநபர் வருமானம், தொழில் வாய்ப்புக்கள் (கமத்தொழில்துறை அல்லாத), கைத்தொழில் உற்பத்தி மற்றும் மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் ஆகிய துறைகளில் பல மாதங்களாக காணக்கூடியதாகவுள்ள செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்கதொரு பின்னடைவை பொருளாதாரப் பின்னடைவு எனக் கருதுவதாகக் கூறுகின்றது. நீண்டகாலம் நீடிக்கின்ற ஒரு பொருளாதாரப் பின்னடைவின் பெறுபேறாக பொருளாதார மந்த நிலை உருவாகின்றது.

மொத்தத் தேசிய உற்பத்தி தொடர்ந்து வருகின்ற இரண்டு காலாண்டுகளிலும் சுருங்குமெனில் (எதிர்க்கணிய வளர்ச்சி அறிக்கையிடப்படுமிடத்து) பொருளாதாரப் பின்னடைவு ஒன்று உருவாகியுள்ளது. என்பது அதன் மூலம் காட்டப்படுவதாக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும், இந்த எளிமையான வரைவிலக்கணத்தின் மூலம் அமெரிக்காவில் உருவாகிய அநேகமான பொருளாதாரப் பின்னடைவுகளை விளக்குவதற்கு முடியாது

**பொருளாதாரப் பின்னடைவின் பண்புகள்**

- பணச் சுருக்க (Deflation) நிலைமைகளைத் தழுவியதான ஒட்டுமொத்தக் கேள்வி வீழ்ச்சியடைதல்
- விலைமட்டம் அதிகரித்தல் அல்லது பணவீக்க (Inflation) நிலைமையுடன் இணைந்த பொருளாதார வளர்ச்சி முழுமையாகவே தேக்க நிலை அடைதல் (Stag flation) ஆகிய விடயங்களின் பெறுபேறுகளாக அமையலாம்.

**பொருளாதாரப் பின்னடைவும் பொருளாதார மந்தமும்**

மிகக் கடுமையான நீண்டகாலம் நீடிக்கின்ற தொடர்ச்சியானதொரு பொருளாதார பின்னடைவை பொருளாதார மந்த நிலையெனக் (Economic Depression) குறிப்பிடுகிறோம். எவ்வாறாயினும் பொருளாதாரப் பின்னடைவுக்கும் பொருளாதார மந்த நிலைக்கும் இடையிலான வித்தியாசத்தை விளக்குவதற்கான திட்டவட்டமானதொரு வரைவிலக்கணம் கிடையாது. மொத்தத் தேசிய உற்பத்தி ஒப்பீட்டளவில் 10 சதவீதத்தால் அல்ல அதைவிட அதிகளவில் வீழ்ச்சியடைதல் பொருளாதார மந்த நிலையாகும். என பொதுவாகக் கருதப்படுகின்றது. மிகக் கடுமையான

பொருளாதார மந்த நிலை அல்லது அதிபண வீக்கம் (Hyperinflation) ஆகிய நிலைமை களினால் ஏதேனுமொரு பொருளாதாரத்தில் உருவாகும் அழிவுகாரமானதொரு நிலைமைக்கு பொருளாதார வீழ்ச்சி (Economic Collapse) என வரைவிலக்கணம் அளிக்கப்படுகின்றது.

**பொருளாதார பின்னடைவின் அறிகுறிகள்**

❖ பங்குச் சந்தையில் நடைபெறுகின்ற குறிப்பிடத் தக்களவிலான வீழ்ச்சிகளை அந்நாட்டின் பொருளாதாரப் பின்னடைவுகள் தொடர்பான அறிகுறிகளாக பெரும்பாலானவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

Eg:- அமெரிக்க பங்குச் சந்தை

❖ திறைசேரிப் பிணையங்களில் இடப்படுகின்ற நீண்டகால முதலீடுகளை விட அதிக விளைவு குறுகிய கால முதலீடுகளின் ஊடாக கிடைத் தல் (கீழ்நோக்கிய விளைவு வளைகோடு உரு வாகுதல்)

❖ 3 மாதகால தொழிலின்மை மற்றும் தொழி லின்மையால் நடைபெறுகின்ற மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.

4. முதனிலை பொருளாதாரச் சுட்டெண்ணும் பொருளாதாரப் பின்னடைவுகளை அடை யாளம் காண்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

**பின்னடைவிலிருந்து பொருளாதாரத்தை விடு விக்கும் உபாய வழிமுறைகள்**

❖ பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கத்தினால் பற்றாக்குறை செலவிடல் (Deficit spending) உபாய வழிமுறை யொன்றை கடைப்பிடித்தல்.

❖ மூலதன முதலீடுகளை அதிகரிக்கச் செய்தல் வேண்டுமென நிரம்பல் தரப்பினரின் (Supply Side) பொருளியலாளர்கள் ஆலோசனை வழங்குகின்றனர்.

❖ அரசாங்கம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் அல்லது மிகக் குறைந்த மட்டத் திலான வரித் தளர்வின் ஊடாக நெருக்கடியி னால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் அவர்களையும் பொருளாதார செயற் பாடுகளில் இணைத்துக் கொண்டு பொருளா தார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

❖ தொழில்துறை சங்கம் தமது வாடிக்கையாளர் களுக்கு தமது சேவைகளை திட்டமிடுதல் வேண்டும்.

❖ போட்டி ரீதியில் வேலை செய்வதற்கு விருப்ப முள்ளதுமான புதிய ஊழியர்களை நியமித்தல் போன்ற உபாய வழிமுறைகளை இதன் பொருட்டு பயன்படுத்தல்.

❖ தொடர்ச்சியான பொருளாதாரப் பின்னடைவு நிலவிய போதிலும் உபாய ரீதியில் துணிவு டனும் விரைவாகவும் அதற்கு முகங்கொடுப் பதற்கு தொழில் முயற்சியாளர்கள் உடனடி யாகச் செயற்படுதல் வேண்டும்.

**பங்குச் சந்தையும் பொருளாதார பின்னடைவு களும்**

பங்குச் சந்தையில் நடைபெறுகின்ற பின்ன டைவுகளின் காரணமாகவும் பொருளாதாரப் பின்னடைவுகளை எதிர்பார்க்கலாம். 1948 ஆம் ஆண்டின் பின்னர் உருவாகிய 10 பொருளாதாரப் பின்னடைவுகளும் பங்குச் சந்தையில் நடை பெற்ற வீழ்ச்சிகளின் காரணமாகவே உருவாகி யுள்ளன. சில சந்தர்ப்பங்களில் பொருளாதார பின்னடைவுகள் சந்தை வீழ்ச்சி நடைபெற்ற உடனேயே உருவாகியுள்ளன.

பொருளாதாரப் பின்னடைவொன்று நிகழ் கின்ற காலத்தில் நிதிச்சேவைகள், மருந்துகள் மற்றும் புகையிலை வர்த்தகத்துடன் தொடர்புடைய பங்குகள் அதிக பங்கிலாபத்தைக் காட்டுகின்றன. எவ்வாறாயினும் பொருளாதாரம் சிறந்த நிலைக் குத் திரும்ப ஆரம்பித்ததும் அதிக வளர்ச்சியுடன் கூடிய பங்குகளை தொழில் முயற்சிகள் விரை வாகவே நன்நிலையை அடைகின்றன. அத்தியா வசிய நுகர்வுப் பொருட்களுக்கு உள்ள கேள்வி

யின் நெகிழ்வுத்தன்மை எந்த நிலையின் கீழும் அவ்வளவு பெயர்ச்சியடையாதிருத்தல் அதற்கான காரணமாகும்.

**ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரத்தின் தற்போதைய பின்னடைவு**

2008ம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க நிதி மற்றும் அடகுச் சந்தையில் பாரிய தொரு நெருக்கடி நிலைமை உருவாகியது. கடனை மீளச் செலுத்துவதற்கான ஆற்றல் குறைந்த உப முதனிலை (Sub prime) துறைக்கு வீடு சொத்துக்கள் அடகு முறையின் கீழ் வழங்கப்பட்ட ஏறத்தாழ ஆயிரம் பில்லியன் கடன் தொகையை மீள அறவிடமுடியாதிருந்தமை மேற்படி நெருக்கடி உருவாவதற்கு காரணமாயமைந்தது. தனியார் தொழில் முயற்சிகளின் அடிப்படையில் செயற்படு கின்ற அமெரிக்க பொருளாதாரத்தில் பல முதனிலை தொழில் நிறுவனங்கள் மேற்படி நிதி நெருக்கடிக்கு உள்ளாகின இதில் மிகப் பெரும் நட்டத்தை ஏற்க வேண்டி நேரிட்ட நிறு வனங்களின் சிட்டி குரூப் (City Group) மற்றும் மெரில் லின்ஸ் (Mril Linch) ஆகிய கம்பனிகளுக்கு நேரிட்ட நட்டம் முறையே 55 மில்லியன் டொலர்கள் மற்றும் 52 மில்லியன் டொலர்களாகும்.

**உசாத்துணை நூல்கள் :**

குறிப்பேடு - 2009 ஜீலை - ஆகஸ்ட்

# நன்மதிப்பு

Ramatharany Srikumar
2010 (Com)

**01. நன்மதிப்பு என்றால் என்ன**

தொழிற்பாட்டு நிறுவனம் ஒன்றின் முழுமை யான தேறிய சொத்தின் தேறும் பெறுமதி தனித்தனி தேறிய சொத்தின் தேறும் பெறும திியை விட அதிகமாக இருத்தல் நன்மதிப் பாகும்.

**02. நன்மதிப்பின் தன்மை அல்லது பண்புகள் எவை**

- கட்புலனாகாச் சொத்து
- திடமாக மதிப்பிட முடியா விட்டாலும் பெறுமதியுண்டு
- நன்மதிப்பின் பெறுமதி வியாபார உழை ப்பு ஆற்றலுக்கு ஏற்ப மாறுபடும்
- நன்மதிப்பின் பெறுமதி விசேட நிகழ்ச்சி தவிர வேறு நேரங்களில் கணக்குகளில் பதியப்படாது இருக்கமுடியும்.

**03. நிறுவனத்திற்கு நன்மதிப்பு ஏற்படக் காரணங் கள் எவை**

- உரிமையாளரின் தனிப்பட்ட செல்வாக்கு
- உற்பத்திகளின் தன்மையும் வழங்கும் சேவையின் பிரபல்யமும்
- நிறுவனம் அமைந்துள்ள இடம்
- சிறப்பான முகாமை
- தனியுரிமை
- வியாபாரக் குறியும் ஆக்கவுரிமையின் பிரபல்யமும்
- பரந்த விளம்பரம் இருத்தல்
- திறமையான ஊழியர்
- நீண்ட காலத்தன்மை

**04. நன்மதிப்பு முறை என்றால் என்ன?**

தொட்டுணர முடியாத தேறிய சொத்துக்களை பங்காளர் சேரலில் அல்லது விலகலில் பதிவ தற்கு பயன்படும் முறை நன்மதிப்பு முறை யாகும்.

**05. அத்தகைய நன்மதிப்பு கணிப்பிடும் முறைகள் எவை?**

- மிகை இலாபமுறை
- மேலதிக நிறுவனப் பெறுமதி முறை

- பழைய, புதிய வியாபார முறை
- நிறை இலாபச் சராசரி முறை
- தேறிய லாபச் சராசரி முறை
- மொத்த இலாபச் சராசரி முறை
- மொத்த வருமானச் சராசரி முறை

**06. நன்மதிப்பு கணிப்பிடும் முறைகளில் பெரும் பாண்மையானவை இலாபமுறையாக அமைய காரணம் யாது?**

இலாபத்திற்கும் நன்மதிப்பிற்கும் நேரடியாக நேர்விகித தொடர்பு உள்ளதால் அனேக நன்மதிப்பு முறை இலாபத்தை அடிப்படை யாக கொண்டு அமைகின்றன.

**07. எதிர்மறை நன்மதிப்பு என்றால் என்ன?**

நன்மதிப்பைக் கணிப்பிடும் போது அது மறை அடையாளத்தைப் பெறுமாயின் அது எதிர் மறை நன்மதிப்பாகும்.

**08. நன்மதிப்புச் சீராக்கப்பதிவு எப்போது? ஏன் அவசியம்**

- பங்காளர சேர்தல்
- பங்காளர் விலகல் அல்லது இறத்தல்
- பங்காளர் சேர்தலும் விலகலும்
- இலாப நட்ட விகிதம் மாறுதல்
- இரண்டு நிறுவனங்கள் ஒன்று சேருதல்

எக் கட்சியினரும் பெறுபேறுகளை இழக்கவோ அனுபவிக்கவோ கூடாது என்பதனால் சீராகப் பதிவு அவசியம்

**09. பங்காளர் சேரும் போது நன்மதிப்பு சம்பந்தப் பட்ட சீராக்கப்பதிவுகள் எவை?**

01. சேரும் பங்காளன் தான் அனுபவிக்கும் நன்மதிப்பு தொகையை காசாக கொண்டு வரல்

i. நிறுவனத்திற்கு வெளியில் தீர்வு காணல்

பதிவு இல்லை

ii. நிறுவனத்தில் விட்டுவிடல்

| | |
|---|---|
| காசு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

iii. நிறுவனத்தின் கணக்கில் காட்டி எடுத்துச் செல்லல்

அ. காட்டல்

| | |
|---|---|
| காசு க/கு | வரவு |
| இழக்கும் பங்காளர் மூலதன க/கு | செலவு |

ஆ.எடுத்துச் செல்லல்

| | |
|---|---|
| இழக்கும் பங்காளர் மூலதன க/கு | வரவு |
| காசு க/கு | செலவு |

உதாரணம்

அனில், பசில் என்போர் பங்குடமை ஒன்றின் பங்காளர் ஆவார். இவர்களின் இலாப நட்ட விகிதாசாரம் சமனாகும் இப்பங்குடமையில் சிசில் புதிய பங்காளனாக அனுமதிக்கப்பட்டார் புதிய இலாப நட்ட விகிதாசாரம் 2:2:1 ஆகும் பங்குடமையின் மொத்த நன்மதிப்புப் பெறுமதி ரூபா 50,000 ஆகும். சிசில் தனது பங்கினை காசாக கொண்டு வந்தார் எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

i. நிறுவனத்திற்கு வெளியில் தீர்வு காணல்

பதிவு இல்லை

ii. நிறுவனத்தில் விட்டுவிடல்

| | | | |
|---|---|---|---|
| காசு க/கு | வரவு | 50,000 | |
| அனில் மூலதன க/கு | செலவு | | 25,000 |
| பசில் மூலதன க/கு | செலவு | | 25,000 |

iii. நிறுவனத்தின் கணக்கில் காட்டி எடுத்துச் செல்லல்

அ. காட்டல்

| | | | |
|---|---|---|---|
| காசு க/கு | வரவு | 50,000 | |
| அனில் மூலதன க/கு | செலவு | | 25,000 |
| பசில் மூலதன க/கு | செலவு | | 25,000 |

ஆ. எடுத்துச் செல்லல்

| | | | |
|---|---|---|---|
| அனில் மூலதன க/கு | வரவு | 25,000 | |
| பசில் மூலதன க/கு | வரவு | 25,000 | |
| காசு க/கு | செலவு | | 50,000 |

02. சேரும் பங்காளன் தான் அனுபவிக்கும் நன்மதிப்பு தொகைக்கு காசாக கொண்டு வராமை

i. நன்மதிப்பு கணக்கு பேணல் அல்லது உருவாக்கல்

அ. மொத்த தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

ஆ. தனித் தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| இழக்கும் பங்காளர் மூலதன க/கு | செலவு |

ii. நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்தும் நிற்கவிடப்படாமை

அ. மொத்த தொகைக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

- பதிவழித்தல்

  தொடரும் பங்காளர் மூலதன க/கு வரவு

  நன்மதிப்பு க/கு செலவு

ஆ. தனித் தொகைக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கல்

  நன்மதிப்பு க/கு வரவு

  இழக்கும் பங்காளர் மூலதன க/கு செலவு

- பதிவழித்தல்

  அனுபவிக்கும் பங்காளர் மூலதன க/கு வரவு

  நன்மதிப்பு க/கு செலவு

iii. நன்மதிப்பு கணக்கு பேணாமை

அ. மொத்த தொகைக்கு (மூலதன கணக்கில் சீராக்கம்)

தொடரும் பங்காளர் மூலதன க/கு வரவு

பழைய பங்காளர் மூலதன க/கு செலவு

ஆ. தனித் தொகைக்கு (மூலதன கணக்கில் சீராக்கம்)

அனுபவிக்கும் பங்காளர் மூலதன க/கு வரவு

இழக்கும் பங்காளர் மூலதன க/கு செலவு

இ. கடன் கணக்கு ஏற்படுத்தல்

அனுபவிக்கும் பங்காளர் கடன் க/கு வரவு

இழக்கும் பங்காளர் மூலதன க/கு செலவு

உதாரணம்

வாணி, ராணி என்போர் இலாபநட்டங்களை 2:1 எனும் விகிதத்தில் சமனாக பகிர்ந்து வரும் பங்குடமை ஒன்றின் பங்காளராவார். இப்பங்குடமையில் நிலாணி என்பவர் புதிய பங்காளனாக அனுமதிக்கப்பட்டார். புதிய இலாபநட்ட விகிதாசாரம் முறையே 2:2:1 ஆகும். பங்குடமையின் நன்மதிப்பு 120000 ரூபா எனின் நிலாணி தனது பங்கை காசாக கொண்டு வரவில்லை எனின் நன்மதிப்பு தொகையினை பின்வரும் நிலைகளில் பதிந்து காட்டுக.

1) நன்மதிப்பு கணக்கு பேணல்
2) நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படாமை
3) நன்மதிப்பு கணக்கு பேணாமை

1. நன்மதிப்பு கணக்கு பேணல்

அ. மொத்த தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 120000 | |
| வாணி மூலதன க/கு | செலவு | | 80000 |
| ராணி மூலதன க/கு | செலவு | | 40000 |

ஆ. தனித் தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 24000 | |
| வாணி மூலதன க/கு | செலவு | | 16000 |
| ராணி மூலதன க/கு | செலவு | | 8000 |

2) நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படாமை

அ. மொத்த தொகைக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

1) உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 120000 | |
| வாணி மூலதன க/கு | செலவு | | 80000 |
| ராணி மூலதன க/கு | செலவு | | 40000 |

2) பதிவழித்தல்

| | | | |
|---|---|---|---|
| வாணி மூலதன க/கு | வரவு | 48000 | |
| ராணி மூலதன க/கு | வரவு | 48000 | |
| நிலாணி மூலதன க/கு | வரவு | 24000 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 120000 |

ஆ. தனித் தொகைக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 24000 | |
| வாணி மூலதன க/கு | செலவு | | 16000 |
| ராணி மூலதன க/கு | செலவு | | 8000 |

- பதிவழித்தல்

| | | | |
|---|---|---|---|
| வாணி மூலதன க/கு | வரவு | 9600 | |
| ராணி மூலதன க/கு | வரவு | 9600 | |
| நிலாணி மூலதனக/கு | வரவு | 4800 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 24000 |

3) நன்மதிப்பு கணக்கு பேணாமை

அ. மொத்த தொகைக்கு

| | | | |
|---|---|---|---|
| வாணி மூலதன க/கு | வரவு | 48000 | |
| ராணி மூலதன க/கு | வரவு | 48000 | |
| நிலாணி மூலதனக/கு | வரவு | 24000 | |
| வாணி மூலதன க/கு | செலவு | | 80000 |
| ராணி மூலதன க/கு | செலவு | | 40000 |

ஆ. தனித் தொகைக்கு

| | | | |
|---|---|---|---|
| வாணி மூலதன க/கு | வரவு | 9600 | |
| ராணி மூலதன க/கு | வரவு | 9600 | |
| நிலாணி மூலதனக/கு | வரவு | 4800 | |
| வாணி மூலதன க/கு | செலவு | | 16000 |
| ராணி மூலதன க/கு | செலவு | | 8000 |

இ. கடன் கணக்கு ஏற்படுத்தல்

| | | | |
|---|---|---|---|
| வாணி மூலதன க/கு | வரவு | 48000 | |
| ராணி மூலதன க/கு | வரவு | 48000 | |
| நிலாணி மூலதனக/கு | வரவு | 24000 | |
| வாணி மூலதன க/கு | செலவு | | 80000 |
| ராணி மூலதன க/கு | செலவு | | 40000 |

**10. பங்காளர் விலகும் போது அல்லது இறக்குமிடத்து நன்மதிப்புச் சம்பந்தப்பட்ட சீராக்கப் பதிவுகள் யாவை?**

1. நன்மதிப்பு கணக்கு பேணல் அல்லது உருவாக்கல்

அ. மொத்த தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

ஆ. தனிப்பட்ட தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| இழக்கும் பங்காளர் மூலதன க/கு | செலவு |

**உதாரணம்**

சுதன், மதன், விமல் இலாபநட்டங்களை மேலாக பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவர் இப்பங்குடமையிலிருந்து மதன் ஓய்வு பெறுவது தொடர்பில் பங்குடமையின் மொத்த நன்மதிப்பு ரூபா 150000 என மதிப்பிடப்பட்டது. புதிய இலாப நட்ட விகிதாசாரம் முறையே 5:3:2 ஆகும். இப்பங் குடமை நன்மதிப்பு கணக்கினை பேணி வருகின்றனர் எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

அ. மொத்த தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 150000 | |
| சுதன் மூலதன க/கு | செலவு | | 75000 |
| மதன் மூலதன க/கு | செலவு | | 45000 |
| விமல் மூலதன க/கு | செலவு | | 30000 |

ஆ. தனிப்பட்ட தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 45000 | |
| மதன் மூலதன க/கு | செலவு | | 45000 |

2. நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படாமை

அ) மொத்த தொகைக்கு உருவாக்கிப் பதவழித்தல்

- உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

- பதிவழித்தல்

| | |
|---|---|
| தொடரும் பங்காளர் மூலதன க/கு | வரவு |
| நன்மதிப்பு க/கு | செலவு |

ஆ. தனிப்பட்ட தொகைக்கு நன்மதிப்புக் கணக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்புக் க/கு | வரவு |
| இழக்கும் பங்காளர் மூலதன க/கு | செலவு |

- பதிவழித்தல்

| | |
|---|---|
| அனுபவிக்கும் பங்காளர் மூலதன க/கு | வரவு |
| நன்மதிப்பு க/கு | செலவு |

**உதாரணம்**

விமல், அமல், கமல் பங்குடமையில் 3:2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிரும் பங்காளர்களாவார் கமல் ஓய்வு பெற ஏனையோர் இலாபநட்டங்களை சமனாக பகிர்ந்து பங்குடமையை தொடர்ந்து நடாத்த எண்ணினர் பங்குடமையின் நன்மதிப்பு 60000 ரூபா ஆகும். நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படாது எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

அ. மொத்த தொகைக்கு உருவாக்கிப் பதவழித்தல்

- உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 60000 | |
| விமல் மூலதன க/கு | செலவு | | 30000 |
| அமல் மூலதன க/கு | செலவு | | 20000 |
| கமல் மூலதன க/கு | செலவு | | 10000 |

- பதிவழித்தல்

| | | | |
|---|---|---|---|
| விமல் மூலதன க/கு | வரவு | 30000 | |
| அமல் மூலதன க/கு | வரவு | 30000 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 60000 |

ஆ. தனிப்பட்ட தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 10000 | |
| விமல் மூலதன க/கு | செலவு | | 5000 |
| அமல் மூலதன க/கு | செலவு | | 3333 |
| கமல் மூலதன க/கு | செலவு | | 1667 |
| | | | |
| விமல் மூலதன க/கு | வரவு | 5000 | |
| அமல் மூலதன க/கு | வரவு | 5000 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 10000 |

3. நன்மதிப்பு கணக்கு போணாமை அல்லது பதியாமை

அ. மொத்த தொகைக்கு (மூலதனக் கணக்கில் சீராக்கல்)

| | |
|---|---|
| தொடரும் பங்காளர் மூலதனக் க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

ஆ. தனித் தொகைக்கு (மூலதனக் கணக்கில் சீராக்கல்)

| | |
|---|---|
| அனுபவிக்கும் பங்காளர் மூலதன க/கு | வரவு |
| இழக்கம் பங்காளர் மூலதன க/கு | செலவு |

இ. கடன் கணக்கு ஏற்படுத்தல்

| | |
|---|---|
| அனுபவிக்கும் பங்காளர் கடன் க/கு | வரவு |
| இழக்கும் பங்காளர் மூலதன க/கு | செலவு |

உதாரணம்

அபி, ஆதி, பாரதி பங்குடமை இலாப நட்டங்களை சமனாக பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவர். இப் பங்குடமையிலிருந்து பாரதி ஓய்வு பெற ஏனையோர் பங்குடமையை தொடர்ந்து நடாத்த எண்ணினார். பங்குடமையின் நன்மதிப்பு 240000 ஆகும். புதிய இலாபநட்ட விகிதமும் சமன் ஆகும் நிறுவனம் நன்மதிப்பு கணக்கு தொடர்ந்து பேணுவதில்லை எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவுகள் வருமாறு.

அ. மொத்த தொகைக்கு

| | | | |
|---|---|---|---|
| அபி மூலதன க/கு | வரவு | 120000 | |
| ஆதி மூலதன க/கு | வரவு | 120000 | |
| அபி மூலதன க/கு | செலவு | | 80000 |
| ஆதி மூலதன க/கு | செலவு | | 80000 |
| பாரதி மூலதன க/கு | செலவு | | 80000 |

ஆ. தனித் தொகைக்கு

| | | | |
|---|---|---|---|
| அபி மூலதன க/கு | வரவு | 40000 | |
| ஆதி மூலதன க/கு | வரவு | 40000 | |
| பாரதி மூலதன க/கு | செலவு | | 80000 |

இ. கடன் கணக்கு ஏற்படுத்தல்

| | | | |
|---|---|---|---|
| அபி கடன் க/கு | வரவு | 40000 | |
| ஆதி கடன் க/கு | வரவு | 40000 | |
| பாரதி மூலதன க/கு | செலவு | | 80000 |

ii. பங்காளர சேர்தலும் விலகலும் சம்பந்தப்பட்ட நன்மதிப்புச் சீராக்கப்பதிவுகள் எவை?

01. நன்மதிப்பு கணக்கு பேணல் அல்லது உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

**உதாரணம்**

லால், நிகால் பங்குடமை இலாபநட்டங்களை 3:2 எனும் விகிதத்தில் பகிரும் பங்காளர்களாவார். இப்பங்குடமையிலிருந்து நிகால் ஓய்வு பெற அமல் புதிய பங்காளராக இணைகின்றார். புதிய இலாப நட்ட விகிதாசாரமும் 3:2 எனின் ஆகும். பங்குடமையின் நன்மதிப்பு பெறுமதி 100000 ஆகும் நிறுவனம் நன்மதிப்பு கணக்கு பேணுமெனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 100000 | |
| லால் மூலதன க/கு | செலவு | | 60000 |
| நிகால் மூலதன க/கு | செலவு | | 40000 |

02. நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படாமை

i. உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

ii. நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படாமை.

1) உருவாக்கல்

| | |
|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு |
| பழைய பங்காளர் மூலதன க/கு | செலவு |

2) பதிவழித்தல்

| | |
|---|---|
| தொடரும் பங்காளர் மூலதன க/கு | வரவு |
| நன்மதிப்பு க/கு | செலவு |

**உதாரணம்**

காமினி, சத்தியன் பங்குடமை இலாப நட்டங்களை சமனாக பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவர். காமினி பங்குடமையிலிருந்து ஓய்வு பெற திஸ்ஸ என்பவர் புதிய பங்காளராக இணைந்து கொண்டார். புதிய இலாப நட்ட விகிதாசாரம் 3:2 ஆகும். பங்குடமையின் மொத்த நன்மதிப்பு 90000 ரூபாவாகும். நிறுவனம் நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்க விடப்படுவதில்லை எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவுகள் வருமாறு

- உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 90000 | |
| காமினி மூலதன க/கு | செலவு | | 45000 |
| சத்தியன் மூலதன க/கு | செலவு | | 45000 |

- பதிவழித்தல்

| | | | |
|---|---|---|---|
| சத்தியன் மூலதன க/கு | வரவு | 54000 | |
| திஸ்ஸ மூலதன க/கு | வரவு | 36000 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 90000 |

03. நன்மதிப்பு கணக்கு பேணாமை அல்லது பதியாமை

தொடரும் பங்காளர் மூலதன க/கு வரவு

பழைய பங்காளர் மூலதன க/கு செலவு

**உதாரணம்**

தனு வினு இலாப நட்டங்களை சமனாக பகிரும் பங்குடமையொன்றின் பங்காளர்களாவர். தனு பங்குடமையிலிருந்து ஓய்வு பெற மனு புதிய பங்காளராக இணைகின்றார். புதிய இலாப நட்ட விகிதாசாரமும் சமனாகும். பங்குடமையின் மொத்த நன்மதிப்பு பெறுமதி ரூபா 60000 ஆகும். நிறுவனம் நன்மதிப்பு கணக்கு பேணுவதில்லை எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவுகள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| வினு மூலதன க/கு | வரவு | 30000 | |
| மனு மூலதன க/கு | வரவு | 30000 | |
| தனு மூலதன க/கு | செலவு | | 30000 |
| வினு மூலதன க/கு | செலவு | | 30000 |

12. இலாபநட்ட விகிதம் மாற்றமடையும் போது நன்மதிப்பு சம்பந்தப்பட்ட சிராக்கப்பதிவுகள் எவை

01. நன்மதிப்பு கணக்கு பேணல் அல்லது உருவாக்கல் அல்லது பதிதல்

அ. மொத்த தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

நன்மதிப்பு க/கு வரவு

பங்காளர் மூலதன க/கு செலவு (பழைய இலாபநட்ட விகிதம்)

ஆ. தனித்தொகைக்கு நன்மதிப்புக் கணக்கு உருவாக்கல்

நன்மதிப்பு க/கு வரவு

இழக்கும் பங்காளர் க/கு செலவு

உதாரணம்

வசந், ஆனந், சுகந் என்போர் 5:3:2 எனும் விகிதத்தில் இலாபநட்டங்களை பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவார் ஆனால் இவர்கள் தமது இலாபநட்ட விகிதாசாரத்தினை 4:2:4 என்ற தமது மூலதன விகிதாசாரத்தில் மாற்றியமைக்க தீர்மானித்தனர். இம்மாற்றம் தொடர்பில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 80000 என மதிப்பிடப்பட்டது. நிறுவனம் நன்மதிப்பு கணக்கினை பேணுகின்றதெனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

| | வசந் | ஆனந் | சுகந் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 5:3:2 | 40000 | 24000 | 16000 | 80000 |
| 4:2:4 | 32000 | 16000 | 32000 | 80000 |
| | (8000) | (8000) | (16000) | |

அ. மொத்த தொகைக்கு நன்மதிப்பு கணக்கு உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 80000 | |
| வசந் மூலதன க/கு | செலவு | | 40000 |
| ஆனந் மூலதன க/கு | செலவு | | 24000 |
| சுகந் மூலதன க/கு | செலவு | | 16000 |

ஆ. தனித் தொகைக்கு நன்மதிப்புக் கணக்கு உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 16000 | |
| வசந் மூலதன க/கு | செலவு | | 8000 |
| ஆனந் மூலதன க/கு | செலவு | | 8000 |

2. நன்மதிப்புக் கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்க விடப்படாமை

அ. மொத்த தொகைக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கல்

  நன்மதிப்பு க/கு வரவு
  பங்காளர் மூலதன க/கு செலவு
  (பழைய இலாபநட்ட விகிதம்)

- பதிவழித்தல்

  பங்காளர் மூலதன க/கு வரவு (புதிய இலாப நட்ட விகிதம்)
  நன்மதிப்பு க/கு செலவு

ஆ. தனித்தொகைக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கல்

  நன்மதிப்பு க/கு வரவு
  இழக்கும் பங்காளர் மூலதன க/கு செலவு

- பதிவழித்தல்

  அனுபவிக்கும் பங்காளர் மூலதன க/கு வரவு
  நன்மதிப்பு க/கு செலவு

**உதாரணம்**

அரன், பரன், சரன் இலாபநட்டங்களை 3:2:1 எனும் விகிதத்தில் பகிரும் பங்குடமையொன்றின் பங்காளர்களாவார். ஆனால் இவர்கள் தமது இலாபநட்ட விகிதத்தினை 2:1:1 என்ற தமது மூலதன விகிதாசாரத்திற்கு ஏற்ப பகிர்ந்து கொள்ள தீர்மானித்தனர். இதன் போது பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 60000 என மதிப்பிடப்பட்டது. நிறுவனம் நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படுவதில்லை எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

அ. மொத்த தொகைக்கு உருவாக்கிப்பதிவழித்தல்

- உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 60000 | |
| அரன் மூலதன க/கு | செலவு | | 30000 |
| பரன் மூலதன க/கு | செலவு | | 20000 |
| சரன் மூலதன க/கு | செலவு | | 10000 |

- பதிவழித்தல்

| | | | |
|---|---|---|---|
| அரன் மூலதன க/கு | வரவு | 30000 | |
| பரன் மூலதன க/கு | வரவு | 15000 | |
| சரன் மூலதன க/கு | வரவு | 15000 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 60000 |

ஆ. தனித்தொகைக்கு உருவாக்கிப் பதிவழித்தல்

- உருவாக்கம்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 5000 | |
| சரன் மூலதன க/கு | செலவு | | 5000 |

- பதிவழித்தல்

| | | | |
|---|---|---|---|
| பரன் மூலதன க/கு | வரவு | 5000 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 5000 |

3. நன்மதிப்பு கணக்கு பேணாமை அல்லது பதியாமை

அ. மூலதன கணக்கினூடாகச் சீராக்கம்

| | | |
|---|---|---|
| பங்காளர் மூலதன க/கு | வரவு | (புதிய இலாபநட்டவிகிதம்) |
| பங்காளர் மூலதன க/கு | செலவு | (பழைய இலாபநட்ட விகிதம்) |

ஆ. கடன் கணக்கு ஏற்படுத்தல்

| | |
|---|---|
| அனுபவிக்கும் பங்காளர் கடன் க/கு | வரவு |
| இழக்கும் பங்காளர் மூலதன க/கு | செலவு |

**உதாரணம்**

அருண், வருண், கருண் இலாபநட்டங்களை சமனாக பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவார். இவர்கள் தமது இலாபநட்ட விகிதத்தினை 3:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொள்ள

இணங்கினர். பங்குடமையின் நன்மதிப்பு 120000 ரூபா ஆகும். நிறுவனம் நன்மதிப்பு கணக்கு பேணுவதில்லை எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

அ. மூலதன கணக்கினூடாக சீராக்கம்

| | | | |
|---|---|---|---|
| அருண் மூலதன க/கு | வரவு | 60000 | |
| வருண் மூலதன க/கு | வரவு | 40000 | |
| கருண் மூலதன க/கு | வரவு | 20000 | |
| அருண் மூலதன க/கு | செலவு | | 40000 |
| வருண் மூலதன க/கு | செலவு | | 40000 |
| கருண் மூலதன க/கு | செலவு | | 40000 |

ஆ. கடன் கணக்கு ஏற்படுத்தல்

| | | | |
|---|---|---|---|
| அருண் கடன் க/கு | வரவு | 20000 | |
| கருண் மூலதன க/கு | செலவு | | 20000 |

**13. இரண்டு நிறுவனம் ஒன்று சேரும் போது நன்மதிப்பு சம்பந்தப்பட்ட சீராக்கப்பதிவுகள் எவை?**

1. நன்மதிப்பு கணக்கு பேணல் அல்லது உருவாக்கல்

| | | |
|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | (இரண்டு நிறுவன நன்மதிப்பு) |
| பழைய பங்குடமை மூலதன க/கு | செலவு | (பங்குடமையின் நன்மதிப்பு) |
| சேருபவர் மூலதன க/கு | செலவு | 1(சேர்ந்த வியாபாரத்தின் நன்மதிப்பு) |

**உதாரணம்**

அபி, ஆதி இலாபநட்டங்களை 2:1 எனும் விகிதத்தில் பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவர். இப்பங்குடமையின் 90000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது. இப்பங்குடமையுடன் பாரதி நிறுவனம் இணைந்து கொள்கிறது. இந்நிறுவனத்தின் நன்மதிப்பு 30000 ரூபாவாகும். புதிய இலாபநட்ட விகிதாசாரம் 2:2:1 ஆகும் நிறுவனம் நன்மதிப்பு கணக்கினை பேணுகின்றது. எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 120000 | |
| பழைய பங்குடமை மூலதன க/கு | செலவு | | 90000 |
| பாரதி மூலதன க/கு | செலவு | | 80000 |

2. நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படாமை

i) உருவாக்கல்

| | | |
|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | (இரண்டு நிறுவன நன்மதிப்பு) |
| பழைய பங்குடமை மூலதன க/கு | செலவு | (பங்குடமையின் நன்மதிப்பு) |
| சேருபவர் மூலதன க/கு | செலவு | (சேர்ந்த வியாபாரத்தின் நன்மதிப்பு) |

ii) பதிவழித்தல்

| | | |
|---|---|---|
| தொடரும் பங்காளர் மூலதன க/கு | வரவு | (இரண்டு நிறுவன நன்மதிப்பு) |
| நன்மதிப்பு க/கு | செலவு | |

உதாரணம்

அமல், கமல் இலாபநட்டங்களை சமனாக பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்கள் இப்பங்குடமையின் நன்மதிப்பு 60000 ரூபாவாகும் இப்பங்குடமையுடன் விமல் நிறுவனம் இணைவதற்கு ஒத்து கொண்டது. இந் நிறுவன நன்மதிப்பு 30000 ரூபாவாகும். புதிய இலாப நட்ட விகிதமும் சமனாகும்.

நிறுவனம் நன்மதிப்பு கணக்கு பேணப்பட்டு தொடர்ந்து நிற்கவிடப்படுவதில்லை எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

i) உருவாக்கல்

| | | | |
|---|---|---|---|
| நன்மதிப்பு க/கு | வரவு | 90000 | |
| பழைய பங்குடமை மூலதன க/கு | செலவு | | 60000 |
| விமல் மூலதன க/கு | செலவு | | 30000 |

ii) பதிவழித்தல்

| | | | |
|---|---|---|---|
| அமல் மூலதன க/கு | வரவு | 30000 | |
| கமல் மூலதன க/கு | வரவு | 30000 | |
| விமல் மூலதன க/கு | வரவு | 30000 | |
| நன்மதிப்பு க/கு | செலவு | | 90000 |

03) நன்மதிப்பு கணக்கு பேணாமை அல்லது பதியாமை

மூலதன கணக்கினூடாகச் சீராக்கல்

| | |
|---|---|
| தொடரும் பங்காளர் மூலதன க/கு | வரவு |
| பழைய பங்குடமை மூலதன க/கு | செலவு |
| சேருபவர் மூலதன க/கு | செலவு |

உதாரணம்

பிரபு, சுந்தர் இலாபநட்டங்கள் 2:1 எனும் விகிதத்தில் பகிரும் பங்குடமை ஒன்றின் பங்காளர்களாவர் இப் பங்குடமையின் நன்மதிப்பு 45000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது. இப்பங்குடமையுடன் சிவா நிறுவனம் இணைவதென தீர்மானித்தது. இந்நிறுவனத்தின் நன்மதிப்பு 30000 ரூபா ஆகும் புதிய இலாப நட்ட விகிதாசாரம் சமன் ஆகும் நிறுவனம் நன்மதிப்பு கணக்குகளை பேணுவதில்லை எனின் நன்மதிப்பு தொடர்பான பதிவு வருமாறு

மூலதன கணக்கினூடாக சீராக்கல்

| | | | |
|---|---|---|---|
| பிரவு மூலதன க/கு | வரவு | 25000 | |
| சுந்தர் மூலதன க/கு | வரவு | 25000 | |
| சிவா மூலதன க/கு | வரவு | 25000 | |
| பழைய பங்குடமை மூலதன க/கு | செலவு | | 45000 |
| சிவா மூலதன க/கு | செலவு | | 30000 |

Reference :

நவீன நிதி கணக்கு கோட்பாடுகள் (D.Sam)

# இணையமும் பிரதேச வளர்ச்சியில் அதன் பங்களிப்பும்

Jansiya Arumaithurai
2010 (Com)


நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இத்தகவல் தொடர்பாடல் யுகத்தில் இணையமானது உலகம் முழுவதும் பரவி நிற்கிறது. அபிவிருத்தியடைந்த நாடுகள் முதற்கொண்டு ஆபிரிக்கா, அந்தாட் டிக்கா என எல்லா இடங்களிலும் இணையமானது தனது காலடியைப் பதித்துள்ளது. இதற்குக் கணனி உட்பட தகவல் தொடர்பாடலுக்குரிய சாதனங்களினதும் அவைசார் தொழில்நுட்பங் களினதும் அதீத வளர்ச்சியும் அவை ஓரளவு பாவனையாளரின் கொள்வனவு சக்திக்கு உட்பட்ட செலவில் கிடைக்கக் கூடியவாறு இருப்பது பிரதான காரணமாகும். மேலும் கம்பியல்லாத தகவல் பரிமாற்ற முறைமையானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் புதிய பரிமானத்தை ஏற்படுத்தியுள்ளது. கம்பி வழி மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதி இல்லாத தொழில்நுட்பங்கள் (HSPA, GPRS, 36 முதலியன) மூலம் இணைய வசதியைப் பெறக் கூடியதாக உள்ளது.

இந்த வகையில் கணனியில் பரீட்சய மற்றவர் களுக்கும். அடிப்படை கணனி அறிவினைக் குறிப்பிட்ட சில மென்பொருள் தொகுப்புக்களில் மாத்திரம் பெற்று வளர்ந்தோருக்கும் இணைய மானது ஒரு புரியாத புதிராகவே உள்ளது. இணை யத்தையும், மின்னஞ்சலையும் ஒரே விடயம் என எண்ணுபவர்கள் இன்றும் உள்ளனர். இதற்கான முக்கிய காரணமாயிருப்பது இணை யம் எனும் மாய உலகமானது பல்வேறு விசித்திரங்களையும், புதிர்களையும் உள்ளடக்கி இருப்பதும் அது நாளுக்கு நாள் தொழில் நுட்பரீதியாக மாறிக் கொண்டிருப்பதுவுமாகும். எனினும் ஆர்வத்துடன் முயன்றால் இணையமானது மிக எளிதாகக் கையாளக்கூடிய ஒரு வளமாகும்.

இணையம் என்பது பல்வேறு தன்னிச்சை யான கணனிகளினதும், கணனி வலையமைப்புக் களின் சேர்க்கையாகும். இது உலகளாவிய ரீதி யிலான இலத்திரனியல் தகவல் பரிமாற்றத்திற் குரிய கட்டமைப்பை வழங்குகிறது. இணையம் ஒரு தனிப்பட்ட நபருக்கோ அல்லது அரசாங்கத் திற்கோ அல்லது அமைப்பிற்கோ சொந்தமானது அல்ல சர்வதேச தன்னார்வத்தொண்டு நிறுவன மான இணைய சங்கம் அல்லது இணைய சமு தாயம் (Internet society) எனப்படும். இணையத் தில் பல்வேறு நபர்களாலும், அழைப்புக்களாலும் இணையத்தளங்கள் (Website) நடாத்தப்படு கிறது.

இவ் இணையத்தளங்களில் பிரதானமாக இணையப் பக்கங்களும் அசையும் படங்கள் (Video and animations) செயல் நிரல்கள் வேறு இணையப் பக்கங்களுக்கு உரிய இணைப்புக்கள் போன்றன காணப்படும்.

மேலும் குறிப்பிட்ட துறை சம்பந்தமான தொடர்ச்சியாக எம்மை அறிவுறுத்திக் கொண்டிருக் கும் செய்திக் குழுக்களும் இலத்திரனியல் தொடர் பாடலின் அச்சாணியாகவும் இணையத் தின் தாய் என வர்ணிக்கப்படக் கூடியதுமான மின் னஞ்சலும் இணையத்துடன் இரண்டறக் கலந்த ஏனைய சேவைகளாகும்.




நிறுவனங்களும், வீட்டுப்பாவனையாளர்களும் இணையத்துடன் இணைந்திருக்கிறார்கள். பொதுவாகப் பாவனையாளர்கள் உள்ளூர் இணைய சேவை வழங்குவோர் (Internet Service Providers) மூலமாக இணையத்துடன் இணைகிறார். உள்ளூரிலே உள்ள இணைய சேவை வழங்குனர் பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியான இணைய சேவை வழங்குனரும் தொடர்பு ஏற்படுத்துகின்றன.

மின்னஞ்சல் என்பது இலத்திரனியல் தொடர்புச் சாதனங்கள் மூலம் செய்திகளை எழுதுதல், அனுப்புதல் மற்றும் பெறுதல் போன்றவற்றைச் செய்யும் முறையாகும். சாதாரணமாக அஞ்சல்கள் அனுப்பும் போது யாரிடமிருந்து யாருக்கு அனுப்புவதைப் போன்று இங்கு உங்கள் மின்னஞ்சலும் பெறுபவரின் மின்னஞ்சல் முகவரியும் தேவைப்படுகிறது. உலாவிகள் ஊடாக இணைய சேவை வழங்குபவர் WWW. g mail. com. w.w.w yahoo mail.com மற்றும் www.live.com எனும் இணையத்தளங்கள் பிரபலமாக உள்ளது.

www.face book.com. www his.com போன்ற இணையத்தளங்கள் பழைய உறவுகளை, நட்டைப்புதுப்பிக்க புதிய நண்பரைத் தேட வழிவகுக்கும். கல்விமற்றும் தகவல் துறையில் இணையமானது விசாலமான வீச்சில் உதவ முடியும். உயர்கல்விமாணவர், தொழில் புரிவோர் தம் துறைசார் அறிவைப் பெறமுடியும்.

இறுதியாக இணையம் எனும் போது அது பற்றிய தப்பான அபிப்பிராயமே தற்போது நிலவுவதால் இணையவசதி வழங்கும் நிறுவனங்களிலிருந்து பெண்கள் பயன் பெறுவது குறைவு. அது எமது பிரதேச இணைய வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. எனவே இவ்வாறான மனப்பான்மை நீக்கப்பட்டு அனைவரும் இணையத்தைப் பயன்படுத்தக்கூடிய வகையில் சூழ்நிலையை ஏற்படுத்த அனைவரும் உதவ வேண்டும்.

உசாத்துணை நூல் :
வணிகக்கல்வி ஜகத்பண்டாரநாயக்கா
தகவல் தொழில்நுட்பம் - பசில் ஜெனதாஸ்
Mobile Commerce - நடமாடும் வர்த்தகம்

# இலங்கைக்கான ஒரு சுபீட்ச சுட்டெண்

Reginiya Appulingam
பிரிவு - 2010 (Com)

இலங்கையின் சுபீட்சத்தை அளவிடும் பொருட்டு இலங்கை மத்தியவங்கி "சுபீட்ச சுட்டெண் என்ற ஒரு புதிய சுட்டெண்ணை உருவாக்கியுள்ளது.

இங்கு சுபீட்சம் என்ற சொற்பதத்தினுள் மிக விரிவானதொரு பொருள் பொதிந்துள்ளது. அபிவிருத்தியின் பிரதிபலன்களை சமூகத்தின் அனைத்து குழுக்களும் அனுபவிப்பதற்கு ஏற்பாடு செய்வதன் மூலம் நிலைத்திருக்கத்தக்க விதத்தில் நாட்டில் செல்வம் ஈட்டுவதன் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் என்பதாகும்.

**நோக்கம்**

- அபிவிருத்தியின் நன்மைகளை சமூகத்திலுள்ள அனைத்து பிரிவினரும் அனுபவிப்பதனூடாக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்து தல் அனைத்து தேசிய கொள்கைகளினதும் இறுதியான குறிக்கோள் மக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துவதும் அதன் மூலம் முழு நாட்டினுடைய சுபீட்சத்தினை உயர்த்துவதும் ஆகும்.

- சமநிலையான பிராந்திய அபிவிருத்தி ஒவ்வொரு மாகாணத்தினுடைய குடித்தொகை, தலைக்குரிய வருமானம், சமூக மற்றும் பொருளாதார சமமற்ற தன்மைகள் மற்றும் மாகாணங்களில் தலைக்குரிய வருமானத்தின் வேறுபாடுகள் என்பன கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

- பரந்த நியதிகளில் மக்களுடைய நலன்கள் மற்றும் மக்களுக்கு கிடைக்கத்தக்களவு சமூக பொருளாதார உட்கூட்டமைப்பு வசதிகள் என்பனவும் சுபீட்சத்தை அளவிடுவதற்கான முக்கிய கூறுகளாகும்.

- சுபீட்ச சுட்டெண்ணானது 20 மாறிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாறிகள் மக்களுடைய வாழ்க்கையில் வேறுபட்ட விடயங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் நிலையான உரிய நேரத்தரவுகளின் கிடைப்பனவு தன்மையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சுட்டெண்ணில் உள்ளடங்கும் மாறிகள் மூன்று பிரதான துணைப்பிரிவுகளாக வகைப்படுத்தப்படும். அதன் விபரம் பின்வருமாறு

**சுபீட்சச் சுட்டெண்ணை கணிப்பிடும் முறை**

$$Ii = \frac{Vi - Viw}{Vio - Viw}$$

Ii = I மாறியலுடன் தொடர்புடைய சுட்டெண் இலக்கம்

Vi = I மாறியலின் அவதானிப்பு

Vio = I மாறியலுக்கு இருக்கமுடியுமான சிறந்த உயர்ந்த பட்ச பெறுமதி

Viw = I மாறியலுக்கு இருக்க முடியுமான சிறந்த உயர்ந்தபட்ச பெறுமதி

| இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணுக்குரிய மாறியல்கள் | | |
|---|---|---|
| பொருளாதார தொழில்துறை சுற்றாடல் (30%) | மக்களின் வாழ்க்கையின் நன்நிலைப்பாடு (45%) | உட்கட்டமைப்பு வசதிகள் (25%) |
| தலைக்கிரிய வருமானம் (5%)<br>தொழில்நிலை (5%)<br>முறைசாராத்துறை சம்பளம் (5%)<br>வறுமை மட்டத்திற்கு மேலுள்ள சனத்தொகை (5%)<br>தலைக்குரிய மொத்த விற்பனைப்புரள்வு வரிவீதம் (5%)<br>தொழிற்சாலை அடர்த்தி (5%) | வைத்தியசாலை கட்டில்கள் (அரசு) (5%)<br>மருத்துவர்கள் (அரசு) (5%)<br>குழந்தை உயிர்பாதுகாப்பு (5%)<br>தாய் உயிர்பாதுகாப்பு (5%)<br>பாடசாலை அடர்த்தி (5%)<br>மாணவர் ஆசிரியர் விகிதம் (5%)<br>இரண்டாம் நிலை கல்வியின் தொடர்ச்சி (5%)<br>சாதாரண மற்றும் உயர்தரம் சித்தியடைகின்ற விகிதம் (5%)<br>வாகன உரிமை (5%) | தலைக்குரிய மின்வலு நுகர்வு (5%)<br>தொலைபேசி அடர்த்தி (5%)<br>வங்கி அடர்த்தி (5%)<br>வீதி அடர்த்தி (5%)<br>சட்டமும் ஒழுங்கும் (5%) |

**சுபீட்சச் சுட்டெண்ணின் பயன்பாடுகள்**

1) மாகாணங்களின் பற்றாக்குறையான விடயங்களை கண்டறிய உதவும்
2) குறித்த விடயங்களை நிவர்த்தி செய்வதற்கு அதிகவழங்கல்களை ஒதுக்குவதன் மூலம் நியாயமற்ற வழங்கல்களையும் தவறான ஒதுக்கங்களையும் தடுக்க உதவும்
3) மாகாணங்களின் அதிகாரசபைகளில் அடையப்படவேண்டிய மாகாணமட்டத்திலான இலக்குகளை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்த முடியம்
4) சுபீட்சச் சட்டெண்ணானது சுபீட்சத்தை விருத்தி செய்வதில் சமூக பொருளாதார கொள்கைகளில் செயற்றிறனை அளவிடுவதற்கும் பயன் படுத்தமுடியும்.

**சுவீட்சச் சுட்டெண்ணை பயன்படுத்துவதன் முக்கியத்துவம்**

அனைத்து துணைச்சுட்டெண்களில் முடிவுகளின் விரிவான பகுப்பாய்வு மற்றும் அவசியமான கொள்கை தலையீடுகள் மற்றும் முன்னுரிமை இலக்கை அணுகுதல் மற்றும் இலங்கை சுபீட்சச் சுட்டெண்ணின் நிலைக்குத்தான மற்றும் சமாந்தர அடிப்படையில் மாகாணங்களுடைய முன்னுரிமைகளுடைய தொடர்புபடுத்தி அவற்றினுடைய மேலதிக சுபீட்சத்துக்காக ஒவ்வொரு மாகாணத்திற்கும் தொடர்புடைய பொருத்தமான நடவடிக்கையை எடுத்தல்.


**உசாத்துணை நூல்கள் :**

இலங்கை மத்தியவங்கி அறிக்கை - 2008

இலங்கை மத்தியவங்கி குறிப்பேடு - 2008

# இலங்கை கணக்கீட்டு நியமம் - 29
# வருமானம்

Thayalini
Vettivetsivanthasandram
2010 (Com)

### நோக்கம்

வருமானமானது குறிப்பிட்ட கணக்கீட்டு காலப்பகுதியில் உரிமையாளர்களின் பங்களிப்புக்கள் தவிர்ந்த உரிமையாண்மையை அதிகரிக்கும் வண்ணம் ஏற்படும் உள்வாங்கல்கள் அல்லது சொத்துக்களை அதிரிக்கும் அல்லது பரிப்புக்களை குறைக்கும் பொருளியல் சார்ந்த பயன்கள் என நிதிசார் கூற்றுக்களை தயாரித்தல், முன்னிலைப்படுத்தல் என்பன வரையறுக்கப்பட்டுள்ளன. வருவாய் என்பது வருமானம், ஆதாயம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது. வருமானம் ஒரு தொழில் முயற்சியின் சாதாரண செயற்பாடுகளினால் ஏற்படும் வருமானத்துடன் விற்பனை, கட்டணம், வட்டி, பங்குலாபம், உரிமைப்படி என பல்வேறு பெயர்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### நோக்க எல்லை

இந்த நியமமானது பின்வரும் கொடுக்கல் வாங்கல் நிகழ்வுகளில் இருந்து வரும் வருமானங்களை கணக்கிடும் போது பிரயோகிக்க வேண்டும்.

1) பொருட்கள் விற்பனை

விற்பனைக்காக தொழில் முயற்சியினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்காக உள்ள காணி, வேறு ஆதனங்களும் அல்லது சில்லறை வியாபாரியிடமுள்ள வணிகப்பொருட்கள் போன்ற விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களும் பொருட்கள் என்ற பதத்தில் அடங்கும்.

2) சேவை வழங்குதல்

சேவையை வழங்குவதாவது குறிப்பிட்ட முறையில் ஒப்பந்த காலத்தினுள் உடன்பட்ட வேலையை ஒரு தொழில் முயற்சி நிறைவேற்றுவதாகும். இந்த சேவையானது ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் அல்லது அதற்கு கூடிய காப்பகுதியினுள் வழங்கப்படலாம்.

3) ஒரு தொழில் முயற்சியின் சொத்துக்களைப் பிறர் உபயோகிப்பதால் பெறப்படும் வருமானங்கள், வட்டி, பங்குலாபம், உரிமைப்படிகள் ஒரு தொழில் முயற்சியின் சொத்துக்களை மற்றவர்கள் உபயோகிப்பதால் பெறப்படும் வருமானங்கள் பின்வருமாறு

1. வட்டி ஒரு தொழில் முயற்சிக்குரிய காசை அல்லது காசிற்கு சமனானவையை அல்லது பெற வேண்டிய தொகைகளை பயன்படுத்துவதற்குரிய கட்டணங்கள்.
2. உரிமைப்படிகள் ஒரு தொழில் முயற்சிக்குரிய நீண்டகாலச் சொத்துக்களை உபயோகிப் பதற்குரிய கட்டணங்கள்

   Eg:- ஆக்கவுரிமை

   வியாபாரக்குறி
3. பங்குலாபங்கள் உரிமையாண்மை முதலீட்டில் உரிமையாளர்கள் வைத்திருக்கும் ஒரு குறிப்பிட்ட வகை மூலதனத்தின் விகிதாசாரத்திற்கேற்ப இலாபத்தை பங்கிட்டு விநியோகிப்பதற்கு.

**SLAS 29 இன்படி வருமானமாக கருத்திற் கொள்ளப்படாதவை**

1. குத்தகை ஒப்பந்தங்கள்
2. உரிமையாண்மை முறைப்படி கணிப்பிடும் முதலீடுகளிலிருந்து பெறப்படும்பங்குலாபங்கள்
3. காப்புறுதி தொழில் முயற்சியின் காப்புறுதி ஒப்பந்தங்கள்
4. நிதிச்சார்புச் சொத்துக்களின் நிதிச்சார்புப் பரிப்புகளின் நியாயப் பெறுமதி
5. வேறு நடப்புச் சொத்துகளின் மதிப்புகளில் ஏற்படும் மாற்றங்கள்.
6. விவசாய மற்றும் வன உற்பத்திப் பொருட்கள், கால் நடைகளின் இயற்கை அதிகரிப்பு.
7. தாதுப் பொருட்களைப் பிரித்தெடுத்தல்.

**வருமானம் – வரைவிலக்கணம்**

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒரு தொழில் முயற்சியின் சாதாரண செயற்பாடுகளினால் ஏற்படும் மொத்த உள்வாங்கல்களை கொண்ட பொருளாதார பயன்களாவதுடன் உரிமையாண்மைப் பங்காளர்களின் பங்களிப்பு தொடர்பான அதிகரிப்பு தவிர்ந்த அத்தகைய உள்வாங்கல்களின் விளைவாக உரிமையாண்மையில் அதிகரிப்பை ஏற்படுத்துபவை ஆகும்.

**நியாயப் பெறுமதி**

நியாயப்பெறுமதி என்பது விடயமறிந்த ஆர்வமுள்ள நபர்களுக்கு இடையே தோழமையற்ற கொடுக்கல் வாங்கல்களில் ஒரு சொத்தை பரிமாற்றம் செய்யும் அல்லது கடன்தீர்க்கும் தொகையாகும்.

**குறிப்பு :** வருமானம் ஒரு தொழில் முயற்சியின் சொந்தக் கணக்கில் கிடைக்கப்பெற்று மற்றும் கிடைக்கப்பெறும் மொத்த உள் வாங்கல்களை மட்டும் உள்ளடக்கிய பொருளாதார பயன்களாகும். 3ம் நபர்கள் சார்பில் சேகரிக்கப்பட்ட விற்பனைவரி, பண்டங்கள் சேவை வரி, பெறுமதி கூட்டப்பட்டவரி ஆகியன குறிப்பிட்ட தொழில் முயற்சி பெறும் பொருளாதார பயன்பள் அல்லாமையால் உரிமையாண்மை அதிகரிப்பை ஏற்படுத்தாது. எனவே இவை வருமானத்தில் இருந்து விலக்களிக்கப் படும்.

**வருமானத்தை அளவிடல்**

1. கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கக்கூடிய பிரதியீட்டத்தின் நியாயமான பெறுமதியில் அளவிட வேண்டும்
2. கொடுக்கல் வாங்கல்கள் வருமானத்தொகை பொதுவாக ஒரு தொழில் முயற்சிக்கும், நுகர்வோன் அல்லது பாவிப்போனுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் மூலம் தீர்மானிக்கப்படும்.
3. அநேக சந்தர்ப்பத்தில் பிரதியீட்டம் காசாகவோ அல்லது காசிற்குச் சமனாகவோ இருக்கும். ஆனால் உட்பாய்ச்சல் பிற்போடப்படும் போது பிரதியீட்ட நியாயப் பெறுமதி காசின் பெயரளவுப் பெறுமதியிலும் பார்க்க குறைவாக இருக்கும்.

**குறிப்பு:** பொருட்கள் அல்லது சேவைகள் பண்டமாற்றப்படும் போது அல்லது ஒரே இனமான, பெறுமதி உள்ள பண்டங்களுக்கோ அல்லது சேவைகளுக்கோ ஈடாக மாற்றப்படும் போது அந்த மாற்றமானது வருமானத்தை உண்டாக்கும் கொடுக்கல் வாங்கலாகக் கருதப்பட மாட்டாது.

**பொருள் விற்பனை வருமானமாக ஏற்பிசைவு செய்தல்**

1. பொருட்களின் உடைமையின் பயன்களையும் அத்துடன் முக்கிய இடர்களையும் ஒரு தொழில் முயற்சி கொள்வோருக்கு மாற்றுதல்.
2. விற்பனைப் பொருட்களின் பயனுறுதியுள்ள கட்டுப்பாடு அல்லது பொதுவாக உடமையுடன் தொடர்புடைய அளவிற்கு தொடரும் முகா

மைத்துவ ஈடுபாடையம் தம்மிடம் தொழில் முயற்சி வைத்துக் கொள்ளாமை

3. வருமானத்தொகை நம்பகரமாக அளவிட முடியும் போது
4. கொடுக்கல் வாங்கலுடன் சம்பந்தப்பட்ட பொருளாதார வளங்கள் தொழில் முயற்சிக்கு வந்தடையும் சாத்தியம் உள்ள போது
5. கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட அல்லது ஏற்படும் கிரயத்தை நம்பகரமாக அளவிடும் போது

**சேவைகளை வழங்குதல்**

சேவைகளை ஆற்றதலுடன் சம்பந்தப்பட்ட கொடுக்கஷ் வாங்களல்களின் பின் விளைவுகளை நம்பகமாக மதிப்பிட முடியும் போது ஐந்தொகை திகதியில் அக்கொடுக்கல் வாங்கலின் நிறைவுப்படி நிலையுடன் குறிப்பிட்டு அந்த கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய வருமானம் ஏற்பிசை வாக்கப்பட வேண்டும்.

ஒரு கொடுக்கல் வாங்கலின் பின்விளைவானது பின்வரும் நிபந்தனைகளை திருப்தி பண்ணும் போது மதிப்பிட முடியும்.

1. வருமானத்தொகை நம்பகமாக அளவிட முடியும் போது
2. பொருளாதார பயன் தொழில் முயற்சிக்கு பாய்ச்சலாகும் சாத்தியம் உள்ள போது
3. ஐந்தொகை திகதியில் நிறைவுப்படி நிலை நம்பகமாக அளவிட முடியும் போது
4. கொடுக்கல் வாங்கல் ஏற்பட்ட கிரயங்களையும் நிறைவேற்ற ஏற்படும் கிரயங்களையும் நம்பகமாக அளவிடும் போது.

வட்டி, உரிமைப்படிகள், பங்குலாபங்கள், ஏற்பிசைவாக்கப்படும் முறைகள்

1. வட்டியானது அச்சொத்தின் மெய்யான விளைவைக் கணக்கெடுத்துக் கொள்ளும், ஒரு நேர விகிதாசார அடிப்படையில் ஏற்பிசைவாக்கப்பட வேண்டும்.
2. உரிமைப்படியானது சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் சாரத்திற்கேற்ப அட்டுறு முறையில் ஏற்பிசை வாக்கப்பட வேண்டும்.
3. பங்குலாபமானது பங்குதாரர்களின் பங்கு பெறும் உரிமை நிலை நாட்டப்பெற்றதும் ஏற்பிசைவாக்கப்பட வேண்டும்.

**நிறைவேற்று சதவீதமுறை**

ஒரு கொடுக்கல் வாங்கலை நிறைவேற்றுபடி முறை மூலம் அதன் வருமானத்தை ஏற்பிசை வாக்குதல் பொதுவாக நிறைவேற்று சதவீத முறை எனப்படும். இந்த முறையின் கீழ் சேவைகள் ஆற்றப்படும் கணக்கீட்டு காலப்பகுதிகளில் வருமானம் ஏற்பிசைவாக்கப்படும். இந்த அடிப்படையில் வருமானத்தை ஏற்பிசைவாக்குவது, குறிப்பிட்ட காலப்பகுதியில் சேவையின் செயற்பாட்டினதும் செயலாற்றுகையினதும் அளவு பற்றிய பிரயோசமான தகவல்களை அளிக்கிறது.

உசாத்துனை :

இலங்கை கணக்கீட்டு நியமம் தொடர்பான பட்டய கணக்கறிஞர் நிறுவனத்தின் புதிய பதிப்பு (2009)

# வெளிநாட்டு வர்த்தகம்

Luxstella Mariyathas
2010 *(Com)*

அறிமுகம்

ஒரு நாடு உலகின் ஏனைய நாடுகளுடன் நடத்துகின்ற பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பிலான வர்த்தக பணிகள் சர்வதேச வர்தக மாக கருதப்படுகின்றது. ஒரு நாடு இன்னொரு நாட்டிற்கு பண்டங்களை விற்பனை செய்வதை ஏற்றுமதியாகவும் வேறொரு நாட்டிலிருந்து கொள் வனவு செய்வதை இறக்குமதியாகவும் குறிப்பிடு கின்றோம்.

தற்போது வர்த்தகத்திற்கம் பொருளாதார வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வெளிநாட்டு வர்த்தகம் எவ்வளவு தூரத்துக்கு உதவியாயிருப்ப தென்பதைப் புரிந்து கொள்வதற்கு

1) வர்த்தகத்துடன் கூடிய உலகத்தை
2) வர்த்தகமற்ற உலகத்துடன்

ஒப்பிட்டு பார்த்தல் வேண்டும் "வர்த்தகம்" இல்லாதுவிடின் உலகில் அனைவரும் தமக்கு தேவையானதை தாமே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். நடைமுறையில் ஒவ்வொரு நாட்டிற்கும் தமக்குத் தேவையான அனைத்தையும் உற்பத்தி செய்வதற்கு போதியளவு வளங்களும் தொழில் நுட்பமும் இல்லாதிருக்கும்.

Eg:- இலங்கை பெற்றோலியத்தை உற்பத்தி செய்வதில்லை வெளிநாட்டு வர்த்தகம் உள்ளதனாலேயே இலங்கை பெற்றோலி யத்தை பயன்படுத்த முடிகிறது

"அடம்ஸ் ஸ்மித்" அவரது "தேசங்களின் செல்வம்" எனும் நூலில் சிறப்புமயமாக்கலானது பொருளாதாரத்தின் வினைவுத் திறனையும் அதே போன்று அவ்வளங்களைக் கொண்டுள்ளவர் களின் வினைத்திறனையும் வளர்ப்பதற்குக் காரணமாய் அமையுமெனச் சுட்டிக்காட்டுகின்றார். இதற் கிணங்க சர்வதேச வர்த்தகத்தின் மூலம் ஒரு நாட்டிற்கு தமது நாட்டினால் மிகக் குறைந்த செல வினத்தில் உற்பத்தி செய்யக் கூடிய பண்டங்க ளைச் சிறப்பியல்புமயமாக்கி மேலதிக உற்பத் தியை ஏற்றுமதி செய்வதற்கும் உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்கின்ற போது செலவினத்தை ஏற்க வேண்டி வருகின்ற பண்டங்களை இறக்குமதி செய்தவற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

1817இல் டேவிட் ரிக்காடோவினால் முன் வைக்கப்பட்ட ஒப்பீட்டு அனுகூலக்கோட்பாடு சர்வ தேச சிறப்புமயமாக்கலின் நலன்களை விளக்கு வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஒரு நாட்டிற்கு தமக்குரிய வளங்களைக் கொண்டு அந்நாட்டிற்கு ஒப்பீட்டு ரீதியில் அதிக நலன்களைப் பெற்றுத்தரு கின்ற பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

### 1.2 வர்த்தகத்தின் அனுகூலங்கள்

1. ஒப்பீட்டு நலன் அடிப்படையில் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யும் நாடுகள் தமது மிகை உற்பத்தியை ஏற்றுமதி செய்ய சர்வதேச வர்த்தகம் உதவுகிறது

2. தமது நாட்டினுள் உற்பத்தி செய்வதற்குக் தேவையான வளங்கள் இல்லாத எந்தவொரு பண்டத்தையும் அல்லது சேவையையும் பயன் படுத்துவதற்கு ஒவ்வொரு நாட்டிற்கும் இயலு மாயிருக்கும்
3. பரிமாற்றத்தின் மூலம் ஓர் நாடு தனது உற்பத்தி இயலளவாலும் கூடிய மட்டத்தில் நுகர்வு செய்ய முடிதல்.
4. வெளிநாட்டு வர்த்தகத்தின் ஊடாக வளர்ச்சி யடைகின்ற சர்வதேச தொடர்புகளின் காரண மாக வெளிநாட்டு முதலீடுகள் வெளிநாட்டு உதவிகள் ஆகியவற்றை தமது நாட்டின் முன் னேற்றத்தின் பொருட்டு பெற்றுக்கொள்ள முடியும்.
5. புதிய தொழில் வாய்ப்புக்களையும், தொழில் நுட்ப அறிவையும் பெற்றுக்கொள்ள முடிதல்
6. போக்குவரத்து, வங்கித்தொழில், காப்புறுதித் தொழிற்பாடுகள் ஆகிய பல சேவைகளினதும் முன்னேற்றத்திற்கும் வாய்ப்பளித்துள்ளது.

**1.3 சுதந்திர வர்த்தகத்துக்கு உள்ள தடைகள்**
நிர்வாகிகளால் விதிக்கப்படுகின்ற
அ. தீர்வை வரிகள்
ஆ. தீர்வை வரிகளற்ற கட்டுப்பாடுகள்

**அ. தீர்வை வரி**

தீர்வை வரி என்பது மற்றும் இறக்குமதிகளின் மீது வாதிக்கப்படுகின்ற வரியாகும். ஏற்றுமதியின் மீத விதிக்கப்படுகின்ற வரியை ஏற்றுமதித் தீர்வை வரி என்றும் இறக்குமதியின் மீது விதிக்கப்படு கின்ற வரியை இறக்குமதித் தீர்வை வரி என்றும் குறிப்பிடுகின்றோம்.

ஏற்றுமதித் தீர்வை வரியின் காரணமாக (ஏற்றுமதியாளர்கள் பண்டங்களின் விலையை அதிகரிப்பதன் காரணமாக) காரணமாக மேற்படி பண்டங்களை ஏனையநாடுகள் கொள்வனவு செய்கின்ற போது அதிக விலையைச் செலுத்த நேரிடுவதனால் இது ஏற்றுமதிக்கான ஆர்வத் தைக் குறைக்கின்றது. இதன் காரணமாக தற் போது பெரும்பாலான நாடுகள் ஏற்றுமதியின் மீது விதிக்கப்பட்டிருந்த வரியை (பளிங்கு இருப்பு உருக்க உற்பத்திகள் தவிர்ந்து) இரத்து செய்தது ஆயினும் விசேட சந்தர்ப்பங்களில் ஏதேனுமொரு பண்டத்தின் ஏற்றுமதி தொடர்பான ஆர்வத்தை குறைக்க வேண்டுமெனக் கருதுகின்ற போது ஏற்றுமதி வரி அல்லது அதற்குச் சமமான தாக் கத்தை ஏற்படுத்துகின்ற விசேட வரி அல்லது மேற்படி கைத்தொழிலின் நன்மையைக் கருதி முதலீடு செய்யும் பொருட்டு செஸ்வரியை வதிப்ப தற்கு அரசாங்கத்திற்கு முடியுமாயுள்ளது.

தற்போது தேயிலை, தெங்கு, தெங்குஉற் பத்திகள், மரமுந்திரிகைப் பருப்பு, பதனிடப்படாத தோல், இரும்பு அல்லாத ஏனைய உலோகப் பொருட்கள் ஆகியன மீது செஸ்வரி விதிக்கப் பட்டுள்ளது.

இறக்குமதியின் மீது தீர்வை வரி விதிக்கப் பட்டுள்ளதன் காரணத்தினால் அப்பண்டங் களைக் கொள்ளளவு செய்கின்ற நுகர்வோருக்கு குறிப்பிட்ட பண்டத்துக்கு அதிக விலையைச் செலுத்த நேரிடுகின்றது. இதன் காரணமாக மேற்படி பண்டங்களை உற்பத்தி செய்கின்ற உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பண்டங்களுக்கு செயற்கைப் பாதுகாப்பொன்று கிடைகின்றது.

Eg:- வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய் கின்ற போது 500/= ஆகின்ற ஒரு கைப் பையின் மீது 100/= வரி விதிக்கப்பட்ட தாகக் கருதுவோம். அப்போது கைப் பையை சந்தையில் விற்பனை செய்கின்ற போது 600/= ஐ விடக் கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதற்கு இறக்கு மதியாளருக்கு நேரிடுகின்றது. உள்நாட்டு உற்பத்தியாளருக்கு மேற்படி அதிக விலை யில் தனது உற்பத்தியை விற்பனை செய் வதற்கு இம் முறையின் கீழ் வாய்ப்புக் கிடைக்கின்றது. ஆதலால் இது நுகர்வோர்

மீது விதிக்கப்பட்ட ஒரு வரியாயிருப்பதைப் போன்றே உற்பத்தியாளருக்கு வழங்கப் படுகின்ற ஒரு நிவாரணமாகவும் விளங்கு கின்றது.

தீர்வை வரியின் மூலம் அரசாங்கத்துக்கு வருமானம் கிடைக்கின்ற போதிலும் வருமானத் தைக் சேகரிக்க வேண்டுமென்ற குறிக்கோளின் அடிப்படையின் தீர்வை வரி விதிப்பதை ஒரு நாடு பொதுவாக மேற்கொள்வதில்லை.

**ஆ. தீர்வை வரியற்ற தன்னார்வ ஏற்றமதிப் பங்குக் கட்டுப்பாடுகள்**

தன்னார்வ ஏற்றுமதிப்பங்கு முறையின் மூலம் ஒரு நாட்டிலிருந்து தமது நாட்டுக்கு ஏற்று மதி செய்யப்படுகின்ற ஒரு சில பண்டங்களின் அளவைக் கட்டுப்படுத்தும் பொருட்டு விதிக்கப் படும் ஒரு தடையாக இது உள்ளது. இதன் கீழ் நாம் அனுமதிக்கின்ற எல்லையைத் தாண்டி தமது நாட்டிற்கு ஒரு சில விசேட பண்டங்களை ஏற்றுமதி செய்ய வேண்டாமென குறிப்பிட்ட நாட்டிற்கு அறி விக்கப்படுகின்றது. இதன்படி குறித்த நாட்டிற்கு மேற்படி வரையறைத் தாண்டுகின்ற விதத்தில் இறக்குமதி செய்ய முடியாதென்பதோடு ஏற்றுமதி செய்கின்ற நாடு மேலதிகமான தொகையை கப்பல் மூலம் அனுப்புகின்ற போது அவற்றைத் திருப்பி அனுப்புவதற்கு தடை செய்வதற்கு கொள் வனவு செய்கின்ற நாடு நடவடிக்கையெடுக்கம். இதனால் இறக்குமதி தொடர்பில் மிகவும் கவன மாயிருப்பதற்கு அரச நிறுவனமொன்றுக்கு அதி காரம் வழங்குவதோடு ஏற்றுமதி நாட்டில் முகவர் நிறுவனமொன்று அரச அனுரசனையுடன் நிறு வப்படும்.

குறித்த பண்டத்தை விற்பனை செய்கின்ற நாடு கொள்வனவு செய்கின்ற நாடு ஆகிய 2 நாடுகளினதும் தரப்பினர்கள் குறித்தபண்டம் தொடர்பில் உரிமப்பத்திரங்களை வழங்குவர். இவ் வாறான உடன்படிக்கைகள் பெரும்பாலும் தரப் பினர்களுக்கிடையே கலந்துரையாடல்களின் மூலம் பரஸ்பர புரிந்துணர்வுடன் நடைபெறும்.

**இறக்குமதி அல்லது ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதித்தல்**

இறக்குமதிக்க கட்டுப்பாட்டின் கீழ் குறித்த நாட்டிற்கு குறிப்பிட்டதொரு கால கட்டத்தினுள் தெரிவு செய்யப்பட்ட ஏதேனுமொரு பண்டத்தை அல்லது ஒரு சில பண்டங்களை இறக்குமதி செய்தல் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ்வாறான பண்டங்களின் இறக்குமதியின் பொருட்டு இறக்கு மதியாளர்கள் குறித்த அதிகாரம் வாய்ந்தவர்களிட மிருந்து உரிமைப்பத்திரம் பெறுதல் வேண்டும். இலங்கையில் இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப் பாட்டுத் திணைக்களம் மேற்படி பணியை நிறை வேற்றுகின்றது. குறிப்பாக ஆயுதங்கள், நாட்டின் சுற்றாடலுக்கும் பயிர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத் தக்கூடிய தாவரக்கன்றுகள் மற்றும் வகைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றபோது இவ் வாறான உரிமப் பத்திரங்களைப் பெறுதல் வேண்டும்.

ஏற்றுமதி தொடர்பிலும் இவ்வாறான உரிமப் பத்திரங்களின் தேவையை வலியுறுத்துகின் சந்தர்ப்பங்களும் உள்ளன.

Eg:- இலங்கையில் இருந்து யானைத் தந் தங்கள், கருங்காலி மரங்கள் 1945ம் ஆண்டுக்கு முன்னர் இறக்குமதி செய்யப் பட்ட மோட்டார் வாகனங்கள் ஆகிய 30 பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்கு உரமப் பத்திரம் பெறுதல் வேண்டும்.

**இறக்குமதி மீது தடை விதித்தல்**

ஏதேனுமொரு வெளிநாட்டிலிருந்து பண்டங் களை இறக்குமதி செய்தல் அல்லது அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்தல் முற்றாக தடை செய்யப்படும். சந்தர்ப்பங்களும் உள்ளன. இது பெரும்பாலும் அரசியல் தேவைகளின் அடிப்படையில் நடை பெறுகின்றன. சில காலத்துக்கு முன்னர் தென்

ஆபிரிக்காவிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்தல் தடை செய்யப்பட்டிருத்தல்.

**உள்நாட்டு உற்பத்தியாளருக்கு நிவாரணங்களை அல்லது ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கல்**

இலங்கை உட்பட உலகின் பெரும்பாலான நாடுகள் தமது ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்றுமதியாளருக்கு அதிக நிவாரணங் களை வழங்குகின்றன. சலுகை வட்டிக் கடன் வழங்குதல் அரச வரிச்சலுகைகள், வரி மன்னிப் புக்கள் ஆகிய பல்வேறு நிவாரணங்கள் இவ்வகை யைச் சார்ந்தனவாயுள்ளன.

**உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியை மதிப் பிறக்கம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை யெடுத்தல்**

உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி குறைவடைவதன் காரணத்தினால் உள்நாட்டுச் சந்தையில் இறக்குமதிகளின் விலை அதிகரிப்பதன் மூலம் இறக்குமதி தொடர்பிலான ஆர்வம் குறைக்கப்படுவதோடு அந்நாட்டின் ஏற்று மதிகளின் விலை வெளிநாட்டவர்களுக்குக் குறை வாயிருப்பதன் மூலம் போட்டி நிலை அதிகரிக் கின்றது. ஆயினும் இறக்குமதியின் அளவு குறை வடைதல் அல்லது ஏற்றுமதியின் அளவு அதிகரித் தலானது அவற்றின் விலையில் இருந்து கொடுக் கும் தன்மையில் தங்கியுள்ளது உள்நாட்டுச் சந் தையில் குறிப்பிட்ட பண்டத்தின் கேள்விக்கு உள்ள விலையின் இசைந்து கொடுக்கும் தன்மையைப் பொறுத்து இறக்குமதியின் அளவு குறைவடை தலும் வெளிநாடுகளில் குறிப்பிட்ட பண்டத்துக்க உள்ள கேள்விக்கான விலையின் இசைந்து கொடுக்கும் தன்மையைப் பொறுத்து ஏற்று மதியின் அளவு அதிகரித்தலும் தங்கியுள்ளது.

**வெளிநாட்டு செலாவணிக் கட்டுப்பாடு**

ஒரு சில நாடுகள் தமக்கு மிகவும் அரிதான வளமாகவுள்ள வெளிநாட்டுச் செலவாணியைப் பாதுகாக்கும் பொருட்டு இறக்குமதியைக் கட்டுப் படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளைப் பயன்படுத்து கின்றன.

**ஏனைய வரையறைகள்**

அரசாங்கத்தல் பண்டங்கள் கொள்வனவு செய்யப்படுகின்ற போது மிக சிக்கலான நடை முறைகளைக் கடைப்பிடித்தல் பெரும்பாலான இறக்குமதிகள் மீது தொழில்நுட்பதரப் பரி சோதனைகளின் தேவையை விதித்தல் ஆகிய வற்றையும், அரசாங்கம் பண்டங்களை கொள் வனவு செய்கின்ற போது உள்நாட்டு உற்பத்தி களுக்கு முன்னுரிமையளித்தல் ஆகியவற்றையும் இதன் கீழ் குறிப்பிடலாம்.

### 1.4 சுதந்திர வெளிநாட்டு வர்த்தகத்துக்கு எதிராக மேலெழுகின்ற தாக்கங்கள்

**உள்நாட்டுக் கைத்தொழில்களையும் தொழில் புரிவோரையும் பாதுகாத்தல்**

வெளிநாட்டு வர்த்தகத்தின் காரணமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங் களையும் அப்பண்டங்களுக்கான மாற்றீடுகளை யும் உள்நாட்டு உற்பத்திகளை விடக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது விலை குறைந்த பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதன் காரணத்தினால் ஒரு சில உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு மேற்படி இறக்குமதிகளுடன் போட்டியிடக் கூடிய வகையில் சந்தையில் நீடித்திருப்பதற்கு முடியாத நிலை உரு வாகும் உள்நாட்டுக் கைத்தொழில்கள் மூடப்படுவ தனைத் தவிர்ப்பதற்கும் அவற்றில் சேவையாற்று கின்ற பணியாளர்களது தொழிலைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகவும் சர்வதேச வர்த்தகத்துக்கு தடை விதித்தல் அவசியமென வாதிடப்படுகின்றது.

**இளம் பராயத்திலுள்ள கைத்தொழில்களைப் பாதுகாத்தல் தொடர்பிலான தாக்கம்**

இளம் பராயத்திலுள்ள கைத்தொழில்கள்

அல்லது புதிய கைத்தொழில்களை ஆரம்ப கட்டத்தில் பாதுகாத்தல் வேண்டுமென வாதிடப்படு கின்றது. உள்நாட்டு இளம் பராயத்திலுள்ள கைத் தொழில்களால் பாரிய அளவிலான அனுபவம் வாய்ந்த வெளிநாட்டுப் போட்டியாளர்களுடன் போட்டியிட வேண்டியுள்ளதன் காரணத்தினால் கைத்தொழில்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பளித் தல் வேண்டுமென்பது இதன் கருத்தாகும்.

**பாதுகாப்ப நோக்கமின்றி தடைகளை விதித்தல் தொடர்பிலான தாக்கம்**

பாதுகாப்பை வழங்குகின்ற நோக்கம் இல்லாதிருப்பினும், தீர்வைவரிகள் விதிக்கப்படுவ தற்குச் சார்பாக ஒரு சில தாக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன.

**1. தேசிய பாதுகாப்பு**

எந்தவொரு நாட்டிலும் சுகந்திரமாக ஆயுத வர்த்தகம் நடைபெறுவதில்லை பொது மக்களது பாதுகாப்பை குறிப்பிடத்தக்கதொரு மட்டத்திற்கு வழங்குவதற்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு இயலுமானவாறு மேற்படி கைத்தொழில்களுக்கு ஆர்வமூட்டுகின்ற விதத் தில் பாதுகாப்பை ஏற்பாடு செய்தல் வேண்டுமென் பதே மேற்படி பாதுகாப்புத் தர்க்கத்தின் கருத்தாகும்.

**2. வர்த்தக வீதத்தின் அடிப்படையிலான தர்க்கம்**

ஒரு நாடு இறக்குமதிப் பண்டங்களின் மீது வரி விதிப்பதன் மூலம் வர்த்தக வீதத்தை தமது நாட்டிற்கு நன்மையான விதத்தில் நெறிப்படுத்து வதற்கு நடவடிக்கையெடுத்தல் இதன் கருத்தாகும். நாட்டில் இறக்குமதிக்கான கேள்வியைக் குறைக் கும் பொருட்டு அதன் மீது வரி விதிப்பதன் மூலம் பாரிய இறக்குமதியாளர் தமது இறக்குமதிப் பண்டங்களின் விலைக்கு ஒப்பீட்டளவில் உலக சந்தையில் குறிப்பிட்ட பண்டத்தின் விலையைக் குறைப்பதற்கு நிர்ப்பந்தங்களைச் செய்யலாம்.

**உசாத்துணை நூல் :**

குறிப்பேடு - 2006 ஜீலை - ஆகஸ்ட்

# தேசிய தொழில் முயற்சி வங்கி
# SME Bank

Gowsiga Kokularaja
2010 (Com)

பாரம்பரிய வங்கித்தொழிலில் இருந்து வேறு பட்டதாக நாட்டின் முயற்சியாண்மையை அபிவிருத்தி செய்யும் பிரதான நோக்கில் நிறுவப்பட்ட வங்கி தேசிய தொழில் முயற்சி வங்கி ஆகும்.

இதன் சகல பங்குகளையும் அரசாங்கமே வைத்துள்ளது

- இது உரிமம் பெற்ற விசேட வங்கி ஆகும்.
- இது 2005 யூன் 29ல் ஆரம்பிக்கப்பட்டது.
- இது தொழில் முயற்சி ஆபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் கீழ் உள்ளது.

இவ் வங்கித் தொழில் முயற்சி அபிவிருத்தி களை அங்கீகரிப்பதுடன் சிறிய (small) மற்றும் நடுத்தர (Medium) தொழில் முயற்சிகளுக்கான நிதியளிப்பதை தூண்டுவதால் SME Bank எனவும் அழைப்பர்.

### SME வங்கியின் தொலை நோக்கு

முயற்சியாளர்களுக்கு பல்வேறு சேவை களை வழங்கி வலுவான முயற்சியாண்மை கலாச்சாரத்தை கட்டியெழுப்புவதன் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை அபி விருத்தி செய்தல்.

### SME வங்கியின் நோக்கம்

கடன்கள் மற்றும் சேவைகளை ஆற்றுவதன் மூலம் சிறிய நடுத்தர வணிகங்களை அபிவிருத்தி செய்வதும் வேலை வாய்ப்புக்களை பெருக்கு வதும்

### SME வங்கியின் பிரதான தொழிற்பாடுகள்

1. ஆலோசனை வழங்குதல்
2. நிதி ரீதியற்ற வர்த்தக ஒத்துழைப்புக்களை செய்தல்
3. கூட்டு முயற்சி நிதி ஏற்பாடுகளை செய்து கொடுத்தல்
4. தொழில் தேர்ச்சி பெற்றவர்களை அழைத்து SME துறையை அபிவிருத்தி செய்தல்
5. விசேட செயற்திட்டக் கடன்களை வழங்குதல்
6. கருத்தரங்குகள், பயிற்சித்திட்டங்களை ஏற் பாடு செய்தல்
7. கணனி வலையமைப்பின் ஊடாக ஆலோ சனை சேவைகளை பெற உதவுதல்.

### SME வங்கி எந்த வேலைகளுக்கு கடன்களை வழங்குகிறது

1. இரத்தினக் கல் வெட்டுதலும் பட்டைதீட்டுதலும்
2. அழகிய மீன் வளர்ப்பு
3. ஆடைதயாரிப்பு
4. மோட்டார் வாகனங்களைத் திருத்துதல்
5. தச்சுத்தொழில்
6. சிறு தொழில்கள்
7. சிகை அலங்காரம்
8. பொன் ஆபரணங்களைத் தயாரித்தல்
9. உருட்டும் கதிரை தயாரித்தல்
10. நெல் குத்தும் ஆலைகளை உருவாக்குதல்
11. நவீன தொழில்நுட்பத்துடன் பைவர் கிளாஸ் உற்பத்தி
12. பூந்தோட்ட செய்கை

***எவ்வாறு SME வங்கி பாரம்பரிய வங்கித் தொழிலில் இருந்து விலகியதாக தொழிற்படுகின்றது.***

புத்தாக்கங்களை செய்பவர்களுக்கு ஆலோசனை, நிதிவசதி உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஊடாக தொழில் முயற்சிகளின் முக்கியத்துவத்தினை அங்கீகரிப்பதன் மூலம் பாரம்பரிய வங்கித் தொழிலில் இருந்து விலகி தொழிற்படுகின்றது.

**SME *வங்கியின் கடன் திட்டங்களில் உள்ள நன்மைகள்***

1. பல ஆவணங்களை பூர்த்தி செய்ய வேண்டிய தில்லை
2. கடனுக்கான வங்கியின் சட்டதிட்டங்கள் இலகுவாக உள்ளது.
3. குறைந்த வட்டி
4. உரிய வேளையில் கடன் பெற முடிதல்

**SME *வங்கியின் கிளை விரிவாக்கங்கள்***

தலைமை அலுவலகம் - கொழும்பு - 2

கிளைகள்

1. கண்டி
2. அனுராதபுரம்
3. மாத்தறை
4. கேகாலை
5. காலி

சில இடங்களில் தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள் ஊடாகவும் இவ் வங்கி சேவையாற்றுகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**

ஜகத் பண்டாரநாயக்கா உயர்தர வணிககல்வி

பஸில் ஜெனதாஸ் வணிகக்கல்வி

# எல்லைக்கிரயவியல்
# Marginal Costing

Srirangani Muruganathan
2010 (Com)

**எல்லைகிரயவியல்**

எல்லைக்கிரயவியல் என்பது நிலையான கிரயத்தையும் மாறும் கிரயத்தையும் வேறுபடுத்து கின்ற ஓர் நுட்பமாகும்.

மாறும் கிரயமானது கிரய அலகுகளுக்கு தாக்கல் செய்யப்படுகின்றது. நிலையான கிரய மானது ஒவ்வொரு காலப்பகுதியுடமை தொடர்பு படக்கூடியது.

எல்லைக் கிரயவியல் நுட்பமானது குறுங் கால தீர்மானமெடுத்தலுக்கு உதவுகின்ற ஓர் நுட்ப மாகும்.

**எல்லைக் கிரயவியலில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் முறை**

எல்லைக்கிரயவியலில் விற்பனை விலையி லிருந்து மாறும் கிரயம் கழிக்கப்பட்டு பெறப்படும் பங்களிப்பின் அடிப்படையிலேயே குறுங்காலத் தீர்மானம் எடுத்தலானது மேற்கொள்ளப்படுகின்றது.

பங்களிப்பு = விற்பனை விலை – மாறும் கிரயம்

**எல்லைக்கிரயம்**

நேர் பொருட் கிரயம், நேர் கூலிக்கிரயம், நேர் பிற செலவுக்கிரயம், மாறும் மேந்தலை என்பவற்றை உள்ளடக்கிய பெறுமானம் எல்லைக்கிரயமாகும்

| | | |
|---|---|---|
| நேர் மூலப்பொருள் | XXX | |
| நேர் கூலிக்கிரயம் | XX | |
| நேர் பிற செலவு கிரயம் | XX | |
| மூலக்கிரயம் | | XXX |
| உற்பத்தி மாறும் மேந்தலை | | XX |
| நிர்வாக மாறும் மேந்தலை | | XX |
| விற்பனை மாறும் மேந்தலை | XX | XXX |
| எல்லைக்கிரயம் | | XXXX |

**எல்லைக்கிரயவியலில் இலாபநட்டம் கண்டறியப்படும் முறை**

விற்பனை வருமானத்திலிருந்து மாறும் கிரயமானது கழித்து பெறப்பட்ட பங்களிப்பு தொகைக்கெதிராக அக்காலப்பகுதியில் ஏற்பட்ட நிலையான கிரயத்தை தாக்கல் செய்வதன் மூலம் இலாபநட்டத்தை அறியும் ஓர் கணக்கீட்டு நுட்பமாக இது அமையும்

| | |
|---|---|
| விற்பனை விலை | XXX |
| (-) மாறும் கிரயம் | (XX) |
| பங்களிப்பு | XXX |
| (-) நிலையான கிரயம் | (XX) |
| தேறிய லாபம் | XXX |

**எல்லைக்கிரயவியல் நுட்பத்தை பயன்படுத்தி எடுக்கப்படும் தீர்மானங்கள்**

1. விலை நிர்ணயம்
2. உற்பத்தி மேற்கொள்ளப்படும் முறைக்கான தீர்மானம்
3. பொருளை உற்பத்தி செய்வதா? அல்லது கொள்வனவு செய்வதா? என்ற தீர்மானம்
4. விற்பனைத் தொகையில் அல்லது விற்பனை கலவையில் ஏற்படக்கூடிய மாற்றத்தின் விளைவுகள் மதிப்பிடல்

**பங்களிப்பு**

விற்பனை வருமானத்திற்கும் மாறும் கிரயத்திற்கும் இடையிலான வேறுபாடு பங்களிப்பு ஆகும். அதாவது விற்பனை வருமானத்திலிருந்து மாறும் கிரயத்தைக் கழிப்பதன் மூலம் பங்களிப்பு கணிப்பிடப்படும். இப்பங்களிப்பு நிலையான செலவுடன் இலாபங்களைக் கூட்டுவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும்.

பங்களிப்பு = விற்பனை வருமானம் - மாறும் கிரயம்

பங்களிப்பு = நிலையான செலவு + இலாபம்

**அலகுக்கான பங்களிப்பு**

ஒரு அலகுக்கான விற்பனை விலைக்கும் அலகிற்கான மாறும் கிரயத்திற்குமிடையிலான வேறுபாடே பங்களிப்பு ஆகும்.

அலகுக்கான பங்களிப்பு = அலகிற்கான விற்பனை விலை - அலகுக்கான மாறும் கிரயம்

**மொத்த பங்களிப்பு**

குறிப்பிட்ட செயற்பாட்டு மட்டத்தில் மொத்த விற்பனை வருமானத்திற்கும் மொத்த மாறும் கிரயத்திற்குமிடையிலான வேறுபாடு மொத்த பங்களிப்பு ஆகும்.

மொத்தப்பங்களிப்பு = மொத்த விற்பனை விலை - மொத்த மாறும் கிரயம்

இலாபநட்டமற்ற புள்ளியில் மொத்த பங்களிப்பும் மொத்த நிலையான செலவும் சமமானதாகும்.

மொத்த பங்களிப்பு = அலகிற்கான பங்களிப்பு X விற்கப்பட்ட மொத்த அலகுகள்

மொத்த பங்களிப்பு = மொத்த நிலையான கிரயம் + இலாபம்

**பங்களிப்பு விற்பனை வீதம்**

விற்பனை வருமானத்திற்கும் பங்களிப்புக்கும் இடையிலான தொடர்பை காட்டுவது பங்களிப்பு விற்பனை வீதமாகும். அதாவது பங்களிப்பை விற்பனை வருமானத்தின் நூற்று வீதமாக கணிப்பிட்டு கூறுவதாகும்.

இப்பங்களிப்பு விற்பனை வீதமானது எல்லா விற்பனை மட்டங்களிலும் மாறாது காணப்படும். அதாவது விற்பனை விலைக்கும் பங்களிப்பிற்கும் இடையே மாறாத தொடர்பு காணப்படும்.

$$\text{பங்களிப்பு விற்பனை வீதம்} = \frac{\text{பங்களிப்பு X 100}}{\text{விற்பனை}}$$

அல்லது

$$\text{பங்களிப்பு விற்பனை வீதம்} = \frac{\text{அலகொன்றிற்கான பங்களிப்பு X 100}}{\text{அலகொன்றிற்கான விற்பனைவிலை}}$$

**இலாபநட்டமற்ற புள்ளியில் பகுப்பாய்வு அல்லது சமப்பாட்டு புள்ளி பகுப்பாய்வு அல்லது கிரய தொகை இலாப பகுப்பாய்வு**

பல்வேறு செயற்பாட்டு மட்டங்களில் கிரயம், தொகை (வருமானம்) இலாபம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை ஆய்வு செய்கின்ற பகுப்பாய்வே இலாப நட்டமற்ற புள்ளியில் பகுப்பாய்வு எனப்படும். இத்தொடர்பை வரைபட ரீதியாகவோ வாய்ப்பாட்டு ரீதியாகவோ வெளிப்படுத்தலாம். இலாப நட்டமற்ற புள்ளியில் பகுப்பாய்வானது வருமானங்களும் கிரயங்களும் சமமாக இருக்கின்ற விற்பனை மட்டத்தை சுட்டி காட்டுகிறது.

**இலாபநட்டமற்ற புள்ளி அல்லது சமப்பாட்டு புள்ளி**

மொத்த வருமானமும் மொத்த கிரயமும் சமனாக இருக்கின்ற விற்பனைத் தொகையினை சமப்பாட்டு புள்ளி என்பர். அதாவது இலாபமோ அல்லது நட்டமோ ஏற்படாத செயற்பாட்டு மட்டத்தை இலாப நட்டமற்ற புள்ளி எனப்படும்.

$$\text{இலாப நட்டமற்ற புள்ளி (அலகுகளில்)} = \frac{\text{நிலையான கிரயம்}}{\text{அலகுக்கான பங்களிப்பு}}$$

இலாபநட்டமற்ற புள்ளி (விற்பனை பெறுமதி) =

$$\frac{\text{நிலையான கிரயம் X அலகிற்கான விற்பனை விலை}}{\text{அலகிற்கான பங்களிப்பு}}$$

**இலாப நட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வின் எடுகோள்கள்**

1. எல்லாக் கிரயங்களும் மாறும் கிரயம், நிலையான கிரயம் என பிரிக்க கூடியவை
2. நிலையான கிரயம் குறிப்பிட்ட நடவடிக்கை மட்டத்துள் மாற்றமடையாது இருக்கும்
3. ஒரு அலகுக்கான மாறும் கிரயம் நிலையாக இருக்கும்
4. ஒரு அலகுக்கான விற்பனை விலை மாறாது இருக்கும்
5. கிரயமும் வருமானமும் தொகை மாற்றத்திற்கு ஏற்ப மாற்றமடையும்
6. தொழில்நுட்பம், உற்பத்தி முறைமை, வினைதிறமை என்பன மாற்றமடையாது.

**இலாபநட்டமற்ற புள்ளி பகுப்பாய்வின் நன்மைகள் அல்லது நோக்கங்கள்**

1. குறுங்கால திட்டமிடல் நோக்கத்திற்கு இது முக்கியத்துவம்
2. செயற்பாட்டு மட்டங்களில் மாற்றம் ஏற்படுமிடத்து கிரயம், வருமானம் வெளியீட்டு மட்டம் அவற்றின் பெறுபேறான இலாபம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை வெளிப்படுத்தும்
3. குறுங்காலத்தில விற்பனை கலவை, விலையிடல் கொள்கை, விசேட கட்டளை, ஏற்று கொள்ளல் போன்ற தீர்மானம் மேற்கொள்ள உதவும்.
4. பாதுகாப்பு எல்லைகளை கண்டறிதல்
5. பல்வேறு செயற்பாட்டு மட்டங்களிலும் இலாபங்களினதும் இலாப இயலுமையினதும் தன்மைகளை அறிய முடிதல்
6. குறித்த இலாப இலக்கை அடைவதற்கு மேற்கொள்ள வேண்டிய விற்பனையை அறிதல்.

**சமப்பாட்டு புள்ளியை கீழ் கொண்டு வருவதற்கான வழி முறைகள்**

1. மொத்த கிரயத்தை குறைத்தல்
2. மாறும் கிரயத்தை குறைத்தல்
3. விற்பனை வருமானத்தை அதிகரித்தல்

**சமப்பாட்டுப் புள்ளியைத் தீர்மானிக்கும் அணுகு முறைகள்**

1. சூத்திர ரீதியான அணுகு முறை
2. வரைபட ரீதியான அணுகு முறை

**பாதுகாப்பு எல்லை**

எதிர்பார்க்கப்பட்ட விற்பனை மட்டத்திற்கும் இலாப நட்டமற்ற புள்ளிக்கும் இடையிலான வேறுபாடு பாதுகாப்பு எல்லையாகும். உதவு தொகை கணிப்பீடு செய்வதற்கான இரு விடயங்கள்

1. விற்பனை பெறுமதி
2. மாறும் கிரயம்

**பாதுகாப்பு இறுதி எல்லை (The margin of salary)**

பாதீடு செய்யப்பட்ட வெளியீட்டு மட்டத்திற்கும் இலாபநட்டமற்ற புள்ளியில் உள்ள வெளியீட்டு மட்டத்திற்கும் இடையிலான வேறுபாடே பாதுகாப்பின் இறுதி எல்லை எனப்படும். இதனை பாதீட்டு அலகின் விகிதாசாரமாகவும் வெளிப்படுத்தலாம்.

**இலாபநட்டமற்ற புள்ளி வரைபடம் (Breaker Even chart)**

இலாப நட்டமற்ற வரைபடம் ஒரு குறிக்கப்பட்ட வீச்சிற்குள் விற்பனை தொகையின் பல்வேறு மட்டங்களில் இலாபத்தையும் நட்டத்தையும் சுட்டிக் காட்டுகின்ற வரைபடமே இலாபநட்டமற்ற புள்ளி வரைபடமாகும்

இலாபநட்டமற்ற வரைபடத்தில் வருமானமும் கிரயமும் நிலைக்குத்து அச்சிலும் செயற்பாட்டு மட்டம் (அலகுகள்) கிடையச்சிலும் அமைத்து காணப்படுகின்றது.

இங்கு இலாப நட்டமற்ற புள்ளியானது விற்பனை வருமானக்கோடும் மொத்த கிரய கோடும் சந்திக்குமிடத்தில் நிர்ணயிக்கப்படுகிறது.

**வருமான கோடு -** இது மூலப்புள்ளியிலிருந்து ஆரம்பித்து எதிர்பார்க்கும் விற்பனை புள்ளிவரை வரையப்படும்.

**நிலையான செலவுக் கோடு -**

இது கிடையச்சிற்கு சமாந்தரமாக வரையப்படும்

**மொத்த கிரய கோடு -**

இது நிலையான செலவுக் கோட்டிலிருந்து ஆரம்பித்து கிடையச்சில் எதிர் பார்க்கின்ற விற்பனை அலகுகளில் மொத்த செலவு வெளிப்படுத்தும் புள்ளி வரையப் படும்.

**உசாத்துணை நூல்கள் :**

C. Lucey - Costing Accounting 5th Edison

S.N. Maheswary - Management Accounting Financial Control

# உள்நாட்டு கடன்கருவிகள்

Snushiya Arulnayakam
2010 (Com)

**அறிமுகம்**

ஒரு நாட்டில் பொது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளுதலும் சமூகத்தை நீடித்து நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தி இலக்கின் பால் இட்டுச் செல்வதும் அரசாங்கத்தினால் மட்டுமே நடைபெறுகின்றது. சமூகத்தின் பொதுத் தேவைகளை நிறைவேற்றி மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் உள்ள மக்களைக் கொண்ட ஒரு நாட்டை உருவாக்குதல் அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அரசாங்கத்தின் பொது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டும், உட்கட்டமைப்பு வசதியின் அபிவிருத்தியின் பொருட்டும் மிக அதிகமான செலவீனத்தை ஏற்பதற்கு அரசாங்கத்துக்கு நேரிடுகின்றது. அத்தகைய செலவை ஈட்டிக்கொள்ளும் பொருட்டு ஒரு அரசாங்கம் ஒரு சில திட்டங்களைச் சமர்பிக்கும். வரவு செலவுத்திட்ட அறிக்கையின் மூலம் அத்தகைய திட்டமே சமர்ப்பிக்கப் படுகின்றது.

அரசாங்கத்தின் பிரதானமான வழியாக வரி முறைகளே உள்ளன. உத்தேச வரிமுறைகள் மற்றும் மாற்றல் வருமானத்தின் மூலம் செலவுத் தரப்பு சமநிலையாக்கப்படாத பட்சத்தில் அரசாங்கம் ஒரு சில நிதியியல் கஸ்டநிலைமைகளுக்கு முகம் கொடுக்கும். அதாவது வரவை விட செலவினத் தலைப்பு அதிகரிக்கின்ற போது பற்றாக்குறை உருவாகுவதைத் தவிர்க்க முடியாது. அத்தகைய பற்றாக்குறை வரவு, செலவுப் பற்றாக்குறையாகும். அத்தகைய பற்றாக்குறையை நிறைவு செய்ய முடியாதிருப்பின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்படும். ஆயினும் அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதைக் கைவிட முடியாது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசாங்கம் கடன் துறையின் பால் கவனத்தைச் செலுத்தும். கடன் பெறுதல் இரண்டு மூலங்களிலிருந்து நிறைவு செய்து கொள்ளப்படுகின்றது.

அரசாங்கம் நாட்டின் உள்ளகத்திலிருந்து முதலில் கடன் பெறுவதை உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுதல் எனக் குறிப்பிடுகின்றோம். வங்கி முறையிலிருந்தும் வங்கி முறைமைக்கு வெளியே சந்தையிலிருந்து கடன் பெறப்படுகின்றது. அவ்வாறு கடன் பெறுகின்ற போது பயன்படுத்தப்படுகின்ற ஒரு சில கடன் கருவிகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. திறைசேரி உண்டியல்கள்
2. திறைசேரி முறிகள்
3. ரூபாய்க் கடன்கள்

**திறைசேரி உண்டியல்கள்**

திறைசேரி உண்டியல்கள் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (Registered stocks and Securities Ordinance) மூலமே வழங்கப்படுகின்றன. திறைசேரி உண்டியல் என்பது அரசாங்கத்துக்குக் குறுகியகால ரீதியில் கடன் பெறும்

பொருட்டு இலங்கை மத்திய வங்கியினால் அதில் முதலீடு செய்பவர்களுக்கு வழங்கப்படும் ஒரு சான்றிதழாகும். இக் கருவியின் முதிர்ச்சிக் காலம் 3 மாதங்கள், 6 மாதங்கள் அல்லது உயர்ந்த பட்சம் ஒரு வருடம் ஆகலாம்.

திறைசேரி உண்டியல்கள் விலை மனுக் கோரல் நடைமுறையின் மூலமே வழங்கப்படு கின்றன. அதே போன்று இதற்காக செலுத்தப்படும் வட்டி வீதமும் ஏலத்திலேயே தீர்மானிக்கப்படும். ஏலத்திற்கான விலைக் கேள்விகள் முதனிலை வணிகர்களாலேயே சமர்ப்பிக்கப்படும். அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட தன் பின்னர் மத்திய வங்கியால் நியமிக்கப்படும் இடையீட்டாளர்களாக இருப்பார்கள்.

திறைசேரி உண்டியல்கள் பத்திரங்களற்ற வித்திலேயே முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும். அதாவது முன்னர் வழங்கிய தாள் சான்றிதழுக்கு பதிலாக தற்போது கணனியில் பதிவு செய்வதன் மூலம் வழங்கப்படுகின்ற கணனிக் குறிப் பொன்றே வழங்கப்படும்.

**திறைசேரி முறிகள்**

திறைசேரி உண்டியல்களை போன்றே திறை சேரி முறிகளும் "பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (Registered stocks and Securities Ordinance)" மூலமே வழங்கப்படுகின்றன. திறை சேரி முறிகள் என்பது நீண்டகாலக் கடன் கருவிகள் ஆகும். இலங்கை மத்திய வங்கி திறைசேரி முறி களை 1997 ஆம் ஆண்டிலேயே வழங்க ஆரம்பித் தது. திறைசேரி முறிகளின் முதிர்ச்சிக் காலம் உயர்ந்த பட்சம் 20 ஆண்டுகளாகும்.

திறைசேரி முறிகள் விலை மனுக்கோரல் நடைமுறையில் மூலமே வழங்கப்படுகின்றன. திறைசேரி முறிகளின் ஊடாக நடைபெறுகின்ற அனைத்து நடவடிக்கைகளும் பத்திரங்களற்ற பிணையங்கள் முறையின் படி நடைபெறுவதோடு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் (Real Time Gross Settlement System RTGS) ஊடாக அனைத்துக் கொடுப்பனவுத் தீர்ப்பனவு நடவடிக் கைகளும் வினைத்திறன் மிக்கதாக நடைபெறு கின்றன.

**ரூபாய்க் கடன்கள்**

இது ஒரு நீண்டகால கடன் கருவியாகும். ரூபாய்க கடனானது "பதிவு செய்யப்பட்ட பங்குத் தொகுதிகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்" கீழேயே வழங்கப்படுகின்றன. ரூபாய் கடன்கள் "ரெப்முறையின்" கீழேயே வழங்கப்படு கின்றன. அதாவது எதிர்பார்க்கப்படும் கடன் தொகையை முழுமையாக உள்ளடக்கும் வரை பங்களிப்புச் செய்யும் பொருட்டு கடன் தொகையை திறந்து வைத்திருக்கின்ற முறையாகும். இக் கடன் முறையின் முதிர்ச்சிக் காலம் 2 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்டதாயிருக்கும்.

**இலங்கை தேசத்தை கட்டியெழுப்பும் முறிகள்**

நாட்டின் நீண்டகால பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்களின் பொருட்டு மூலதனத்தை திரட்டுகின்ற பிரபல்யம் வாய்ந்த கடன்கருவியாக முறிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கிணங்க அரச கடன் தேவைகளை நிறைவேற்றிக் கொள் ளும் பொருட்டு கடந்த காலத்தில் அறிமுகப்படுத் தப்பட்ட 2 விசேட திறைசேரி முறிகளுள் ஒன்றே இலங்கை தேசத்தை கட்டியெழுப்பும் முறியாகும். இது 2006 பெப்ரவரி 3 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட்டது. வதிவுடையோரல்லாத இலங்கை பிரசைகளுக்கு இடர்நேர்வுகளற்ற பலமானதோரு முதலீட்டு வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தலே இம் முறிகள் வழங்கப்படுவதன் முக்கிய நோக்கமாகும்.

இம் முறிகளின் முதிர்ச்சிக்காலம் 5 வருட மாகும். இம் முறிகளில் 3 வகையான நாணயங் களையே முதலீடு செய்யலாமென்பது விசேடமான

பண்பாகும். அதாவது அமெரிக்க டொலர், ஸ்டர்லிங்பவுன் மற்றும் யூரோ ஆகிய நாணய வகைகளாகும்.

**இலங்கை அபிவிருத்தி முறி**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் 1957ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க வெளிநாட்டு கடன்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்படுகின்ற ஒரு கடன் கருவியாகும். இம் முறிகள் 2 வருடங்கள் வரை நீடிக்கின்ற ஒரு நீண்டகால முதலீடாகும். இம் முறிகள் தொடர்பான கொடுப்பனவுகளை மேற்கொள்ளுகின்ற உரிமம் பெற்ற பிரதிநிதியாக இலங்கை வங்கி விளங்குகின்றது. இலங்கை அபிவிருத்தி முறியானது நாட்டின் அபிவிருத்தியையே இலக்காகக் கொண்ட ஒரு கடன் கருவியாகும்.

**உசாத்துணை நூல் :**

குறிப்பேடு 2008 யூலை - ஆகஸ்ட் பக்கம் 14-15

# பொருளாதாரச் சிக்கனமும் பொருளாதாரச் சிக்கனமின்மையும்

Arthikga Krishnan
2010 (Com)


### பொருளாதாரச்சிக்கனம்

உற்பத்தி செய்ய வேண்டிய அளவு உற்பத்தி மட்டம் எனக் கருதப்படும். வணிக நிறுவனத்தில் உற்பத்தி செய்ய வேண்டிய அளவு வாடிக்கையாளர் கேள்வியினால் நிச்சயிக்கப்படும் ஆனாலும் உற்பத்தி அளவை நிச்சயிப்பதற்கான மற்றொரு முக்கிய காரணி பொருளாதாரச் சிக்கனம் ஆகும்.

### பொருளாதாரச்சிக்கனத்தின் வரைவிலக்கனம்

வணிக நிறுவனத்தின் பருமன், உற்பத்தி செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கை என்பவற்றினடிப்படையில் ஏற்படும் அனுகூல மான நிலைகள் பொருளாதாரச் சிக்கனம் எனக் கூறப்படும். பொதுவாக பேரளவு உற்பத்தியினால் நிறுவனம் அடையும் நலனைப் பொருளாதாரச் சிக்கனம் எனக் கூறலாம்.

பொருளாதாரச் சிக்கனத்தினால் ஒரு உருப் படிக்கான உற்பத்திக் கிரயம் வீழ்ச்சியடையும் பொருளாதாரச் சிக்கனத்தத்துவம் பேரளவு உற்பத்தி நிறுவனங்களுக்கு மட்டும் பொருத்தம் என கூறமுடியாது. ஒவ்வொரு நிறுவனமும் தனது நிறுவனத்திற்குப் பொருத்தமான சிக்கன மட்டத் தைத் தெரிவு செய்து கொள்ளுதல் வேண்டும். அது உத்தம மட்டம் எனப்படும். அது ஒரு உருப்படிக் கான சராசரிச்செலவு ஆகக்குறைவான மட்ட மாகும். உற்பத்தி அளவு அதிகரிக்கும் போது உத்தம மட்டம் குறைவடையும். அதிலும் சில வரை யறைகளுண்டு எனக் குறிப்பிடலாம். உற்பத்தி அளவு அதிகரிக்கும் போது பொருளாதாரச் சிக் கனம் இல்லையெனில் அது மறைப்பொருளா தாரச் சிக்கன மட்டமாகும். பேரளவு வணிகங்கள் பொருளாதாரச் சிக்கனத்தை அனுபவிக்கும் போது சிறிய நிறுவனங்கள் சிறியளவில் உற்பத்தி நலன் களை அடையமுடியும். பொருளாதாரச் சிக்கன மட்டம், சிக்கனமில்லாத மட்டமும் பின்வருமாறு வரைபடத்தில் காட்டப்படும்.




இந்த வரைபடத்தில் உற்பத்தி மட்டங்களை நிர்ணயிப்பது தொடர்பாக செல்வாக்கு செலுத்தும் பொருளாதார சிக்கன மட்டங்கள் காட்டப்படு கின்றன. அத்தோடு வணிகங்கள் மேலும் பருமன டைந்து செல்வதால் பொருளாதார சிக்கனம் ஏற்படுவது போல் பொருளாதார சிக்கனமின் மையும் தோற்றம் பெறுகிறது என்பதை இவ் வரைபடம் எடுத்துக் காட்டுகிறது.

### பொருளாதாரச்சிக்கனமின்மை

வணிகங்கள் பருமனடைவதால் பொருளா

தாரச் சிக்கனம் ஏற்படுவது போல பொருளாதார விரயங்களும் ஏற்படமுடியும். வணிக நிறுவனம் அதன் உத்தமமட்டத்தை விடப் பெரிதாகும் போது செயல்திறன் வீழ்ச்சியடைய முடியும். ஊழியர் பிரச்சனைகளும், முகாமைப் பிரச்சினைகளும் தோன்ற முடியும். சிறு வணிகங்களுடன் ஒப்பிடும் போது பேரளவு வணிக நிறுவனங்களில் நிர்வாகம் சிறிது கடினமானதாக இருக்க முடியும். ஒருங் கிணைத்தல் கடினமாக இருக்கலாம். ஊழியர் வினைத்திறன் குறைவாக இருக்க முடியும். அத்தோடு ஊழியர்களின் பங்களிப்பு தரப்பு சார்ந்த குறைபாடுடையதாக இருக்க முடியும். இத்தகைய சிக்னமற்ற தன்மையைப் போக்குவதற்கு சில வணிக நிறுவனங்கள் குறித்த சில உபாயங்களை பின்பற்றும்.

உதாரணமாக வணிக நிறுவனத்திற்குள் இருக்கும் திணைக்களங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். ஊழியர்களை குழுக்களாக இயங்க ஏற்பாடு செய்தல் என்பவற்றை குறிப்பிட முடியும்.

**பொருளாதாரச் சிக்கனத்தை 2 வகைப்படுத்தலாம் அவையாவன**

1. அகம்சார் பொருளாதாரச் சிக்கனம்
2. புறஞ்சார் பொருளாதாரச் சிக்கனம்

**அகம்சார் பொருளாதாரச் சிக்கனம்** Internal Economics of scale

வணிக பருமனடையும் போது உற்பத்திச் செயற்பாட்டினாலும் அதன் அமைப்பு முறைகளி னாலும் கிடைக்கும் அனுகூலங்கள் அகம்சார் பொருளாதாரச் சிக்கனம் எனப்படும். அகம்சார் பொருளாதாரச் சிக்கனத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. தொழில்நுட்பம் சார் பொருளாதாரச் சிக்கனம் Technical Economics of scale

உற்பத்திக்கிரயத்தை குறைப்பதற்கான பாரிய இயலுமை கொண்ட இயந்திர உபகரணங் கள் அல்லது விசேட உபகரணங்களின் பாவனை யால் கிடைக்கும் சிக்கனங்கள் இதிலடங்கும். நிறுவனத்தின் உற்பத்திச் செயற்பாடுகளும் நேர் உற்பத்தி நுட்பமுறைப் பயன்பாடும் தொழில் நுட்ப பொருளாதாரச் சிக்கனங்களை ஏற்படுத்தும்

2. முகாமைத்துவம் சார் அல்லது நிர்வாகம் சார்சிக்கனம் Managerial or Administrative Economics

சிறப்பறிஞர் சேவையையும் மிக உயர்வான திறன் கொண்ட கட்டளைமட்டப் பணிப்பாளர் சேவையையும் நிறுவனம் பெற்றுக்கொள்ளும் போது கிடைக்கும் அனுகூலங்கள் இதிலடங்கும். செயல் சார்ந்த சிறப்புத் தேர்ச்சியை சிறப்பாகப் பயன்படுத்துவதால் கிடைக்கும் நலன் என இதனைக் குறிப்பிடலாம். உதாரணமாக நிறுவனம் பருமனடையும் போது உற்பத்தி முகாமையாளர், சந்தைப்படுத்தல் முகாமையாளர், நிதிமுகாமை யாளர், ஆராய்ச்சி, அபிவிருத்தி முகாமையாளர், ஆளணி முகாமையாளர் போன்ற சிறப்புத்திறன் கொண்டவர்களை சேர்த்துக் கொள்வதால் உயர் விளைதிறன் மிக்க நிலையை அடையமுடியும்.

3. வியாபாரம் சார் பொருளாதாரச்சிக்கனம் Trading Economics

கொள்வனவு, விற்பனை அளவுகள் அதி கரிக்கும் போது ஏற்படும் நிறுவன இலாபங்கள் இதிலடங்கும். பெருந்தொகையில் கொள்வனவு செய்வதால் அலகுக்கான விலை குறைவடைய முடியும். அதேபோல தனியுரிமை நிலையை உருவாக்கிக் கொள்வதால் பேரம் பேசும் சக்தி அதிகரிக்கும். அதன் மூலமாகக் கொள்வனவு விலையைக் குறைத்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் ஏற்படும். விற்பனை அளவு அதிகரித்த போது அலகொன்றுக்கான விற்பனைக் கிரயங்கள் குறைவடையும். மேம்படுத்தல் செலவு குறையும். விற்பனை தொடர்பான தனியுரிமை நிலையை உருவாக்கிக்கொள்வதால் விற்பனை விலையை உயர்வான மட்டத்தில் பேணமுடியும். குறித்த ஒரு வணிக நிறுவனம் சந்தை நிரம்பலைக் கட்டுப்

படுத்தும் ஆற்றல் கொண்டிருப்பின் அது தனது உற்பத்திகளுக்கு உயர்விலையை பெற்றுக் கொள்ள முடியும்.

4. நிதிசார் பொருளாதாரச் சிக்கனம்
Financial Economics

பேரளவு உற்பத்தி நிறுவனங்களுக்குக் கடன் வழங்க வங்கிகளும் நிதி நிறுவனங்களும் பின்நிற்பதில்லை. சிறுவணிகங்களுக்குக் கடன் வழங்க நிதி நிறுவனங்கள் முன்வராத போதிலும் பேரளவு நிறுவனங்களுக்கு கடன் வழங்குவது பாதுகாப்பானது என அவை எண்ணுகின்றன. அது மட்டுமன்றி பங்குகளையும், தொகுதிக்கடன் களையும் வழங்குவதன் மூலமும் பேரளவு நிறுவனங்கள் நிதி திரட்டிக் கொள்ள முடியும். அத்தோடு இலாபத்தை நிறுத்தி வைப்பதன் மூலமும் பேரளவு வணிகங்கள் முதலீட்டை அதிகரிக்கும் வாய்ப்புகளுள்ளன.

5. நட்ட அச்சம் சார்பான பொருளாதாரச் சிக்கனம் Risk - Bearing Economics

வணிக நிறுவனங்கள் எதிர்நோக்கும் எல்லா நட்ட அச்சங்களுக்கும் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள முடியாது. சிறு வணிகங்களை விட பேரளவு வணிகங்கள் தமது இடருக்கான பொறுப்பை பரவலாக்கி கொள்ள முடியும். உதாரணமாக பேரளவு வணிக நிறுவனங்கள் சந்தைப்படுத்தலில் உற்பத்திக் கலவையைப் பயன்படுத்துவதால் குறித்த ஒரு பொருள் தொடர்பில் நட்டமேற்பட்ட போது ஏனைய உற்பத் திப் பொருட்களிலிருந்து கிடைக்கும் இலாபத்தி லிருந்து அதனை ஈடு செய்து கொள்ள முடியும்.

6. ஆராய்ச்சி விருத்தி சார் சிக்கனம் R $ D Economics of Scale

R$D தொடர்பின் பெருந்தொகைப் பணத் தைச் செலவிட வேண்டியிருக்கும். பேரளவு வணிகங்கள் R$D தொடர்பில் பெருந்தொகைப் பணத்தைச் செலிடுவதால் அதனால் கிடைக்கும் அனுகூலங்களை அடையமுடியும்.

புறம்சார் பொருளாதாரச் சிக்கனங்கள்
External Economics of Scale

பேரளவு வணிகங்கள் மிக சிறப்பாக ஒழுங் கமைந்த விசாலமான கைத்தொழில்களில் ஈடுபடுவதால் கிடைக்கும் நலன்கள் புறம்சார் பொருளாதாரச் சிக்கனம் என அழைக்கப்படும். முழுமையான கைத்தொழிலும் விருத்தியடையும் போது அக்கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வணிக நிறுவனங்களுக்கான கிரயங்கள் குறைவடைய முடியும். இவ்வாறு கிரயம் குறைவடையும் சில முறைகளை பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

1. ஒரிடப்படுத்தல் Concentration

குறித்த கைத்தொழில்கள் செறிந்துள்ள பிரதேசத்தில் அது போன்ற நிறுவனம் ஒரிடப்படுத் தும் போது குறித்த சில நலன்களை அடைய முடியும். உதாரணமாக நெசவக்கைத்தொழில் செறிந்துள்ள பிரதேசத்தில் ஆடைத்தொழிற் சாலைக்குத் தேவையான மூலப்பொருள் போன்ற வற்றை இலாபகரமாகப் பெற்றுக் கொள்ள முடி யும். அத்துடன் அக்கைத்தொழில் தொடர்பான சிறப்பறிஞர்களையும் அருகிலேயே பெற்றுக் கொள்ள முடியும்

2. ஆராய்ச்சி வசதி Research facilities

மிகச்சிறப்பாக ஒழுங்கமைந்த கைத்தொழில் நிறுவனங்கள் P$D மேம்படுத்தலினால் பெறும் அனுகூலங்களை அக்கைத்தொழிலில் ஈடுபட் டுள்ள ஏனைய நிறுவனங்களும் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். அது மட்டுமன்றி அக்கைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏனைய நிறுவனங்கள் ஒன்றாக இணைந்து மிகப் பரந்த அளவில் பலமான P&D யை செய்ய முடியும். அதன் மூலமாகக் கிடைக்கும் அனுகூலங்களை எல்லா நிறுவனங்களும் அடைய முடியும்

பயிற்சி வசதிகள் Training facilities

முழுமையான கைத்தொழிலுக்குள்ளே வெவ்வேறு ஊழியப் பயிற்சி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதால் அதன் நலன்களை எல்லா நிறுவனங்களும் அனுபவிக்க வாய்ப்புண்டு. இப்பயிற்சிகளினால் திறன் கொண்ட பயிற்றப்பட்ட ஊழியர்கள் தாராளமயமாக்கப்படுவதால் பயிற்சியளித்த நிறுவனம் மட்டுமன்றி எல்லா நிறுவனங்களும் அதன் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ள முடிகிறது.

மேலே கூறப்பட்ட அகம்சார் பொருளாதார சிக்கனம், புறம்சார் பொருளாதார சிக்கனங்களை எடுத்து நோக்கும்போது ஒரு நிறுவனம் தனது உற்பத்தி செயற்பாட்டு மட்டங்களை நிச்சயிக்கும் போது தோன்றுவது பொருளாதார சிக்கனமாகும். இதனடிப்படையில் வணிகம் விரிவடைந்து செல்லும்போது இதன் உற்பத்தி செயற்பாட்டினாலும் அதன் அமைப்பு முறைகளினாலும் கிடைக்கும் அனுகூலங்கள் அகம் சார் பொருளாதார சிக்கனங்கள் ஆகும். மேற்படி நிறுவனங்கள் தமது உற்பத்தி செயற்பாடுகளை பேரளவு வணிகங்களாக மாற்றி செயற்படுத்தும்போது விசாலமான கைத்தொழில்களில் ஈடுபடுவதால் அங்கே அகம்சார் பொருளாதார சிக்கனத்தை அனுபவித்த நிறுவனங்கள் புறம்சார் பொருளாதார சிக்கனத்தையும் அனுபவிக்கின்றன.

எனவே மேலே கூறப்பட்ட ஆய்வின்படி எந்தவொரு வணிக நிறுவனங்களும் தமது உற்பத்தி செயற்பாட்டு உற்பத்தி மட்டங்களை நிர்ணயிக்கும்போது பொருளாதார சிக்கனங்களை பேணுவது நிறுவன வளர்ச்சிக்கு மிகவும் உசிதமானது என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

*Reference :*

ஜெகத் பண்டாரநாயக்க

மயூரதன் (வணிகக் கல்வி)

## (E-Government) மின் அரசாங்கம்

இணையத்தின் அடிப்படையில் அரசாங்கச் செயற்பாடுகளை மக்கள் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் உருவாக்கப்பட்ட தகவல் முறைமையே மின் அரசாங்கம் எனப்படும்.

# நிதிக்கணக்கியல் எண்ணக்கருவுடனான வரைவு (Conceptual Frame Work of Financial Accounting)

*Parisha Balasingam*
2010 *(Com)*

**அறிமுகம்**

கணக்கியலை பெரும்பாலும் தொழில்நுட்ப வியமாக கருதினாலும் அதற்கு அடிப்படையான கருத்துக்கள் பல உள்ளன. இந்தக் கருத்துக்களி டையே நிதிக் கணக்கியலின் தொனிப்பொருள் சட்டத்தின் மூலம் கணக்கியலுக்கு முக்கியமான அடிப்படையான கருத்துக்கள் வழங்கப்படு கின்றன. கணக்கியலில் வரவு, செலவு கணக்கி யல் நியமங்கள் அடிப்படையில் அமைந்துள்ளன. இந்த தொனிப் பொருளின் முக்கியத்துவம் இது வாகும். அதனால் நிதிக் கணக்கியலின் தொனிப் பொருள் என்பதைப் பற்றி தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்வது முக்கியமாகும்.

**நிதிக் கணக்கியலின் தொனிப் பொருள் வரைவு என்பது எது?**

ஐக்கிய அமெரிக்காவில் கணக்கியல் நியமங் களை தயாரிக்கும் நிறுவனமான நிதிக் கணக்கி யல் நியமங்கள் சபையில் (FASB) தொனிப் பொருளை சட்ட வரைவில் இணைப்பதுடன் அது கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது. நிதிக் கணக் கியலில் மாற்றம் நிதி அறிக்கைகளின் தன்மை பொறுப்பு, வரைவுகள் நிர்ணயிக்கப்படும் போது மாறும் ஒன்றுக்கொன்று சபீமான கணக்கியல் நியமங்களாக வழிகாட்டக்கூடிய ஒன்றுக்கொன்று சம்மந்தப்பட்ட நோக்கங்கள் மாறும் அடிப்படை தாமதத்தின் கூட்டாகும்.

இந்த வசனத்தின் அர்த்தமானது தொனிப் பொருள் வரையறையானது ஒன்றுக்கொன்று சம்மந்தமான நோக்கங்கள் மாறும் அடிப்படை அங்கங்களுடன் கூடியதென்பதாகும். இந்த நோக் கங்களை அடிப்படைக் கணக்கியலின் நோக்கம் மாறும் தேவைகளைக் காட்டுகின்றது. அடிப்படை அங்கம் எனப்படுவதன் கருத்து அந்த நோக்கங் களை அடைந்து கொள்ள உதவும் கருத்துக்க ளாகும்.

**கொள்கை வரைவின் கூற்று**

கணக்கியல் தொனிப் பொருளை வரையறை செய்வது என்பது எப்போதும் பேச்சுவார்த்தையின் ஊடாக எடுத்துக் கொள்ளப்பட்டது. பொதுவாக அவ்வாறான ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவு கிடை யாது. இவற்றுக்கிடையே ஓர் தொனிப் பொருள் சட்டம் (வரைவு) ஒன்றை உருவாக்க ஐக்கிய அமெரிக்க நிதிக் கணக்கியல் கட்டளைகள் சபை (FASB) முன்னோடியாக செயல்பட்டது.

இது தொடர்பில் சர்வதேச ரீதியாக கொள்கை ஒன்று உருவானது. இலங்கைக்கு இந்தக் கொள்கை வரைவு மிக முக்கியமானது. ஏனெனில் இலங்கை கணக்கியலின் கட்டளைகள் (Sri Lanka Accounting Standars) இங்கு கூறப்பட்ட சட்ட வரைவிற்குள் தயாரிக்கப்பட்டுள்ள நியமங்கள் சர்வதேச கணக்கியல் (Internation Accounting Standars). நியமங்களுக்கு அமைவாக இருப்ப தால் ஆகும். கொள்கை வரைவு இப்போது மேலும் வளர்ந்து வருகிறது. இதுபற்றி தற்போது IASB

மற்றும் FASB இணைந்த திட்டம் செயல்படுகிறது.

இலங்கையின் அடிப்படையானது மற்றும் நம்பிக்கையானது என்ற அடிப்படைப் பண்பு களானதுடன் ஒத்துப் பார்த்தல் மற்றும் கணக்கிடக் கூடியதாக இருத்தல் இரண்டாவது பண்புகளாகும். இந்த தொனிப்பொருள் கொடுக்கல், வாங்கல் நிகழ்வுகள் மாறும் சந்தர்ப்பங்களை அறிந்து கொள்ளும்போது அளக்கும்போது மற்றும் சமர்ப்பிக்கும்போது வழிகாட்டல் வழங்கப்படும்.

1978இல் முதன் முறையாக நிதிக்கணக்கி யல் கொள்கை வரைவு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டது. இதன் பிறகு இதே மாதிரியான கொள்கை வரைவு கூற்று ஐக்கிய இராச்சியம், அவுஸ் ரேலியா, கனடா மற்றும நியூசிலாந்து ஆகிய நாடு களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலாக சர்வதேச கணக்கியல் நியமங்கள் சபையில் (International Accounting Standards Board - IASB) 1989ம் ஆண்டு நிதிக் கூற்றை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான சட்ட வரைவு.

**கொள்கை வரைவின் முக்கியத்துவம் (கடமை பொறுப்பு)**

கணக்கியலில் கொள்கை வரைவு மூலம் கீழ்கண்ட அலுவல்கள் செயல்படுத்தப்படு கின்றன.

- நிலவும் கணக்கியல் நியமங்களை ஆராய் தல் மற்றும் கணக்கியல் நியமங்களை அபி விருத்தி செய்தல் என்பவற்றுக்கு உதவி யளித்தல்.
- நிதி அறிக்கையிடுதலுக்கான செயற்பாடுகள் கணக்கியல் நியமங்கள் மாறும் அடிப்படை சட்ட திட்டங்களுக்கிடையே உடன்பாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உதவுதல்.
- கணக்கியல் நியமங்களை உபயோகித்தல் சம்மந்தமான நிதி அறிக்கையை தயாரிக்கும் பகுதியினருக்கு உதவியளித்தல்.
- புதியதான கணக்கிட்டு பிரச்சனைகளை தீர்த்து வைத்தல்.
- நிதி அறிக்கை சம்மந்தமான அவற்றை பாவிக் கும் பகுதியினரின் அறிவு மற்றும் நம்பிக்கை களை வளர்த்தல்.
- வர்த்தகங்களுக்கிடையே நிதி அறிக்கை களை ஒப்பிட்டுப் பார்க்கும் திறமையை வளர்த்தல்.

**கொள்கை வரைவின் திட்டுமற்றும் உப பிரிவு**

கொள்கை வரைவானது பல உப அங்கங் களை கொண்டிருப்பதுடன் அவை தாக்கங்களுட னான அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பல் வேறு நாடுகளில் மாறும் IASB ஆல் தயாரிக்கப் பட்டுள்ள கொள்கை வரைவுகளுக் கிடையே உப அங்கங்களை குறிப்பிடும்போது ஏதும் வித்தி யாசங்கள் ஏற்படாமை இந்த எல்லை வரைவுக்கு உட்பட வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட் டுள்ளது.

- நிதி அறிக்கைகளின் நோக்கம்
- நிதி அறிக்கைகளின் இயல்பு மற்றும் பண்புகள்
- நிதி அறிக்கைகளின் அடிப்படை விடயங்கள்
- நிதி அறிக்கைகளின் அடிப்படை விடயங்களை தெளிவாக்குதலும் தெரிந்து கொள்ளுதலும்
- நிதி அறிக்கைகளின் அடிப்படை விடயங்களை கணக்கிடல்.

*Reference :*

அறிவுத் தேடல் வர்த்தகப் பிரிவு
(மாதாந்த சஞ்சிகை)

# இருப்புக் கட்டுப்பாட்டு முறைகள்
# Methods of Stock Control

Sumithira Ravindran
2010 (Com)

நிறுவனங்கள் பொதுவாக இருப்பினை கட்டுப்படுத்துவதற்கென பின்வரும் முறைகளைப் பின்பற்றுகின்றன.

1. இருப்பு மட்டத்தைப் பேணல்
2. ABC பகுப்பாய்வு
3. இரு பாத்திர முறை
4. சிக்கன கட்டளைத் தொகை

### இருப்பு மட்டத்தைப் பேணல் (Stock Level)

இருப்பு கட்டுப்பாட்டு முறையின் பிரதான நோக்கங்களில் ஒன்று இருப்பினை தேவைக்கு கூடாமலும் குறையாமல் வைத்திருப்பதாகும். இதன் பொறுப்பு நிறுவனங்கள் பல்வேறு இருப்பு மட்டங்களை பேணுகிறது. அவையாவன:

1. மறு கட்டளையிடும் மட்டம்
2. ஆகக் குறைந்த மட்டம்
3. ஆகக் கூடிய மட்டம்
4. சராசரி இருப்பு மட்டம்

### மறுகட்டளை மட்டம்

நிறுவனமொன்று தனது களஞ்சியத்தில் எவ்வளவு பொருள் இருப்பாக இருக்கும்போது கொள்வனவுக் கட்டளைளை பிறப்பிக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் அளவு ஆகும்.

மறுகட்டளை மட்டம் = ஆகக் கூடிய பாவணை X பாவணைக் காலம்

### ஆகக் குறைந்த இருப்பு மட்டம்

நிறுவனம் வைத்திருக்க வேண்டிய ஆகக்குறைந்த இருப்பின் அளவைக் காட்டுவ தாகும்.

மறுகட்டளை மட்டம் - (சராசரிப் பாவணை X சராசரி கட்டளைக் காலம்)

### ஆகக் கூடிய இருப்பு மட்டம்

எந்த நேரத்திலாவது நிறுவனமொன்று வைத்திருக்க வேண்டிய ஆகக் கூடிய இருப் பினளவு ஆகும்.

மறுகட்டளையிடும் மட்டம் + மறுகட்டளைத் தொகை - (குறைந்த பாவணை X இழிவு கட்டளைக் காலம்)

**சராசரி இருப்பு மட்டம்**

நிறுவனம் சராசரியாக வைத்திருக்க வேண்டிய சரக்கிருப்பு மட்டமாகும்.

$$\text{சராசரி இருப்பு மட்டம்} = \frac{\text{ஆகக்கூடிய இருப்பு மட்டம்} + \text{ஆகக் குறைந்த இருப்பு மட்டம்}}{2}$$

or

$$= \text{ஆகக் குறைந்த இருப்பு மட்டம்} + \frac{\text{மறுகட்டளையிடும் அளவு}}{2}$$

Eg:- மூலப்பொருள் தொடர்பான விபரங்கள் வருமாறு

மறுகட்டளையிடும் அளவு 3600 அலகுகள்

மறுகட்டளையிடும் காலம் 6-10 காரங்கள்

ஆகக் கூடிய நுகர்வு வாரத்துக்கு 900 அலகுகள்

சாதாரண நுகர்வு வாரத்துக்கு 600 அலகுகள்

ஆகக் குறைந்த நுகர்வு வாரத்துக்கு 300 அலகுகள்

இருப்பு மட்டங்கள் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

1) மறுகட்டளையிடும் மட்டம் = ஆகக் கூடிய பாவணை X ஆகக் கூடிய கட்டளைக் காலம்

= 900 x 10

= 9000 அலகுகள்

2. ஆகக் குறைந்த இருப்பு மட்டம் = மறு கட்டளையிடும் - (சராசரிப் பாவணை X சராசரி கட்டளைக் மட்டம் காலம்)

= 9000 - (600 x 8)

= 9000 - 4800

= 4200 அலகுகள்

3. ஆகக் கூடிய இருப்பு மட்டம் = மறுகட்டளை மட்டம் + மறுகட்டளை தொகை - (இழிவுப் பாவணை X இழிவுக் கட்டளைக் காலம்)

= 9000 + 3600 (300 x 6)

= 12600 - 1800

= 10800 அலகுகள்

4. சராசரி இருப்பு மட்டம் $= \frac{\text{ஆகக் கூடிய இருப்பு மட்டம்} + \text{ஆகக் குறைந்த இருப்பு மட்டம்}}{2}$

$= \frac{10800 + 4200}{2}$

= 7500 அலகுகள்

## ABCப் பகுப்பாய்வு (ABC Analysis)

பெருந்தொகையான பொருட்கள் தேவைப்படும் நிறுவனங்கள் இம்முறையைப் பயன்படுத்தும் அதாவது பொருள் வகுப்புகளின் பெறுமதயிலும் இடவசதி அடிப்படையிலும் மேற்கொள்வதாகும். இது ஐக்கிய அமெரிக்காவில் ABC நுட்பம் என அழைக்கப்படுகிறது.


| பொருள் உருப்படி | தேவையான இடவசதி | பெறுமதி |
|---|---|---|
| A | 10 | 70 |
| B | 30 | 20 |
| C | 60 | 10 |

இங்கு

A மதிப்பில் உயர்வான பொருட்களும் ஆனால் இருப்பைச் சேகரிப்பதற்கு இடவசதி குறைவாக தேவைப்படும் பொருட்கள்

B மதிப்பில் மத்திமமானதும் பெறுமதியிலும் மத்திமமானதுமான பொருட்கள்

C பெறுமதி குறைவானதும் இடவசதி அதிகமாகத் தேவைப்படும் பொருட்கள்





## இருபாத்திர முறை (Two Bin System)

இதில் பொருட்களைச் சேர்த்து வைப்பதற்கு இரண்டு பாத்திரங்கள் பயன்படுத்தப்படும். ஒரு பாத்திரம் பெரியது மற்றைய பாத்திரம் சிறியது. உற்பத்திச் செயற்பாட்டின்போது முதலில் பெரிய பாத்திரத்தில் உள்ள பொருட்கள் எடுக்கப்படும். அப்பாத்திரத்தினுள் பொருள் முடிவடைந்ததும் கட்டளை அனுப்பப்படும். கட்டளை அனுப்பி பொருள் வந்தடைய எடுக்கும் காலம் வரை சிறிய பாத்திரத்தினுள் உள்ள பொருட்கள் பயன்படுத்தப்படும். பொருட்கள் வந்தடைந்ததும் முதலில் சிறிய பாத்திரம் நிரப்பப்பட்டு பின்னர் பெரிய பாத்திரம் நிரப்பப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளும் முறை ஆகும்.

## சிக்கன கட்டளைத் தொகை (Economic Order Quantity) EOQ

நிறுவனமொன்று எவ்வளவு தொகையான பொருட்களுக்கு கட்டளையிடும்போது மொத்தச் செலவானது இழிவுபடுத்தப்படுகின்றதோ அத்தொகையே சிக்கன கட்டளைத் தொகை ஆகும். அதாவது எக்கட்டளைத் தொகையில் இருப்பு வைப்புச் செலவும், கட்டளைச் செலவும் குறைவடைகின்றதோ அக்கட்டளைத் தொகையே இதுவாகும்.

| கட்டளை எண்ணிக்கை | கட்டளைக்கான செலவு அலகு | சராசரி இருப்பு | கட்டளைச் செலவு | பராமரித்தல் செலவு |
|---|---|---|---|---|
| 40 | 25000 | 12500 | 800 | 1250 |
| 50 | 20000 | 10000 | 1000 | 1000 |
| 60 | 16667 | 8333 | 1200 | 833 |




மேற்குறித்த உதாரணத்தின்படி 1000 அலகுகளை கட்டளையிட்டுப் பெறுவது சிக்கனமாகும்.

EOQ = 1000 அலகுகள்

சிக்கன கட்டளைக் கணியமானது பின்வரும் சமன்பாட்டின் ஊடாக கணிப்பீடு செய்யப்படும்.

$$EOQ = \sqrt{\frac{2COD}{Ch}}$$

இங்கு

co = ஒரு கட்டளைக்கான செலவு

d = வருடாந்த கேள்வி

ch = ஒரு அலகிற்கான பராமரிப்புச் செலவு

Eg:- பொருள் உற்பத்தி நிறுவன மூலப் பொருளின் வருடாந்த வேண்டுதல் 1000000 அலகுகள்

கட்டளைச் செலவு 20 ரூபா

இருப்பு வைப்புச் செலவு 0.1 ரூபா

$$EOQ = \sqrt{\frac{2COD}{Ch}}$$

$$= \sqrt{\frac{2 \times 20 \times 1000000}{0.1}}$$

$$= \sqrt{400000000}$$

= 20000 அலகுகள்

**கணனிச் செயற்திட்டம்**

சரக்குக் கட்டுப்பாட்டிற்கு இப்போது கணனிச் செயற்திட்டம் பயன்படுத்துவது பிரபல்யம் அடைந்துள்ளது. இதற்கு கணனி மென்பாகங்கள் உதவும் சரக்கு வழங்கப்படும் போதே நிரல் குறியீட்டு முறை (Bar code) பயன்படுத்தப்பட்டு உடனடியாக சரக்கு விநியோகம் கணனியில் பதிவு செய்யப்படுகிறது. சரக்குக் கட்டுப்பாட்டிற்கு கணனி மென்பாகம் பயன்படுத்தப்படுவதால் பின்வரும் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்

- ★ சரக்கிருப்பு கட்டுப்பாடு செயற்திறன் அடைதல்
- ★ மிகவும் திருத்தமான தன்மை
- ★ சரக்கு பெறுதல் விநியோகித்தல் அவ்வப்போதே பதிவு செய்யப்படுதல்
- ★ தேவையான எந்த நேரத்தலும் சரக்குகள் தொடர்பான அறிக்கைகளைப் பெறலாம்.
- ★ நிறுவனத்தின் தேவைக்கேற்ப பயன்படுத்தும் நெகிழும் தன்மை

Reference :

கிரயக் கணக்கியலும் முகாமைக்கணக்கியலும் தி. வேல்நம்பி

ஐகத் பண்டார நாயக்காவின் உயர்தரவணிகக் கல்வி பகுதி II

# உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பும் அதனால் உருவாகியுள்ள தாக்கமும்

Mathuja Sivakumar
2010 (Com)

*அறிமுகம்*

பொதுவாக பூமிக்குக் கிடைக்கின்ற சூரிய ஒளியில் 70 சதவீதமானவை புவியினாலும் அதன் வளி மண்டலத்தினாலும் உறிஞ்சப்படு மென்பதோடு, எஞ்சிய 30 சதவீதமும் விண் வெளிக்கு மீண்டும் திருப்பியனுப்பப்படும். இங்கு உறிஞ்சப்படுகின்ற வெப்பம் மீண்டும் விண் வெளிக்கு விடுவிக்கப்படாத நிலையில் பூமியின் வெப்பநிலை அதிகரிப்பதனை உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு எனக் குறிப்பிடுவார்கள் இதில் அபிவிருத்தியடைந்த நாடுகளே அதிகள வில் பங்களிப்புச் செய்து உள்ளதெனக் கூறலாம்.

பச்சை வீட்டு வாயுக்கள் (green house Gases) அதிகரித்துள்ளமையின் காரணத்தினால் புவியின் வெப்பநிலை அதிகரிக்கின்றது. அதே போன்று உலகளாவிய காலநிலை முறை மாற்றமடை தலும், அதன் மூலம் உலகம் காலநிலை மாற்றங் களுக்கு உள்ளாதலும், அதனூடாக கடத்தொழில் நடவடிக்கைகளில் பாதகமான தாக்கம் ஏற்படு தலும் நடைபெறலாம்.

அதே போன்று உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு உலகளாவிய ரீதியில் குறிப்பிடத் தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதோடு, அது எதிர்பாரா வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு உருவாவதற்குக் காரணமாகவும் அமையும். மேலும், உலகில் துருவங்களிலுள்ள பனிப்பாறை கள் உருகுவதன் மூலம் சமுத்திர நீர் மட்டம் அதி கரித்தலும், அதன் காரணமாக கரையோர தாழ் நிலங்கள் சமுத்திர நீரினால் மூழ்கடிக்கப்படு தலும், சமுத்திர நீரின் வெப்பம் விரிவடைதலும் நடைபெறக்கூடிய ஏனைய பாதகமான விளைவு களாக உள்ளன.

*உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பின் காரண மாக ஆசிய வலயத்தில் நடைபெற்ற ஒரு சில மாற்றங்கள்*

உலகில் வெப்பக் காலநிலையானது ஒரு சில தானிய வகைகள் மற்றும் மக்கள் பிரிவினருக்கு அனுகூலமாக அமையலாம் என ஒரு சில பொருளியலாளர்கள் வாதிடுகின்றனர். ஆயினும் உலகில் வெப்பக் காலநிலை மற்றும் அதன் மூலம் உருவாகின்ற புயற்காற்றுக்கள் ஆகியன காப்புறு தித் தொழிலை வீழ்ச்சியடையச் செய்வதற்குக் காரணமாக அமையும் என்பது ஆதனக் காப்புறுதி யாளர்களது கருத்தாகும்.

இதைத் தவிர காபனீரொட்சைட்டு வாயுவைக் குறைக்கும் பொருட்டு முழு உலகினதும் மொத்த தேசிய உற்பத்தியில் 3 சதவீதத்தைச் செலவிட வேண்டி நேரிடும் எனக் கணப்பிடப்பட்டுள்ளது.

*வெப்பநிலை அதிகரிப்பின் பாதகமான பெறுபேறு கள் சில*

01. பாகிஸ்தான் - 1999 தொடக்கம் 2001 வரையிலான காலத்தினுள் மிகக்கடுமையான வரட்சிக் காலமொன்று அறிக்கை யிடப்பட்டமை.

02.ரஷ்யா - கடுமையான வரட்சியின் காரணமாக காட்டுத்தீ பரவிய தன் மூலம் ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் அச்சுறுத்தப் பட்டமையும் பைகால் வாவி யின் நீர் உறையும் காலம் குறுகியமையும்.

3. ஈரான் - 2001ல் கொரியாவில் மிக அதிகமழை வீழ்ச்சியும் வெள் ளப்பெருக்கும் ஏற்பட்டமை

4. தென்இந்தியா- 2002 மே மாதத்தில் வெப் பக் காற்றுக்களால் ஆந்திரா பிரதேசத்தின் வெப்பநிலை 120 பாகை பரனைற் வரை அதிகரித்தமை.

5. பிலிப்பைன்ஸ்- சுண்ணாம்புக் கற்பாறைகள் உருக்குலைந்தமை


7. இந்தோனேசியா- உயர் மலைப் பிரதேசங் களுக்கு மலேரியா பரவி யமையும் 1998ல் காட்டுத்தீ உருவாகியமையும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நகரமயமாக்கல் மற்றும் கைத்தொழில் மயமாக் கலின் காரணமாக வருமான நிலைமை அதி கரித்த போதிலும் சுற்றாடல் பாதிப்புகள் அதிகரித் தன. இது தொடர்பில் நடைபெற்ற மதிப்பீடுகளின் பிர காரம் நகர சுற்றாடல் மாசடைதலானது ஆரம்ப கட்டத்தில் தேசிய வருமான அதிகரிப்புக்குக் காரணமாய் அமைந்த போதிலும் பின்னர் அது வீழ்ச்சியடைதலுக்கு உள்ளாகியது.

அதிக எரிபொருள் பயன்பாடு, வாகனங்களி லிருந்து புகை வெளியேற்றப்படுதல் மற்றும் கைத்தொழில் மயமாக்கல் ஆகியன சுற்றாடல் மாசடைதலின் மூலாதாரங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

***நவீன மயமாக்கல் மற்றும் கைத்தொழில் மயமாக்கல் நகர சுற்றாடலை பாதித்தல்***

சமூக செலவினமும் வரி விதிப்பும்




மேற்படி வரைபடத்தின் மூலம் சராசரி கேள்வி மற்றும் நிரம்பல் வளைகோட்டின் நடப்பு சுட்டிக் காட்டப்படுகின்றது. $x$ எனப்படுகின்ற பண்டத்தை உற்பத்தி செய்தலுடன் தொடர்புடைய ஆகக் குறைந்த தனியார் செலவினத்திற்கான நிரம்பல் வளைகோடு $Mc^{p}$ என்றவாறு மேற்படி வரை படத்தில் பெயரிடப்பட்டுள்ளது. கேள்வி மற்றும் நிரம்பலின் வழிப்படுத்தலின் கீழ் X பண்டத்தின் பொருட்டான சமநிலை விலை Pm ஆவதோடு கேள்வி Qm எனக் காட்டப்பட்டுள்ளது. ஏதேனு மொரு நாட்டின் அரசாங்கத்தினால் மேற்படி பண்டம் உற்பத்தி செய்யப்படுவதன் மூலம் நடை பெறகின்ற சுற்றாடல் மாசடைதலின் பொருட்டு Tx வரியொன்று அத்தகைய பண்டத்தின் ஒரு அலகினை விற்பனை செய்வதன் மீது விதிக் கப்பட்டுள்ளதாக கருதுவோம். அப்போது தனியார் செலவின் வளைகோடு முன்னோக்கி நகரும்.

இது மேற்படி வரைபடத்தில் Mo எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் புதிய விலை $P^*$ எனவும் சமநிலைப் பண்டங்களின் தொகை $Q^*$ எனவும் காட்டப்பட்டுள்ளது. மேற்படி வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு நுகர்வோரிடம் இருந்து அறவிடப்படுகின்ற பண்டங்களின் விலை Pm இல் இருந்து $P^*$ வரை அதிகரிப்பதோடு, உற்பத்தியாளரால் பெறப்படுகின்ற விலை Pm இல் இருந்து Pc வரை வீழ்ச்சியடைகின்றது.

இதன் பிரகாரம் சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்துகின்ற பண்டங்களுக்கான சமூகச் செலவினம் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இருவராலும் ஏற்படுகின்றதென்பது தெளிவாகின்றது. இது அத்தகைய பண்டத்தின் கேள்வி நெகிழ்வுத்தன்மை மற்றும் நிரம்பல் நெகிழ்வுத் தன்மையில் தங்கியுள்ளதென்பதை வலியுறுத்துதல் வேண்டும்.

*வெப்பநிலை அதிகரிப்புக்கான தீர்வுகள்*

உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்புக்கான தீர்வைப் பற்றி இரண்டு விதத்தில் கலந்துரையாடலாம். அதாவது பச்சை வீட்டு வாயுக்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் சட்டவிதிகளை ஆக்குதல் மற்றும் தற்போது நடைபெற்று வருகின்ற காலநிலை மற்றும் உயிரியல் ரீதியிலான பாதகமான தாக்கங்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகும்.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள முறையின் கீழ் காலநிலை மாற்றங்களுக்கு துரிதமாகவும் வெற்றிகரமாகவும் முகம் கொடுப்பதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் தைரியமூட்டல்களை வழங்குதல் தகுந்தவாறு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் தேவையான சட்டவிதிகளை ஆக்குவதன் மூலம் உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமாக காரணிகளை ஒழிப்பதே தற்போது பெரும்பாலும் பிரபல்யமானதொரு முறையாக விளங்குகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வெப்பநிலை அதிகரிப்புக்கு தீர்வாக அரச கொள்கைகளை ஆறு துறைகளின் கீழ் கலந்துரையாடலாம். அவையாவன.

1. இயற்கை வளங்களுக்கான விலைக் கொள்கைகளைப் பொருத்தமான விதத்தில் அமைத்தல்.
2. சமூக அமைப்புக்களின் பங்களிப்பைப் பெறுதல்
3. ஆதனங்கள் மற்றும் வளங்களின் உரிமையைத் தீர்த்துவைத்தல்.
4. வறிய மக்களுக்கான பொருளாதார ரீதியிலான மாற்று வழிமுறைகளை முன்னேற்றுதல்.
5. குடும்பப் பெண்களது வருமான நிலைமையை மேம்படுத்துதல்.
5. கைத்தொழில்களிலிருந்து கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்படுவதைக் குறைப்பது தொடர்பிலான கொள்கைகளை வகுத்தல் ஆகியனவாகும்.

*முடிவுரை*

மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் இடையே இடையறாததொரு தொடர்பு நிலவுகின்றது. மனிதன் சுற்றாடலுக்கு ஏற்ப அமைந்துள்ளான். அதே போன்று சுற்றாடல் மனிதனைப் பாதுகாக்கின்றது. ஆதலால் மனிதன் சுற்றாடலைப் பாதுகாத்தல் வேண்டும். இப்பணியின் போது ஒவ்வொருவரும் தமது சக்திக்கு ஏற்ப பங்களிப்பு செய்தல் வேண்டும். ஒரு மரத்தை நடுதல் ஒவ்வொரு மனிதனாலும் செய்யக்கூடியதான ஒரு விடயமாகும். இதன் மூலம் சுற்றாடலுக்கு தூய்மையான வளியைச் சேர்ப்பதில் பங்களிப்பு வழங்குதலே நடைபெறுகின்றது.

வாகனங்களால் ஏற்படுகின்ற வளி மாசடைதல் உலகில் பகிரங்கமானதொரு விடயமாகும். ஒவ்வொரு வாகன உரிமையாளரும் தமது வாகனத்தைப் பொருத்தமான விதத்தில் பராமரிப்பதன் மூலம் தமது வாகனத்தின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம். அதே போன்று அதன் மூலம் வெளியேறுகின்ற புகையின் அளவும் குறைவடையும். அதன் மூலம் வளி மாசடைதல் குறைவடையும்.

இவ்வாறு நோக்குகின்றவிடத்து ஒவ்வொரு நபரும் சுற்றாடல் நேயம் மிக்கவராக இருப்பாரெனில் எதிர்காலச் சந்ததியினருக்கு பூமி பாதுகாப்பானதாக அமையும்.

**உசாத்துணை நூல் :**

இலங்கை மத்திய வங்கி குறிப்பேடு 2008 ஜனவரி- பெப்ரவரி

# சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்கள்

Dayarni Kirusnathasan
2010 (Com)

சந்தைப்படுத்தல் என்பது நுகர்வோர், வாடிக் கையாளர் தேவை விருப்பம் முன்னுணரப்பட்டு அதற்கேற்ற வகையில் பொருட்கள் சேவைகளை போட்டியாளரை விட வினைத்திறனான முறையில் உற்பத்தி செய்து அவற்றினை வாடிக்கையாளரி ற்கு கிடைக்கச் செய்வது மட்டுமன்றி அவர்களை உச்ச திருப்தி அடைய வைக்கும் வரையில் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கியது சந்தைப்படுத்தலாகும்.

நிறுவனங்கள் வாடிக்கையாளரை இனங் கண்டு அவர்களை நிறுவனத்தில் இணைத்துக் கொள்வதுடன் அவர்களை வாழ்நாள் முழுவதும் வைத்திருப்பதை நோக்கமாக கொண்டு செயல் படுகின்றன. இன் நோக்கத்தை அடைவதற்கு நிறு வனங்கள் பல்வேறு தத்துவங்களை பின்பற்றுகின் றன. இத் தத்துவங்கள் வினைத்திறன் செயற் திறன் சமூகபொறுப்பு என்பவற்றை கருத்தில் கொள்கின்றன. தற்கால வணிக உலகில் நிறு வனங்கள் பின்பற்றும் எண்ணக்கருக்கள் வரு மாறு

1. உற்பத்தி செயல் எண்ணக்கரு
2. உற்பத்தி எண்ணக்கரு
3. விற்பனை எண்ணக்கரு
4. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
5. வாடிக்கையாளர் எண்ணக்கரு
6. சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு
7. முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

### 1. உற்பத்தி செயல் எண்ணக்கரு

கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட காலத்திலே குடிசை கைத்தொழில் முறைக்கு பதிலாக பேரளவு தொழிற்சாலை உற்பத்தி முறை பரவியது. இதனால் தொழிற்சாலை உற்பத்திக்கு கேள்வி அதிகரித்தது. இதனால் உற்பத்தியாளர் உற்பத் தியை தாரளமாக்கி குறைவான விலையில் விரை வாக விநியோகஞ் செய்ய வேண்டுமென்பதை உணர்ந்தனர். அவர்களை தூண்டிய இத்தகைய சிந்தனை உற்பத்தி எண்ணக்கரு என குறிப்பிடப் படுகின்றது. இவ் எண்ணக்கருவானது பொருட் களை தாராளமாக்குதல். விலையை நியாயமாக்கு தல் என்னும் அம்சங்களை அடிப்படையாக கொண்டது.

இவ் எண்ணக்கருவில் நுகர்வோர் தேவை விருப்பம் அவர்கள் எதிர்பார்க்கும் தரம் என்ப வற்றுக்கு முதன்மை செலுத்தாமையால் இச் சிந்தனை தோல்வியடைந்தது.

### 2. உற்பத்தி எண்ணக்கரு

கைத்தொழில் புரட்சிக்கு பிற்பட்ட காலத்திலே குறித்த ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு ஏராளமான நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. இந்நிலையில் தரமாக உற்பத்தி செய்து நியாய

மான விலையில் விற்பனை செய்தால் இதனை நுகர்வோர் வாங்குவர் எனக் கூறும் எண்ணக்கரு இதுவாகும்.

உயர்ந்த தரத்திலும் செயற்பாடுகளிலும் கூடிய பண்டங்களை சந்தைக்கு நியாயமான விலைக்கு வழங்குவதால் நுகர்வோர் அதற்கு சாதகமாக செயல்படுவர் என்பது சந்தைப்படுத்தல் எண்ணக்கரு தொடர்பான எடுகோளாக அமைந்தது.

இந்த எண்ணக்கரு பெருமளவுக்கு நுகர் வோன் செலுத்தும் விலைக்கு சமனான தரத்தை யுடைய பொருட்களை தெரிவு செய்து கொள்ள வாய்ப்பளித்தது. ஆனாலும் நுகர்வோர் தேர்வு அல்லது தேவை விருப்பங்கள் மீது அக்கறை காட்டவில்லை.

### 3. விற்பனை எண்ணக்கரு

பொருட்களை தரமாக உற்பத்தி செய்து நியா யமான விலையில் விற்பனை செய்தால் மட்டும் போதாது அப்பொருட்களை நுகர்வோர் அறியச் செய்ய, தூண்ட, மேம்படுத்த தூண்ட நடவடிக்கை கள் மேற்கொள்ள வேண்டும் என இவ் எண்ணக் கரு கூறுகின்றது. இவ் எண்ணக்கருவின் நோக் கம் உற்பத்தி செய்வதை விற்பனை செய்தலாகும்.

விற்பனை எண்ணக்கருவின்படி வாடிக்கை யாளரை கவர்வதற்கு உபாய முறைகள் அவசிய மாகின. அதற்காக விளம்பரம், விற்பனை மேம் படுத்தல் தனிப்பட்ட விற்பனை, பொதுமக்கள் தொடர்பு போன்ற சந்தைப்படுத்தல் மேம்பாட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டன. உற்பத்தியாளர் பொருட்களை விற்பனை செய்வதில் கடுமையான விற்பனை உபாய முறைகளை பயன்படுத்துவதில் தூண்டப்பட்டனர். ஆனாலும் நுகர்வோர் தெரிவு, விருப்பம், சுவை என்பவற்றில் அக்கறை கொள்ள வில்லை.

### 4. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

நுகர்வோர் தேவை, விரும்பம் எவையென உணர்ந்து ஒரு பண்டத்தினை போட்டியாளரிலும் வினைத்திறனாக உற்பத்தி செய்து விற்பனை செய்தால் அதனை நுகர்வோர் வாங்குவர் என கூறும் எண்ணக்கரு இதுவாகும். வாடிக்கையாளர் திருப்தி ஊடாக வணிகத்தின் நோக்கத்தை நிறைவு செய்ய வேண்டும் என்பதை வணிகர்கள் அறிந்து கொண்டனர்.

வெற்றிகரமான சந்தைப்படுத்தலுக்கு மிகச் சிறந்த சந்தைப்படுத்தல் உபாய மார்க்கம் பயன் படுத்த வேண்டும் எனவும் உணரப்பட்டது. இவ் எண்ணக்கருவின் போது பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன.

1) நுகர்வோர் தேவையை இனங்காணல்
2) தேவை விருப்பங்கள் பூர்த்தியடையாத நுகர் வோரை தெளிவாக இனங்காணல்.
3) உயர் செயற்றிறனை தரமுடைய பண்டங் களை உற்பத்தி செய்தல்.
4) உயர்மட்டச்சேவையை நுகர்வோருக்கு அளித்தல்

### 5. வாடிக்கையாளர் எண்ணக்கரு

குறிப்பிட்ட ஒவ்வொரு வாடிக்கையாளர் களதும் தனித்தனிதேவை விருப்பங்கள் எவை யென அறிந்து அதற்கேற்ப குறித்த பண்டத்தினை உற்பத்தி செய்து வழங்கினால் நுகர்வோர் அதை வாங்குவர் என கூறும் எண்ணக்கரு இதுவாகும். ஒவ்வொரு வாடிக்கையாளர் தொடர்பிலான தனிப்பட்ட தரவுகள் இலத்திரனியல் சாதனங்கள் ஊடாக பெறப்படுகின்றது.

ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பொருத்த மான முறையில் பொருட்களை உற்பத்தி செய்து சமர்ப்பித்தல் என்பது மிக பிரதான அம்சமாகும். இவ் எண்ணக்கருவின் அம்சங்கள் வருமாறு.

1) நீண்ட காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி அடிப்படையில் திருப்தி அளித்தல்
2) வாடிக்கையாளரின் சுவைக்கேற்ப பொருட் களை வழங்குதல்.

**6. சமூக சந்தைப்படுத்தல் எண்ணக்கரு**

நுகர்வோர் தேவை விருப்பங்கள் எவை என அறிந்து அதற்கேற்ப பண்டத்தினை போட்டி யாளரிலும் வினைத்திறனாக உற்பத்தி செய்து நுகர்வோர் கைக்கு கிடைக்கச் செய்வது மட்டு மன்றி நுகர்வோர் உச்ச திருப்பதியுடன் நுகரச் செய்வதுடன் இப்பொருட்கள் நுகர்வோரிற்கு எந்தவித தீங்கினையும் ஏற்படுத்த கூடாது என கூறும் எண்ணக்கரு ஆகும்.

இந்த எண்ணக்கருவால் வணிக முகாமை யாளர் வணிக நிறுவனங்களின் சமூக பொறுப்பு அல்லது சமூகம் தொடர்பான அக்கறை அங்கீ கரிக்கப்படுதல் வேண்டும் என்னும் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் கிடைத்தது. விசேடமாக சூழல் பிரச்சனைகள் தோன்றுதல், வள அருமை, உலகம் முழுவதற்குமான பிரச்சனை, சமூக சேவை தொடர்பாக அக்கறை கொள்ளாமை போன்ற நிலமைகளில் சமூக சந்தைப்படுத்தல் முக்கியத்துவம் முதன்மை பெற்றுக் காணப்பட்டது.

**7. முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக்கரு**

இது அண்மை காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட நவீன எண்ணக்கருவாகும். மிக உயர்வான பெறுபேற்றை பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நிறுவனத்தின் எல்லா பகுதி களும் ஒரே நோக்கத்துடன் கருமமாற்ற வேண்டும். முன்னர் குறிப்பிட்ட சந்தைப்படுத்தல் எண்ணக் கருக்களை வெவ்வேறாக பயன்படுத்துவதற்கு பதி லாக பூகோள மயப் பொருளாதாரத்தில் வணிகப் போட்டிச் சூழலை வெற்றிகரமாக எதிர்கொள் வதற்கு முழுமையான சந்தைப்படுத்தல் எண்ணக் கரு பயன்படுத்தப்பட வேண்டும். என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

அதாவது முழுமையான ஒன்றிணைந்த சந்தைப்படுத்தல் செயல்திட்டத்தை நடைமுறைப் படுத்தும் தேவை இந்த எண்ணக்கருவினால் எடுத்துக் காட்டப்படுகிறது. இவ் எண்ணக்கரு பிரதானமாக 4 மாறிகளை உள்ளடக்கும்.

1) தொடர்பு சந்தைப்படுத்தல்
2) ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல்
3) அகச் சந்தைப்படுத்தல்
4) சமூகபொறுப்பு சந்தைப்படுத்தல்.

**தொடர்பு சந்தைப்படுத்தல்**

வணிகத்தின் மீது அக்கறையுடைய எல்லாத் தரப்பினரும் திருப்தியடையும் முறையில் நீண்ட கால தொடர்பை உருவாக்கி கொள்வது தொடர்பு சந்தைப்படுத்தலின் குறிக்கோளாகும். அதன் பெறுபேறாக வணிகத்தின் மீது அக்கறையுள்ள எல்லாத் தரப்பினரும் இலாபகரமான வணிகத் தொடர்பினால் ஒரு சந்தைப்படுத்தல் வலை யமைப்பாக மாறிடுவர். அப்போது நுகர்வோர் சார்பு நிலையையும், வாழ்க்கை கால பெறுமதியையும் விருத்தி செய்து கொள்வதற்கு எல்லாத் தரப்பி னரும் செயல்படுவார்கள்.

**ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல்**

சந்தைப்படுத்தல் கலவையில் எல்லா மாறி களும் வாடிக்கையாளர் திருப்தியை நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்பது கருத் தாகும். அல்லது நிறுவனத்தின் எல்லா முகாமை யாளர்களும் ஊழியர்களும் சந்தைப்படுத்தல் கரு மங்களில் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண் டும் என்பது கருத்தாகும்.

**அகச் சந்தைப்படுத்தல்**


வணிகத்தின் தூரநோக்கை புரிந்து கொண்டு

வாடிக்கையாளரை திருப்தி செய்வது என்பது இதன் பொருளாகும். இதற்காக ஊழியர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். நிறுவனத்திற்கும் தொழிலுக்கும் மிக பொருத்தமான ஊழியர்களை தெரிவுசெய்தல். இணைத்துக் கொள்ளுதல், பயிற்சியளித்தல், விருத்தி செய்தல், பதிவியுயர்த்துதல், தூண்டுதல் கொடுப்பனவு செய்தல் ஆகிய எல்லா அம்சங்களும் சிறப்பாக செயலாற்றுவது முக்கியமாகும்.

திருப்தி கொண்ட ஊழியர் இல்லாமல் வாடிக்கையாளரை திருப்தி செய்தல் என்பது முடியாத கருமமாகும். நன்றாக தூண்டுதல் பெற்ற திருப்தி யுடன் சேவையாற்றும் ஊழியர்கள் நிறுவனத்தின் வாடிக்கையாளரை நன்கு திருப்தி செய்வார்கள் என்பது இதன் மூலம் எடுத்து காட்டப்படுகிறது.

**சமூக பொறுப்பு சந்தைப்படுத்தல்**

வணிகத்தின் சமூக பொறுப்பும் ஒழுக்க விழுமியமும் தொடர்பான முக்கியத்துவம் இதனால் காட்டப்படுகிறது. வணிக இலக்கும் வாடிக்கையாளர் திருப்தியும் மட்டுமல்லாது சமூகச் சூழல் தொடர்பிலும் ஒழுக்க விழுமியம் தொடர்பிலும் அக்கறை கொண்ட சந்தைப்படுத்தல் செயற்திட்டங்கள் அவசியமாகும்.




**வானவில் பக்கம்** (Rainbow Pages)

இலங்கையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியாளர் பற்றிய அடிப்படைத் தகவல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தும் விளம்பர முறைமையாகும். இது மஞ்சள் பக்க விளம்பரத்திற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்டதாகம். இதன் மூலம் நிறுவனங்கள், வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளும் நன்மைகள்

1) மிகக் கறைந்த செலவுடன் விளம்பரப்படுத்தலாம்.
2) காணப்படும் தகவல்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்
3) நம்பிக்கையான குழுவினை தேவையான தகவல்கள் இலகுவாகச் சென்றடையும்.
4) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் என்பதனால் வெளியிடப்படும் தகவல் உண்மைத்தன்மையினைக் கொண்டிருக்கும்.

## சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களுக்கிடையிலான ஒப்பீடு

| எண்ணக்கரு | தொடக்கநிலையம் | அக்கறை | உபாயமுறை | இறுதி இலக்கு |
|---|---|---|---|---|
| உற்பத்தி செயல் | தொழிற்சாலை | ஆக்கச் செயல் | உற்பத்தி செயற்திறனை உயர்த்துதல் கிரயத்தை இழிவுபடுத்துதல், பரந்த அளவிலான விநியோகம். | உற்பத்தி அளவை அதிகரித்தல் மூலமாக உச்ச இலாபமடைதல் |
| உற்பத்தி | தொழிற்சாலை | பொருட்களும் சேவைகளும் | தரத்தை உயர்த்துதல், நவீன உற்பத்தியை சமப்பித்தல் | உயர்தரத்திலான பொருட்களை வழங்குதல் இலாபத்தை உச்சமாக்குதல் |
| விற்பனை | தொழிற்சாலை | உற்பத்தி | விற்பனையை அதிகரித்தலும் சந்தைப்படுத்தல் மேம்பாடும் | விற்பனையை அதிகரித்தல் மூலமாக இலாபத்தை உச்சமாக்குதல் |
| சந்தைப்படுத்தல் | இலக்குச் சந்தை | வாடிக்கையாளர் தேவைகளும் விருப்பமும் | ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல் உபாயங்கள் | வாடிக்கையாளர் திருப்தி ஊடாக இலாப நோக்கத்தை அடைதல் |
| வாடிக்கையாளர் | இலக்கு வாடிக்கையாளர் | வாடிக்கையாளர் தேவைகளும் விருப்பமும் | ஒன்றிற்கு ஒன்று சந்தைப்படுத்தல் ஒருங்கிணைப்பும் பெறுமதிச் சங்கிலியும் | வாடிக்கையாளருடைய ஒத்துழைப்பும் சார்பும் நீண்டகால பெறுமதி மூலமாக இலாப விருத்திலும் |
| முழுமையான சந்தைப்படுத்த | சந்தை | அக்கறை கொண்ட தரப்பினருடைய எதிர்பார்ப்பும் சமூக எதிர்பார்ப்பும் | தொடர்பு, அகம், ஒருங்கிணைந்த சமூக பொறுப்பு சந்தைப்படுத்தல் | அக்கறை கொண்ட தரப்பினருக்கும் நலன்களை அளிப்பதன் மூலம் வணிகத்தின் இலக்கை அடைதல் |

உசாத்துணை நூல்கள் :

ஜகத் பண்டாரநாயக்க மயூரன் H.N.D.A (Pass paper)

# உலக உணவு நெருக்கடி

Nishathana Rajendran
2010 *(Com)*

2006ம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பமான உலக உணவுப் பொருட்களின் விலையேற்றம், குறிப்பாக திட உணவுப் பொருட்களின் விலையேற்றம் 2007ம் ஆண்டிலும் துரிதமாகவும், 2008ம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவிலும் அதிகரித்து கடுமையான தன்மையை ஏற்படுத்தி உலகளாவிய ரீதியில் மிக முக்கிய கரிசனைக்குரிய விடயமாக விபரித்துள்ளது. 2006 - 2008 யூன் வரையான காலப்பகுதியில் உலகளவில் அரிசியின் விலை சராசரியாக 217% மாவு 136% சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

பெற்றோலிய பொருட்களின் திடீர் விலையேற்றத்துடன் இணைந்த உணவுப் பொருட்களின் விலையேற்றமானது அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வாழ்கின்ற தமது மொத்தச் செலவினத்தின் பெரும்பகுதியை உணவுக்காக செலவிடும் ஏழைக் குடிகளின் சமூக நிலைத்தன்மையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

#### உலக உணவுப் பொருள் விலையேற்றத்திற்கான தாக்கங்கள்

இலங்கையானது தனக்குத் தேவையான சகல உணவு வகைகளையும் உற்பத்தி செய்ய முடியாதெனிலும் குறிப்பிடத்தக்களவு சதவீதமான திட உணவுகளை உற்பத்தி செய்கின்றது. எனினும் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் நாடு கனிசமான தொகையில் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதால் உலக உணவு விலையேற்றம இலங்கையிலும் கூடப்பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியது. பிரதான திட உணவான அரிசிக்கு மட்டுமல்லாது இலங்கையானது கோதுமை, கோமை மாவு போன்ற பல முக்கிய உணவுப் பொருட்களுக்கும் அது போல பருப்பு, உழுந்து, பால்மா மற்றும் சீனி போன்ற இதர உணவு வகைகளும் இறக்குமதியிலேயே தங்கியுள்ளது. இலங்கையின் மொத்த நுகர்வுப் பொருள் இறக்குமதியில் உணவுப் பொருட்களின் சதவீதமானது 2006, 2007 மற்றும் 2008ல் முறையே 43, 47 மற்றும் 53% ஆக இருந்தது. இந் நிலைமையானது குறிப்பாக 2007 இல் 2008 இன் முதல் அரைப்பகுதியிலும் முன்னெப் பொழுதுமில்லாத உணவு இறக்குமதிச் செலவின அதிகரிப்பை ஏற்படுத்தியது.

#### உயிர் தொழில்நுட்பமும் உணவுப் பிரச்சினையும்

தற்போதுள்ள உணவு தாராளமாகக் கிடைக்கின்ற நிலைமையின் கீழ் கூட உலக சனத் தொகையில் அண்ணளவாக 700 மில்லியன் மக்கள் போசாக்கின்மையால் வாடுகின்றனர். எதிர்வரும் 20-30 ஆண்டுகளில் உலக சனத் தொகை இரண்டு மடங்காக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு இந் நிலைமைக்கு முகங் கொடுக்கும் பொருட்டு குறைந்தபட்சம் இக் கால கட்டத்தினுள் உலக உணவு நிரம்பலையும் இரண்டு மடங்காகவாவது அதிகரிக்கச் செய்தல் வேண்டும். அதிகரித்து வருகின்ற சனத் தொகைக்கான சத்துள்ள, போதியளவான உணவு நிரம்பலின் பொருட்டு தற்போதுள்ள நிலைமையை

மூன்று மடங்காகவாவது அதிகரிக்கச் செய்தல் வேண்டும். ஆயினும் பயிர் செய்யக் கூடிய மற்றும் அதற்குப் பொருத்தமான நிலத்தின் அளவு குறைந்துள்ளமை உணவு உற்பத்தியில் செயற் பாடுகளின் உற்பத்தி திறன் குறைந்துள்ளமை தற்போதுள்ள போலியான பயன்பாடுகளின் காரணமாக மண்ணின் செழிப்பு தன்மை குறைந் துள்ளமை. மற்றம் அதன் மூலம் குறைந்தளவு அறுவடை கிடைத்தல் ஆகிய தடைகளின் முன்னி லையில் மேலே கூறிய உணவு நிரம்பல் இலக் கினை அடைதல் இன்ற உலகத்தின் முன்னே உள்ள பெரும் சவாலாகும் என்பது தெளிவாய் உள்ளது. அதனால் இந்த அதிகரித்து வருகின்ற சனத்தொகையிலிருந்து பாதுகாப்பதற்கு உள்ள ஒரேயொரு வழியான உயிர் தொழில் நுட்பத்தின் மீது கவனம் செலுத்துகின்றவர்கள் அதிகரித்து வருதல் அவசியமானதொன்றல்ல

உயிர் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாய, மீன்பிடி, வனப்பயிர் மற்றும் உணவு உற்பத்திக் கைத்தொழில்களின் நீடித்து நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியின் பொருட்டு பெருமளவு பங்களிப்பு கிடைப்பதாக ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் கமத்தொழில் அமைப்பு ஒத்துக் கொண்டுள்ளது. மேலும் உயிர் தொழில் நுட்பத்தை ஏனைய தகுதி யான தொழில்நுட்பங்களுடன் இணைத்து உணவு உற்பத்தி, கமத்தொழில் உற்பத்தி மற்றும் பணி களின் பொருட்டு பயன்படுத்தலாமெனவும் அது துரிதமாக வளர்ச்சி அடைந்து வருகின்ற மற்றும் நகரமயமாக்கலுக்கு உள்ளாகியுள்ள சனத் தொகையின் தேவைகளை நிறைவு செய்வதில் எதிர்வரும் நூற்றாண்டினுள் முக்கியமானதொரு பணியை ஆற்றுமெனவும் இவ்வமைப்பு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

உசாத்துணைநூல் :


இலங்கை மத்தியவங்கி ஆண்டறிக்கை 2008

மத்தியவங்கி குறிப்பேடு 2008 நவம்பர்-டிசம்பர்


உயிர் தொழில்நுட்ப ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட பயிர்களின் பயன்பாட்டைப்பற்றி ஆராய்கின்ற போது கால்நடைகளின் உணவின் பொருட்டு சோயா அவரையை உற்பத்தி செய் கின்ற உலகின் முதன்மையான நாடுகளாக ஐக்கிய அமெரிக்கா, அர்ஜென்ரீனா, பிரேசில் ஆகியன முன்னணியில் உள்ளன.

எவ்வாறாயினும் தற்போதைய நிலைமை யின் கீழ் உலக உணவுப் பிரச்சினையை வெற்றி கொள்வது தொடர்பில் மரபணுத் தொழில்நுட்பத் தின் மூலம் பெறக்கூடிய உதவி சிறியதாகும் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான காரணமாக முன்வைக்கப்படுகின்ற விடயங் களையும் கவனத்திலெடுக்காதிருக்க முடியாது. இங்கு அவை தொடர்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1) உலக உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்கும் பொருட்டு அதிக உற்பத்தித்திறனைக் கொண்ட பயிர்களை அறிமுகப்படுத்தல் ஒரேயொரு தீர்வாக அமையாது.
2) அதிக உற்பத்தித் திறனைக் கொண்ட பயிர் களை உற்பத்தி செய்கின்ற போது மரபணுப் பொறியியல் ஏனைய தொழில்நுட்பங்ளை விட முன்னிலையில் உள்ளதென்ற கருத்தை அநேகமாக ஏற்றுக் கொள்ள முடியாதிருத்தல்.
3) மரபணுத் தொழில்நுட்பத்தின் உள்ளீடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தொடர்பிலன்றி அபிவிருத்தி அடைந்த நாடுகள் தொடர்பில் ஈடுபடுத்தப்படுதல்.
4) உயிர் தொழில்நுட்ப முறைகளின் மூலம் உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற பல்வேறான இடர்கள் தொடர்பில் உலகின் கவனம் செலுத்தப்படுதல்.

# The Place of English In The Modern World

Nirosiya Pathmanathan
பிரிவு - 2010 (Com)

English is an international language. The use of English is wide and its importance cannot be denied. As a language of culture, utility and mental training, it is superior, to all other languages, however perfect or advanced they may be.

In countries like England, the U.S.A, Canada and Australia and in several parts of Africa, it is the first language. In many commonwealth countries like Sri Lanka. India and Malaysia, it is a second language. In the soviet Union, Japan, Germany, France, China and in several other countries it is taught and learnt as a very useful foreign language.

The Prime Minister of India, the late Mr. Jawaharlal Nerhu once described English as a "window to the world". Another equally famous Indian scholar and statesman, the late Rajaji declared English, "A gift by the goddess of learning to India" H.G. Wells, the famous British Historian and Novelist, once said that English is a language of world brotherhood and international understanding. Hence English occupies a unique place in the world.

English being a common language in our country, is a very useful tool to create better understanding and unity to among the various ethnic groups living here. Every one now realises that knowledge of good English holds wider opportunities. The private sector th banks and the foreign employment market give preference to those with knowledge of English.

Competence in English and the use of this language signify a transmutation. an added potential for material and social gain and advantage. One sees this attitude in what English represents it is considered a symbol of modernization, a key to expanded functional roles, and an extra arm for success and mobility in culturally and linguistically compels and pluralistic societies. As if all this were not enough, it is also believed that English contributes to yet another type of transmutation. It internationalizes one's outlook. In comparison with other languages of wider communication, to know English is like possessing the

fabled aladdin's lamp, which permits one to open, as it were, the linguistic gates to international business, technology, Science and travel. In short, English provides linguistic power

One might, then say that acquiring English is like going through a linguistic reincarnation. And from the perspectives of the Indian subcontinent, English initiates one into the caste that has power and more important, that controls vital knowledge about the miracles of science and technology. Thus, there is at present a hunger and an almost indecent passion for acquiring English.

The legacy of colonial English has resulted in the existence of several transplanted varieties of English with distinct linguistic ecologies their own contexts of function and usage. Indian English, American English, Sri Lankan English and Nigerian English are examples. These non-native varieties have, in turn, brought about changes in the native varieties of English and have also resulted in numerous sociolinguistic, linguistic and literary questions being posed which have rarely been asked about English before.

English represents the impact of a western language as a restricted code of communication, which has rapidly become a symbol of power, authority and elitism in the non-western world. In such non-native contexts, English has become a vehicle of values not always in harmony with local traditions and beliefs. English is also an in group language, uniting elite speakers across ethnic, religious and linguistic boundaries. In other words, the elite because it can function in English, uses it as a tool to wield power in traditionally non-English speaking parts of the world.

Even for purposes of travel, trade, commerce and diplomacy, a sound knowledge of English is a must. It is not an over statement if one says that English is also a language of international culture. From whatever angle we look at English, its utility is great. If there is a language today that is full, rich, universal and helps every-one in same way or other, it is certainly English. It is a language of the United Nations, of the entire world-of all people-rich, poor, black. brown. yellow or white. It has also become unique as a unit has said, as the first language spoken by man on another planet the Moon. There cannot be no two opinions on its importance, need or use.

# முகாமைத்துவ வளர்ச்சியில் திட்டமிடுதல், கட்டுப்படுத்தலின் கண்ணோட்டம்

Thushanthini Subramaniyam
பிரிவு - 2010 (Com)

முகாமைத்துவம் என்பது வணிகம் தனது வளங்களை செயல்திறனுடன் பயன்படுத்தி நோக்கத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய செயற்பாடு முகாமைத்துவமாகும்.

இந்த முகாமைத்துவத்தின் வெற்றிக்கு முகாமைச் செயற்பாடுகள் பங்களிக்கின்றன. அதாவது திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், வழிப்படுத்தல், கட்டுப் படுத்தல் ஆகிய முகாமைச் செயற்பாடுகளே முகாமைத்துவத்தின் வளர்ச்சிக்குத் துணைகளாக உள்ளன. இவற்றில் திட்டமிடுதல், கட்டுப்படுத்தல் என்பவையே மிகவும் பிரதானமாக பங்கெடுக்கின்றன.

## திட்டமிடுதல் Planning

திட்டமிடுதல் என்பது நிறுவனம் எதிர்காலத்தில் என்ன செய்வது? எப்பொழுது செய்வது? எங்கு செய்வது? எவ்வாறு செய்வது? யார் செய்வது? போன்ற வினாக்களை தெளிவாக விளக்குவது திட்டமிடுதல் ஆகும்.

திட்டமிடுதல் என்பதைப்பற்றி பல அறிஞர்கள் விபரித்துள்ளனர். அந்த வகையில் ஒரு சில அறிஞர்களின், திட்டமிடுதல் விபரிப்புக்கள்.

### Stoner and Freeman என்பவர்களின் விளக்கம்

நிறுவனத்தின் குறிக்கோள்களை நிர்ணயிப்பதும் அவற்றை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான கருமங்களை ஏற்பாடு செய்வதும் திட்டமிடுதல் ஆகும்.

### G.A.Cole என்பவரின் விளக்கம்

நிறுவனத்தின் குறிக்கோள்களை நிர்ணயிப்பதும் அவற்றை அடைந்து கொள்வதற்குப் பொருத்தமான கருமங்களை ஆயத்தம் செய்வதும் திட்டமிடுதல் ஆகும்.

### திட்டமிடுதலின் குணாதிசயங்கள்

- நிறுவனத்தின் குறிக்கோள்களை நிர்ணயிப்பதும் அவற்றை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான கருமங்களை ஏற்பாடு செய்வதும் திட்டமிடுதலாகும்.
- இது எதிர்காலத்திற்கான செயற்பாடுகளை உள்ளடக்கியது.
- திட்டமிடுதலின் மூலம் குறித்த காலத்திற்கான செயற்பாடுகள் ஆயத்தம் செய்யப்படுகின்றன.
- இது நிறுவனத்தின் வெற்றியை உறுதிப் படுத்தும் செயற்பாடு.
- இது மிகவும் தீர்க்கமாக சிந்தித்து கவனமாக செயற்படுத்த வேண்டியதாகும்.
- இது மூளையுடன் தொடர்புடைய எதிர்கால சிந்தனைப் பயிற்சியுடன் தொடர்புபட்டதாகும்.
- இது முகாமைச் செயற்பாடுகளில் முதன்மையானது.
- இது முகாமைச் செயற்பாடு மட்டுமல்லாமல் இலக்கை அடையும் வரையிலான செயற்பாடாகவும் உள்ளது.

### திட்டமிடுதலின் தத்துவங்கள் அல்லது கோட்பாடுகள்

- தெளிவான நோக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- நடைமுறைக்குச் சாத்தியமானதாக இருத்தல் வேண்டும்.
- நெகிழக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- நிறுவனத்தின் எல்லாமட்ட ஊழியர்களாலும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருத்தல்வேண்டும்.
- குறித்தகால அளவைக்கொண்டிருக்க வேண்டும்.
- எல்லா முகாமையாளர்களின் பங்களிப்பையும் பெறக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
- ஏனைய எல்லா முகாமைக் கருமங்களுக்கும் முன் தயாரிக்கப்பட வேண்டும் அத்துடன் அவற்றை தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

## திட்டம் Plan

திட்டத்தின் பெறுபேறு திட்டமிடுதலாகும். இது எழுத்தில் தயாரிக்கப்படும் ஆவணம் போல் பேணப்படும்.

நிறுவனம் என் செய்வது? எப்பொழுது செய்வது? எங்கு செய்வது? எவ்வாறு செய்வது? யார் செய்வது? போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்துவதாகத் திட்டமுள்ளது. வெற்றிகரமான பெறுபேறிற்கு திட்டம் அவசியமாகும்.

**திட்டமிடுதலின் தொழிற்பாடுகள்**
**(3 பிரதான படி முறைகள்)**

- இலக்கையும் நோக்கத்தையும் தீர்மானித்தல்
- பொருத்தமான வழிகளைத்தீர்மானித்தல்
- அவற்றை அடைந்து கொள்வதற்கேற்ற திட்டத்தை தயாரித்தல்.

**வரைபட ரீதியாக திட்டமிடுதல் கருமங்கள்**

இலக்கை உருவாக்கல்
↓
நோக்கம் பற்றி உபாய வழிகளைத் தீர்மானித்தல்
↓
சூழலைப் பகுப்பாய்வு செய்தல்
↓
வளத்தைப் பகுப்பாய்வு செய்தல்
↓
வாய்ப்புக்களையும் அச்சுறுத்தல்களையும் இனங்காணல்
↓
இடைவெளியைப் பகுப்பாய்வு செய்தல்
↓
தந்திரோபாய முறைகளைத் தீர்மானித்தல்
↓
திட்டத்தை நடைமுறைப்படுத்தல்
↓
சாதனையை மதிப்பிடலும் கட்டுப்படுத்தலும்

**திட்டமிடுதலின் வகைகள்**

- உபாய வழித்திட்டமிடுதல்
- உபாய முறைத்திட்டமிடுதல் (சாதுரியத்திட்டம்)
- செயற்பாட்டுத்திட்டமிடுதல்
- சந்தர்ப்பத்திட்டமிடுதல்

## கட்டுப்படுத்தல் Contorting

கட்டுப்படுத்தல் என்பது நிர்ணயிக்கப்பட்ட நியமங்களிற்கு அமைவாக நிறுவனக்கருமங்கள் நடைபெறுகின்றதா என கண்காணிப்பதாகும். கட்டுப்பாடு வினைத்திறனாக அமைய திட்டமிடுதலுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

**கட்டுப்படுத்தலின் செயற்பாடுகள்**

- திட்டநியமத்தை முன் வைத்தல்
- உண்மையான பெறுபேறுகளை மதிப்பிடல் (சாதனைகளை)
- பெறுபேறுகளை / சாதனைகளை நியமத்துடன் ஒப்பீடு செய்தல்
- தவறுகள் / விலகல் காணப்படின் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளல்

**ஒரு வணிகத்திற்கு கட்டுப்படுத்தலின் தேவைகள்**

- நிறுவனத்தின் முன்னேற்றத்தை அவதானிக்கவும் தவறுகளை சீர் செய்யவும் உதவும்.
- சூழல் மாற்றத்திற்கேற்ப செயற்பட கட்டுப்படுத்தல் உதவும்
- அதிகார ஒப்படைப்பிற்கும் குழுச்செயற்பாட்டிற்கும் கட்டுப்படுத்தல் உதவும்.

- உதவிகளை செய்வதற்கு கட்டுப்படுத்தல் அவசியம்
- தவறுகளை இழிவுபடுத்த அல்லது பூச்சிய மட்டத்திற்குக் கொண்டுவர கட்டுப்படுத்தல் உதவும்.
- கிரயங்களை இழிவுபடுத்த கட்டுப்படுத்தல் உதவும்.

### கட்டுப்படுத்தலின் வகைகள்

**செயற்பாட்டுக்கட்டுப்பாடு:-**

நிறுவன தொழிற்பாடுகளில் எந்தவொரு கட்டத்திலும் இடம்பெறும் கட்டுப்பாட்டு முறை செயற்பாட்டுக்கட்டுப்பாடு ஆகும்.


**நடைமுறைக்கட்டுப்பாடு:-**

நிறுவனத்தில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது கட்டுப்படுத்தும் முறை ஆகும்.

**அமைப்பு முறைக்கட்டுப்பாடு:-**

அமைப்பின் அடிப்படை அம்சங்கள் குறித்த இலக்கை எவ்வாறு அணுகும் என்பது பற்றிய கட்டுப்பாட்டுமுறை ஆகும்.

### திட்டமிடுதல் கட்டுப்படுத்தலுக்குமிடையிலான தொடர்பு




முகாமைச்செயற்பாடுகளான திட்டமிடுதல், ஒழுங்குபடுத்தல், செயற்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளின் திட்டமிடுதலும், கட்டுப்படுத்தலும் மிகவும் முக்கியமானதாகும். திட்டமிடல் மூலம் நிறுவனத்தின் வேலைகள் செயல்பாடுகளுக்குத் தேவையான இலக்குகள், நியமங்கள், பெறுபேறுகள் என்பன நிறுவப்படும்.

கட்டுப்படுத்தலின் போது திட்டமிட்ட திட்டத்திற்கேற்ப குறித்த இலக்குகள் அடையப்படுகிறதா எனக் கண்காணித்தல். திட்டமிடுதல் முகாமைச் செயற்பாடுகளின் முதன்மைச் செயற்பாடாகவும் குறித்த நிறுவனத்தில் இலக்கை அடைவதற்கான ஒரு திட்டமாகவும் காணப்படுகிறது.

இத் திட்டமிடுதலானது திட்டமிடுதல் செயற்பாடுகளுடன் நிறுவனத்தின் இலக்கை அடைவதற்கு நடை முறைகளை மேற்கொள்ளும் போது குறிப்பிட்ட திட்டத்திற்கமைவாக நடைபெறும் போது நிறுவனம் தனது இலக்கை கட்டுப்படுத்தலின் மூலம் முகாமைத்துவத்தில் வளர்ச்சியை எய்தலாம். நிறுவனம் மாற்றமடையும் சூழலில் காணப்படுவதால் சூழல் மாற்றங்களை எதிர்கொள்வதற்கு திட்டமிடல் அவசியமாகும். நிறுவனம் நோக்கத்தை அடைய திட்டமிடுதல், கட்டுப்படுத்தல் என்பன உதவும்.

சிறந்த கட்டுப்பாட்டிற்கு திட்டமிடுதல் உதவும், நிர்வாக நடவடிக்கைகளை சிறப்பாக மேற் கொள்ளத் திட்டமிடுதல், கட்டுப்படுத்தல் என்பன உதவும். வள விரயத்தை இழிவுபடுத்த திட்டமிடுதல், கட்டுப்படுத்தல் என்பன உதவும்.

திட்டமிடுதல், கட்டுப்படுத்தலின் மூலம் முகாமைத்துவப் பணிகளுக்கு வழிகாட்டவும் தொடர்புபடுத்தவும் முடியும். எனவே திட்டமிடுதல் செயற்பாடானது கட்டுப்படுத்தலின் மூலம் இலக்குகளை விரைவாகவும் சிறப்பாகவும் செய்து கொள்ள முடியும்.

"திட்டமிட்டிருப்பின் கட்டுப்படுத்தல் அவசியம்"

திட்டமிடுதல் எங்கு நிகழ்கிறதோ அதை சீர் செய்யக்கட்டுப்படுத்தல் என்ற தூண்டில் இன்றியமையாததாகும்.

**உசாத்துணைநூல் :**

ஜகத்பண்டாரநாயக்கா
மயூரன் (வணிகக்கல்வி)

# இன்ரெல் நிறுவனம் கண்டுபிடித்த MICRO PROCESSOR

Tharmeka Arulraja
2010 (Com)

கம்பியூட்டருக்கெனச் செயல்படும் சிப்களை உருவாக்கித்தந்து தொடர்ந்து பல வியத்தகு முன்னேற்றங்களைக் கண்டு வரும் இன்ரெல் நிறுவனம் தன் நாற்பதாவது ஆண்டு விழாவினைக் கொண்டாடியது. உலகெங்கும் இடம் பெற்றிருக்கும் மைக்ரோ புரொசசர்களைக் கண்டு பிடித்த இன்ரெல் நிறுவனம் பல்வேறு விதமாக வளர்ந்துள்ளது.

**1971:-** முதன் முதலில் கல்குலே வேலட்டர்களுக் கான 400xV சிப்பினை இன்ரெல் வழுங்கி யது. இது தான் உலகின் முதல் மைக்ரோ புரொசராக இருந்தது. சிப் அளவில் கம்பியூட்டர் ஒன்றின் செயல் பாடுகளை இது வழங்கியது.

**1974:-** Blistering 5MHz என்ற சிப்தான் முதன் முதலில் ஐ.பி.எம் மற்றும் அதனைப் போன்ற கம்பியூட்டர்களுக்கென வடிவ மைக்கப்பட்ட சிப் ஆகும். இதற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றிதான் இன்ரெல் நிறுவனத்தை முதல் 500 நிறுவனங் களில் ஒன்றாக மாற்றியது.

**1982:-** இன்றைய கம்பியூட்டர்களின் முதல் வகை சிப்பாக 286 வழங்கப்பட்டது. இதிலிருந்துதான் புரொசசர் குடும்பம் தோன்றியது. முன்னாளில் எழுதிய Soft ware தொகுப்புக்கள் மற்றும் File களையும் ஏற்றுக் கொள்ளும் புரொசசராக இது இயங்கியது.

**1985:-** இரண்டு இலட்சத்து 75 ஆயிரம் ட்ரான் சிஸ்டர்களுடன் வடிவமைக்கப்பட்ட முதல் சிப். இதனை 386 எனப் பெயரிட்டு அழைத்தனர்

**1989:-** முதன் முதலாக மேத்ஸ் பங்சன்களுடன் அமைக்கப்பட்ட சிப் 486 குழப்பமான மேத்ஸ் செயற்பாடுகளை சென்ட்ரல் பரொசசரிடம் இருந்து பெற்ற இயங்கும் சிப்பாக இது அமைந்தது.

**1994:-** முதல் பென்டியம் சிப்கிடைத்தது. இது 100MHz வேகத்தில் இயங்கியது. பேச்சு, ஒலி, கைஎழுத்து, Photo images ஆகிய அனைத்தையும் எளிதாக ஒருங் கிணைத்துச் செயல்படுத்தும் சிப்பாக இது உருவானது.

**1995:-** வேர்க்ஸ்டேஷன் கம்பியூட்டர்களுக்கும் 32 பிட்சர்வர்களுக்கும் என பென்டியம் புரோசிப் வெளியிடப்பட்டது.

**1996:-** 75 இலட்சம் ட்ரான்சிஸ்டர்களுடன் எம்.எம். எக்ஸ் தொழில் நுட்பத்துடன் பென்டியம் II ஸியான்சிப் வெளியானது. வீடியோ, ஓடியோ மற்றும் கிரபிக்ஸ்

வகைகளைக் கையாளும் வகையில் இது உருவாக்கப்பட்டது.

1999:- பென்டியம் III வெளியானது. வேகம் 500MHz. இதன்மூலம் Internet. உலாவில் புதிய அனுபவம் கிடைத்தது. 95 லட்சம் ட்ரான் சிஸ்டர்கள் இதில் பொருத்தப்பட்டன.

2000:- குறைந்த மின்செலவில் மொபைல் இன்டெல் செலிரான்சிப் தரப்பட்டது. இந்த செலிரான்சிப் குறைந்த விலையில் வெளியிடப்பட்டதால் Computer இன் மொத்த விலையும் குறைந்தது.

2001:- பென்டியம் டிசிப் வெளியானது இதன் வேகம் அப்போது ஆச்சரியத்தைக் கொடுத்தது. 1.5 மில்லியன் Hz வேகத்தில இயங்கியது.

2002:- ஹைபர் த்ரெடிங் தொழில் நுட்பத்துடன் சிப் வெளியானது ஒரேசிப்பில் இரண்டு process கள் இயங்கின

2004:- Lap top computer கள் இயங்கத் தேவையான சென்ட்ரினோசிப் வெளியானது எங்கும் எடுத்துச் செல்ல இந்த சிப் பெரிய அளவில் வடிவமைக்கப் பட்டிருந்தது.

2006:- தற்போது பயன்பாட்டில் இருக்கும் கோர்டூயோ சிப் வெளியானது. இயங்கும் வேகம் மற்றும் திறமையான டிசைன் இந்த சிப்பினை உலக அளவில் பார்க்க வைத்தது.

2008:- Atom 2540 என்ற பெயரில் எங்கும் எடுத்துச் சென்று பயன்படுத்த உதவிடும் வேகமான இயக்க சிப் இது. பல புதிய நவீன தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தி இது வடிவமைக்கப்பட்டது.

2009:- The core desk top processor என்ற பெயரில், வேகம் மற்றும் திறமையான டிசைன், பல புதிய நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி வடிவமைக் கப்பட்ட திறமையான டிசைன்.

உசாத்துணை :

News paper (Junior star)

# LEADER SHIP

Priya Jeyalingam
2010 (Com)

இன்றைய பொருளாதாரமானது போட்டிகள் நிறைந்ததாகவும் நவீனமயப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகிறது. ஆகவே இன்றைய முயற்சியாளன் வியாபாரத்தில் சந்தர்ப்ப சூழ்நிலைகளை எதிர்நோக்கி நிறுவன இலக்கை அடைய வேண்டும்.

ஒரு இலக்கினை அடைவதற்காக மனித வளத்தினை நெறிப்படுத்துகின்ற ஒரு கருமமே தலைமைத்துவமாகும். அதாவது நிறுவன இலக்கை அடையும் வகையில் தனக்கு கீழே பணி புரியும் ஊழியர்களை வழிநடத்தி அவர்களிடமிருந்து தன்னிச்சையான ஒத்துழைப்பினை பெற்று செயற்படுத்தலை குறிக்கும். இன்னொரு வகையில் கூறினால் தலைமைத்துவம் என்பது ஒரு குறித்த இலட்சியமும் ஒற்றுமையும் இல்லாமல் சிதறுண்டு வாழும் மக்கள் கூட்டத்தினரை இலட்சியமயப்படுத்தி ஒற்றுமைப்படுத்தி நெறிப்படுத்தி தலைமை தாங்கி குறித்த இலட்சியத்தை மிக விரைவில் நிறைவேற்ற முயற்சிக்கும் நடத்தையே ஆகும்.

தலைமைத்துவம் தொடர்பாக முதன்முதலில் கருத்து வெளியிட்டவர் உளவியலாளரான Mosuin Eshaw என்பவராவார்.

தலைமைத்துவம் சிறப்பாக இயங்க வேண்டுமாயின் தலைவன் நேர்மையாளனாகவும், புத்தி

- சாதுரியம் உள்ளவனாகவும் இருக்க வேண்டும். இவ்வாறான தலைவனே தனக்கு கீழே இருக்கும் உதவியாளர்களை தனது திட்டப்படி தொழிற்பட வைப்பான். இதனையே நேர்க்கணிய செல்வாக்கு என்பர். இது மறு புறத்தில் எதிர்க் கணிய செல்வாக்காக மாறி விடக் கூடாது.

எப்போதும் தலைவன் ஏனையோரை விட கூடிய வலுவினை கொண்டிருக்க வேண்டும். இதன் ஊடாக அவன் ஏனையோர் மீது செல்வாக்கு செலுத்தும் நிலை உண்டாகும்.

வலு → செல்வாக்கு → ஏனையோர் நடத்தையில் மாற்றம்

Power → Influence → Changes in behaviour

**தலைமைத்துவ பண்புகள்** Leader ship traits

ஒவ்வொரு நிறுவனங்களிலும் காணப்படும் தலைவன் தனது கருமங்களை ஆற்றுவதற்கு சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அவையாவன

- மனித நடத்தையினை விளங்கி கொள்ளும் ஆற்றல் கொண்டிருத்தல் வேண்டும்.
- பேச்சு வல்லமையை கொண்டிருத்தல் வேண்டும்.
- நோக்க உணர்வுடன் தொழிற்படுதல் வேண்டும்.
- தொழிநுட்பதிறனை அதாவது வேலை தொடர்பான பூரண அறிவை கொண்டிருக்க வேண்டும்.
- பக்கசார்பற்ற நடுநிலைமையாளராக காணப்பட வேண்டும்.

- தேவைப்படும் தீர்மானங்களை விரைவாக எடுத்தல் வேண்டும்.
- பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளவும் அதற்கு பதிலளிக்க கூடியவராகவும் காணப்பட வேண்டும்.
- ஆபத்துக்களை தாங்குபவராகவும் முரண்பாட்டை முகாமை செய்யும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
- நியாயமான முறையில் செய்தித் தொடர்பாடலை மேற்கொள்பவராகவும் நல்ல அம்சங்களை மிகைப்படுத்தி கூறுபவராகவும் பாதகமான அம்சங்களை குறைத்து கூறுபவராகவும் காணப்படல் கூடாது.
- நிறுவனத்தின் இலக்கினை அடையும் பொருட்டு உழைப்பாளராகவும் விசுவாசமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
- விமர்சனங்களை ஏற்கத் தயாராகவுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- நேரத்தினை சரியாக முகாமை செய்யக் கூடிய ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- திறன்களையும் தேர்ச்சிகளையும் ஒருங்கிணைத்தல்.

**தலைமைத்துவ இயல்புகளும், வகைகளும்**

## Leadership styles and types

தலைமைத்துவத்தின் இயல்பு என்பது ஒரு நிறுவனத்தில் காணப்படும் தலைவன் கொண்டிருக்கும் அதிகாரங்களையும் உதவியாளர்கள் கொண்டிருக்கும் சுதந்திரங்களையும் மையமாக கொண்ட இயல்பாகும்.

நிறுவனங்கள் கொண்டிருக்கும் தலைமைத்துவ இயல்புகள் 4 காணப்படுகின்றன

1) சுரண்டல் தலைமைத்துவம் Exploitative leader ship
2) இரங்கல் தலைமைத்துவம் Benevolent Leadership
3) கலந்துரையாடல் தலைமைத்துவம் Consultative Leader ship
4) பங்கு மற்றும் தலைமைத்துவம் Part icipative Leader ship.

தலைமைத்துவ வகைகளாக பின்வருவன வற்றை குறிப்பிடலாம்

1) சர்வாதிகார தலைமைத்துவம்
சகல தீர்மானங்களையும் முயற்சியாளர் தானே எடுத்து ஊழியர்களை வழிநடத்துவார். இங்கு அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருக்கும்.
2) தந்தைத்தலைமைத்துவம்
தீர்மானங்களை தானே எடுத்த போதிலும் ஊழியர்களை ஒரு தந்தை போல நடாத்துவார்
3) ஜனநாயக தலைமைத்துவம்
முயற்சியாளர் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது ஊழியர்களையும் பங்கெடுக்க செய்வார்.
4) சமத்துவ தலைமைத்துவம்
ஊழியர்களை சமத்துவமாக மதித்து நடத்துதல்.
5) தடையில்லா தலைமைத்துவம்
ஊழியர்கள் தமது கருமங்களை நிறைவேற்ற சுதந்திரம் அளிப்பவர்.

தலைமைத்துவத்தில் எதிர்க்கணியமான தலைமைத்துவமும் காணப்படுகிறது. அதாவது அதிகாரத்தை பயன்படுத்தி வேலை வாங்கம் பண்பாகும். இதன் நோக்கம் எல்லா உதவியாளர்கள் மூலமும் நிறுவன இலக்கை அடைவதாகும். இதனை கடுமையான முறையில் அணுகுதல் எனக்கொள்வர். தண்டனைகள் அபராதங்கள், பதவிக்குறைப்பு போன்றவை உதவியாளருக்கு வழங்கப்படலாம். எனவே தான் இதனை எதிர்க்கணிய தலைமைத்துவம் என்பர்.

எனவே முயற்சியாளன் தனது இலக்கை எய்துவதற்காக பிறரை வழிநடத்தும் ஒரு தலைமைத்துவம் மிகவும் வேண்டப்படுகிறது. தலைமைத்துவத்தை விருத்தி செய்ய வேண்டும். இதன் மூலம் முயற்சியாளன் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்க முடியும்

முடிவுரை

பிறரை வழிநடத்தும் எவருக்கும் தலைமைத் துவம் மிகவும் வேண்டப்படுகிறது அந்தவகையில் முகாமையாளருக்கும் தலைமைத்துவம் வேண்டப் படுகிறது. நிறுவனத்தின் வெற்றியானது சிறந்த தலைமைத்துவத்திலே தங்கியுள்ளது. திறனற்ற தலைமைத்துவம் பல்வேறு வகையான முகாமைத் துவ பிரச்சினைக்கு வழி வகுக்கும்.

*Reference :*


முகாமைத்துவத்திற்கான ஓர் அறிமுகம் (ந. தேவராஜன் ஜெயராமன்)

வணிகக்கல்வி (ஜகத்பண்டாரநாயக்கா)


**விதாதா வேலைத்திட்டம்**

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தினை கிராமத்துக்கு கொண்டு செல்வதற்கான வேலைத்திட்டமாகும்.

# இணைய உலக வரலாறு

Thivja Vijayakuma
2010 (Com)

1957ல் USSR "Sputnik" என்ற செயற்கை கோள் அனுப்பி வெற்றி கொண்ட பின் போட்டா போட்டியாக (பணிப்போர்) ஒரு இராணுவ ஆராய்ச்சி மையத்தை ஆரம்பித்தனர் (ARPANET) இந்த அமைப்பானது பல்வேறுபட்ட இராணுவ ஆய்வின் ஒரு அங்கமாக 1962-1969 இடைப்பட்ட காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. தான் இணையத் தொழில்நுட்பமாகும். இந்தக் கண்டு பிடிப்பானது தகவல் தொழில் நுட்பத்தில் பெரும் புரட்சி மட்டுமல்லாமல் தனி மனித வாழ்வியலையே ஒரு மிகப் பெரிய மாற்றத்தினுள் ஆக்கிரமித்துக் கொண்டு வருகிறது. இணையம் பல பரிமாணங்களில் பரிணாமம் அடைந்த வரலாற்றை பல நூறு பக்கங்களில் சொல்லும் அளவில் அதன் சாதனை விரிந்துள்ளது. இருந்த போதிலும் இந்தத் தகவல் தொழில் நுட்பத்தின் எதிர்கால வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்பது எதிர்வு கூறமுடியாதுள்ள போதும் இதுவரை காலமும் கடந்து வந்த பாதையை மிக சுருக்கமாக ஆண்டு ரீதியாக குறிப்பிடத்தக்க சில வரலாற்று நிகழ்வுகளுடன் கீழே பார்ப்போம்.

**"இணைய உலக வரலாறு"**

- **1969**

  1969ல் இரண்டு கணனிகளிற்கிடையில் "log-in" என்ற சொல்லே முதலில் அனுப்பி பரீட்சிக்கப்பட்ட செய்தியாகும்.

- **1971**

  முதலில் 23 இணைய இணைப்பு மூலமாக மிகப்பிரபல்யமான பல்கலைக்கழகங்களை இணைத்தனர்.

- **1972**

  பொதுமக்களிற்காக முதன் முறையாக இந்த தொடர்பு சாதனம் இயக்கி காட்டப்பட்டது. அதே ஆண்டு UK ஐ சேர்ந்த விஞ்ஞானி முதலாவது e-mail ஐ @ உடன் வடிவமைத்து வெற்றி கொண்டார்.

- **1973**

  ARPANET ஆனது DARPA எனப் பெயர் மாற்றம் செய்ததோடு இணையம் பற்றிய பலரது கருதுகோள்கள் உயிரூட்டம் பெற்றது. இணை W தொடர்புகளிற்கான நியம கடைப் பிடிப்புக்கள் உருப்பெற்றன.

- **1974**

  இணைப்புக்கள் 100 எண்ணிக்கையாக அதிகரித்தது

- **1976**

  1976 ல் முதலாவது மின் அஞ்சல் (e-mail) பிரித்தானிய மகாராணியால் அனுப்பப்பட்டது மட்டுமல்லாமல் இவரே முதலில் e-mail அனுப்பிய அரச தலைவருமாவார்

◆ 1982

முதல் முதலாக "internet" சொற்பிரயோகம் பிறந்ததுடன் டொற்() என்ற குறியீடு இணைக்க தொடங்கப்பட்ட விரும்.

◆ 1984

இணையத்தளப் பெயர்ப் பதிவு முறை (DNS) தொடங்கியதுடன் 1000 இணைப்புக்களை எட்டிப்பிடித்தது.

◆ 1985

AOL, .COM, .edu, .gov உதயம்

◆ 1986

.net அறிமுகம்

◆ 1987

.org இணைய சுட்டி இணைப்பி அறிவிப்புடன் 28000 இணைப்புக்களுடன் பயணம் தொடர்ந்த ஆண்டு

◆ 1988

இணைய சந்திப்பு (chat) உருப்பெற்றதோடு கணனிகளில் இணையவழி வைரஸ் தாக்கமுடன் 60000 இணைப்புக்களை தாண்டியது.

◆ 1989

இணைப்புக்களை 100000 மேல் மன்ற நிலையில் world.std.com உதயம். Time Bernerslee தனது இணைய ஆராய்ச்சியின் விளைவாக கணனிகள் பேசும் இணைய மொழியை (HTML) வெளியிட்டது மல்லாமல் WWW ஐயும் நிறுவினார்.

◆ 1991

சர்வதேச வலைப்பின்னல் குறியீடு "www" நடைமுறைக்கு வந்த ஆண்டாகியது.

◆ 1992

இணைய சமூக அமைப்பு (ISOC) உருவாக்கத்துடன் ஒரு மில்லியன் பாவனையாளர்களை உலக அளவில் இணைய சேவை பெற்றது பதிவானது.

◆ 1993

இணைய வானொலி, இணையத்தள பேசும் மொழி பரிமாற்றி அமுலாக்கி (http) அறிமுத்தோடு mosaic உதயம்

◆ 1994

இணையம் பிறந்து 25 வருடம் பூர்த்தி கொண்டாட்டம் அத்துடன் இணைய உலகின் பிரபல்யமான Yahoo, amazon, w3c, netscape அவதரிப்போடு 6 மில்லியன் பாவனையாளர்களை உலக அளவில் இணைய சேவை பெற்றது பதிவானது.

◆ 1995

புகழ் பெற்ற கணனி இணைய இயக்கிகள் Internet Explorar, mozilla வருகை. இணைய வர்த்தகத்தில் அழியாப் புகழ்பெற்ற e-bay (இன்று வரை 223 மில்லியன் மேலான பதிவு செய்யப்பட்ட பாவனையாளர்கள்) வெளியானதோடு Java, Java Script அறிமுகமானது இவற்றோடு Alta Vista, MP3 என பலபுரட்சி வருகை கண்ட வருடம்

◆ 1996

இணைய தொலைபேசி, இணைய தொலைக் காட்சி இணைய உலகில் தகவல் பெற என்றும் தட்டப்படும். Wiki, Alexa என்பவற்றின் வருகை tv.com விற்கப்பட்டது ($15000) இணைய உலகில் 1.7 மில்லியன் பாவனையாளர்களை உலக அளவில் இணைய சேவை பெற்றது பதிவானது.

◆ 1997

தொடுப்பில்லாத் தொடர்பு (wap அறிமுகம்) Business.com விலை போனது ($150000) இந்த ஆண்டு 19.5 மில்லியன் இணைப்புக்களை எட்டிப்பிடித்து Netscape மிகவும்

குறைந்த விலையில் dmoz.org ஐ கொள் முகள் ($ ஒரு மில்லியன்) செய்தனர்.

- **1998**

மேலும் பல சாதனை கண்ட வருடமாக Goole வருகையடன் Netscape ஐ AOL மிக மிகப்பெரிய விலைக்கும் ($4.2 பில்லியன்கள் மில்லியனல்ல) compa நிறுவனம் Alta vista வையும் ($3.3 மில்லியன்) கொள்முதல் செய்தனர்

- **1999**

இந்த ஆண்டில் my space, Paypal இவற்றின் வருகையுடன் "blog" என்ற சொற்பிரயோகம் நடைமுறைக்கு வந்தது Alexa ஐ தனக்கு சொந்தமாக்க Amazone $250 மில்லியன்களை கொடுத்தது.

- **2000**

சட்டவிரோத இணைய உடைப்பு கும்பல்களின் ஆதிக்கத்திற்குள் உலக இணையத்தளம் சிக்கிய வருடமாகியது (hack of the year) AOL $ 16 மில்லியன்களை கொடுத்து Time warner ஐ சொந்தமாக்கியது.

- **2001**

மின் அஞ்சல் வைரஸ் தாக்கத்திற்குட்பட்ட பிரபல்யமான ஆண்டு ஆனதுடன் (virus of the year) .biz, .into அறிமுகமானது. இது மட்டுமல்லாமல் கட்டற்ற கலைக்களஞ்சிய மான wikipedia பிறந்ததும் இந்த ஆண்டில்தான்.

- **2002**

உலகளாவிய இணைய பாவனையாளர்களின் எண்ணிக்கை 544.2 மில்லியன்களைத் தாண்டியது RSS, Pod cast, blog வருகையுடன் .name, .cop அறிமுகமானது

- **2003**

மேலும் இணையத்தள பெயர்களின் இணைப்பு சுட்டியான pro உடன் iTune அறிமுகமானது. இந்த ஆண்டிலேயே பிரபல்யமான உரிமை மீறல் aol - micro soft தீர்ப்பானது AOL ற்கு $750 மில்லியன் நஷ்டஈடாக கொடுத்ததுடன் netscape ன் வீழ்ச்சிக்கான சூழ்ச்சி செய்த வருடம் இதுதான்.

- **2004**

கணனி இணைய இயக்கி Fire Fox பிறந்ததுடன் இணையத்தளமூடான வர்த்தக வருவாய் $117 பில்லியன்களையும் தாண்டியது.

- **2005**

இணைய உலகின் பெயர பெற்ற video தளம் you Tube உருவானது.

- **2006**

Goole தனது இணைய ஆக்கிரமிப்புப் போட்டியில் $1.65 மில்லியன்களை கொடுத்து you Tube ஐ சொந்தமாக்கியது. இணைய உலகத்தில் 12 மில்லியனிற்கு மேலான இணையத்தளங்கள் வலம் வந்தன.

- **2007**

மிகவும் அண்மையில் (30 september) எடுக்கப்பட்ட கணக்கெடுப்புகளின் படி உலக இணைய தள பாவனையாளர்களின் எண்ணிக்கை 244, 449, 601 ஐயும் தாண்டி சாதனை தொடர்கிறது.

- **2008, 2009**

மனிதர்களின் தேவைகளில் ஒன்றாகி விட்டது.

**உசாத்துணை :**

www.Google tamil.Com
Grade 10 & 11 ICT book

# M.C.A பல்தேர்வு வினாக்கள்

Kajanthiny Arudsothy
பிரிவு - 2010 (Com)

01. காலரீதியான இருப்பு எடுத்தலை மேற்கொள்ளும் நிறுவனத்தில் இருப்பு பதிவதற்கான இரட்டைப் பதிவு
1) இருப்புக் க/கு வரவு ஐந்தொகை க/கு செலவு 2) வியாபார க/கு வரவு இருப்பு க/கு செலவு
3) வியாபார க/கு வரவு ஐந்தொகை க/கு செலவு 4) இருப்பு க/கு வரவு வியாபார க/கு செலவு

02. சொத்தொன்றிற்கான கிரயம் 5000000/=, ஆயுட்காலம் 10 வருடங்கள், 2 வருடங்கள் ஒடுங்குபாக மீதிமுறையில் 20% பெறுமானதேய்வு இடப்பட்டு, அடுத்த வருடம் நேர்கோட்டு முறையில் தேய்விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. 3ம் வருடம் தேய்வாக இடும் செலவுத்தொகை
1) ரூ 80000 2) ரூ 60000 3) ரூ 50000
4) ரூ 40000 5) ரூ 35000

03. வியாபாரமொன்றின் புத்தகங்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| 2003.04.01ல் ஆரம்ப இருப்பு | ரூ 2000 |
| வருடத்திற்குள் தெரிவு | ரூ 13000 |
| வருடத்திற்குள் விற்பனை | ரூ 15000 |

தீடிரென ஏற்பட்ட தீ விபத்தில் இறுதிஇருப்பு அழிவுற்றது. வியாபாரத்தின் மொத்த லாபவீதம் விற்பனை விலையில் 20% ஆகும் அழிவுற்ற பொருளின் பெறுமதியானது
1) ரூ 14000 2) ரூ 12000 3) ரூ 4000
4) ரூ 3000 5) ரூ 2000

04. வங்கிகடன் தவணைகட்டுவதற்கான முதற்பதிவேடு
1) பொது நாளேடு 2) கொள்வனவு நாளேடு
3) காசேடு 4) சில்லறை காசேடு

05. இருப்பை கிரயத்தை நடைமுறை சந்தை விலையில் காட்டக்கூடிய இருப்பு மதிப்பீட்டு முறை
1) முதல் வந்தது முதல் வெளியே முறை (FIFO)
2) இறுதியாக வந்தது முதல் வெளியே முறை (LIFO)
3) நிறையிட்ட சராசரி
4) மேற்கூறிய எதுவுமல்ல

06) வியாபாரமொன்றின் நிதிக்கூற்றுக்களை தயாரித்து வைப்பதற்கான பொறுப்பு யாரிடம் உள்ளது?

.................................................................................................................................

07 தொழில் சார் கணக்கீட்டு நிறுவனங்களின் தொழிற்பாடுகள் 2 தருக?

.................................................................................................................................

.................................................................................................................................

08. உரிமை அதிகரிக்க கூடியதும், வருமானமோ, செலவோ அதிகரிக்காத நிலையை கொண்ட கொடுக்கல் வாங்கல் ஒன்று தருக?

.................................................................................................................................

09. இரட்டைப்பதிவ முறையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் கணக்குகள் எவை?

.................................................................................................................................

10. வருமான பெறவனவு, மூலதன பெறுவனவு ஒவ்வோர் உதாரணம் தருக?

.................................................................................................................................

11. கணக்கீட்டு வரையறைகளில் ஒன்று
1) இலாபத்தை மட்டும் உடைத்தல்
2) பண்டங்கள் காசுக்கு மட்டும் விற்றல்
3) கடன் வழங்கல்
4) பணப் பெறுமானம் நிலையாக இருத்தல்

12. 1995ம் ஆண்டு கணக்கீட்டு கணக்காய்வு சட்டத்தின் படி இலங்கை கணக்கீட்டு நியமங்களை தயாரிப்பது
1) பாராளுமன்றம்
2) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் குழு
3) சர்வதேச கணக்கீட்டு நியமங்கள் சபை
4) இலங்கை கணக்கீட்டு கணக்காய்வு நியமங்கள் நெறிப்படுத்தும் சபை

13. செம்மையாக்கல் அனைத்திற்கும்
1) ஒரு பதிவே உண்டு
2) இரண்டு பதிவு உண்டு
3) மூன்று பதிவு உண்டு
4) நான்கு பதிவு உண்டு
5) மேற்கூறிய எவையுமல்ல

14. சொத்து, பொறுப்பு, உரிமையாளரின் உரிமையை காட்டும் வியாபார ஆவணம்
1) நிதிக் கூற்று
2) உரிமையாளரின் உரிமைக்கூற்று
3) இலாப நட்டக்கூற்று
4) ஐந்தொகை

15. ஆரம்ப கடன்பட்டோர் மீதி 11500ரூ, விற்பனை 48000, கடன்பட்டோரிடம் பெற்றது 45000 எனின் இறுதி கடன்படுனர் மீதி

1) 8500 2) 14500 3) 83500 4) 18500

16. வந்தால் வரலும், சென்றால் செலவிலும் பதிதல்.....................................கணக்கின் விதி ஆகும்.

17. இலங்கை கணக்கீட்டு நியமம் இல 12ன்படி. ஐந்தொகை திகதிக்கு பின்னமான நிகழ்வுகள் ......................நிகழ்வுகள் எனவும் ...................................... நிகழ்வுகள் எனவும் விகைப்படுத்தப் படுகின்றன

18. காசு..............................தன்மை ........................................ சொத்தாகும்.

19. ஆரம்ப காசு + பெறுவனவு - கொடுப்பனவு = ..................................................

20. உற்பத்தி கிரயத்துடன் சேர்க்கப்படும் உற்பத்தியில் இலாபம்..............................என அழைக்கப்படும்

சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

21. ஒரு புதிய பங்காளரால் பங்குடமையில் முதலீடு செய்யப்பட்ட காசு அல்லாத சொத்துக்கள் புத்தகங்களில் பதியப்படுவதில்லை ( )

22. கட்டுப்பாட்டு கணக்கினை இரட்டை பதிவின் ஒரு பகுதியாக பேணி வரும் தினங்களுக்கு நாளேடு களின் கூட்டுத்தொகையில் ஏற்படும் வழுக்கள் வெளிக்காட்டும் வழுக்கள் ஆகும். ( )

23. நிகழத்தக்க பொறுப்புக்கள் பொதுவாக ஐந்தொகையில் காட்டப்படுகின்றன ( )

24. கோட்பாட்டு வழு பரீட்சை மீதியின் இணக்கத்தை பாதிக்கும். ( )

25. நிலையான சொத்து விற்பனையால் வரும் இலாபம் மூலதன வருமானமாகும். ( )

26. வரலாற்று கிரயமானது ஐந்தொகையுடன் மட்டும் தொடர்புடையது ( )

27. சிறு கருவிகளுக்கு பெறுமானத் தேய்விடுவதற்கு மறுபடி விலை மதித்தல் முறை சிறப்பானதாகும். ( )

28. எதிர்பார்க்கப்படும் இழப்பொன்றை அடையாளப்படுத்துவதற்கான எண்ணக்கரு முன்னெச்சரிக்கை எண்ணக்கருவாகும். ( )

29. காசுப் பாய்ச்சல் நடைபெறும் 3 செயற்பாடுகள் எவை?

..................................................................................................................

..................................................................................................................

..................................................................................................................

30. சராசரி சேகரிப்பு காலம் என்றால் என்ன?

.............................................................................................................................................

31. கடன்படுனர் வயதிடல் என்றால் என்ன?

.............................................................................................................................................

32. பின்தள்ளும் பதிவுகள் என்றால் என்ன?

.............................................................................................................................................

33. கடன் திணைக்களம் என்றால் என்ன?

.............................................................................................................................................

34. தானங்கள் இடம் மாறிப் பதியும் வழுவை விளக்கி உதாரணம் தருக?

.............................................................................................................................................

35. கட்டுப்பாட்டு கணக்கை தயாரிக்கும் நபர் யார்?

.............................................................................................................................................

36. நேர் வரவு என்றால் என்ன?

.............................................................................................................................................

37. ஒரு வணிகம் தனது.................................... தவிர்த்து தனது நிதிக்கூற்றுக்களை அட்டுறு அடிப்படையினை பிரயோகித்து தயாரிக்க வேண்டும்

38. பின்வரும் கூற்றுக்களுக்கு எதிரே பொருந்தும் எண்ணக்கருக்களை எழுதுக.

a) முதலாளி தனது சொந்தப் பணத்திலிருந்து வருமான வரி செலுத்துதல் ..................................

b) கடை ஊழியன் ஒருவனின் உழைப்பு அவனுக்கு கொடுத்த சம்பளத்தை விட அதிகமாக இருந்தது ..................................

c) அட்டுறு கொடுப்பனவுகள் அவ் வருடத்தின் செலவாக கூட்டி சாட்டப்படுவது ...............................

39. ................................. செயற்பாட்டிற்கு அடிப்படையாக உள்ளதே கணக்கீட்டின் மூலாதாரம் ஆகும்.

40. கொள்வனவு தினசேரியில் உள்ளடங்கும் கழிவு ............................................ ஆகும்.

# Answers

01. 4
02. 4
03. 4
04. 2
05. 3
06. உரிமையாளரிடம் / இயக்குனர் / இயக்குனர்சபை
07. நியமங்களை வெளியிடல்
    கணக்கறிக்கைகளை கணக்காய்வு செய்தல்
08. உரிமையாளர் மேலதிக மூலதனம் இடல்
09. சொத்து க/கு, வருமான க/கு, செலவு க/கு, பொறுப்பு க/கு, உரிமை க/கு
10. வருமான பெறுவனவு - காசுவிற்பனை
    மூலதன பெறுவனவு - முதலீட்டு விற்பனையால் பெற்ற காசு
11. 4
12. 2
13. 2
14. 4
15. 2
16. மெய்
17. சீராக்கம் செய்யக்கூடிய, சீராக்கம் தேவையற்ற
18. திரவத், கூடிய 100%
19. இறுதிக்காசு மீதி
20. மாற்றல் கிரயம்
21. பிழை
22. பிழை
23. பிழை
24. பிழை
25. சரி
26. பிழை
27. பிழை
28. சரி
29. செயற்பாட்டு காசுப்பாய்ச்சல்
    முதலீட்டுக் காசுப் பாய்ச்சல்
    நிதியீட்டக சாசுப் பாய்ச்சல்
30. கடன் விற்பனைக்கான தொகையை வருமதியாளரிடமிருந்து வசூலிக்க எடுக்கும் காலம்.
31. கடன்பட்டோர் மீதியை அவை மீதியாக இருக்கும் கால அளவை அடிப்படையாக கொண்டு வகைப்படுத்தல்
32. கணக்குகளில் அதிக தொகை பதியப்பட்டு இருக்குமிடத்து அதை குறைப்பதற்கான பதிவு

33. நிறுவனத்தின் கடன் வழங்கும், சேகரிக்கும் கொள்கைகளுக்கு பொறுப்பாக செயற்படும் திணைக்களம்.

34. ஒரு எண்ணிலுள்ள தானங்களை முன் பின்னாக மாற்றிப் பதிதல்

    eg:- சம்பளம் 510 ஐ 150 எனபதிதல்

35. நிறுவனத்தின் கணக்கீட்டு பதிவுகளில் எவ்வித தொடர்பமற்ற நபர்

36. நிறுவனத்தின் அனுமதியுடன் விநியோகஸ்தர் நிறுவனத்தின் வங்கி கணக்கிலிருந்து பணத்தை பெற்றுக் கொள்ளல்

37. காசேட்டை

38. a) அலகு சார் எண்ணக்கரு

    b) பண அளவீட்டு எண்ணக்கரு

    c) அட்டுறு எண்ணக்கரு

39. கணக்கீட்டின்

40. வியாபார கழிவு

**உசாத்துணை நூல்கள் :**

கணக்கீட்டு மாதிரிப் பயிற்சி D. Sam நவீன நிதிக் கணக்கீட்டு கோட்பாடுகள்.










# PEOPLES'BANK

YES Future Stars

Offers students preparing for their A' Levels, an opportunity to win 100 university scholarships plus many other benefits.

Students sitting for the A' Level exam in 2011 can apply by opening a YES Future Stars Account before 31st December 2009 and by maintaining a minimum balance of Rs. 5,000/- for 12 months

and

Students sitting for the A' Level exam in 2011 can apply by opening a YES Future Stars Account before 31st December 2009 and by maintaining a minimum balance of Rs. 5,000/- for 24 months to be eligible for these scholarships.

**Scholarships worth Rs.30,000/-**
Maintain a minimum balance of Rs. 5,000/- for a total of 12 months to qualify

**Scholarships worth Rs.60,000/-**
Maintain a minimum balance of Rs. 5,000/- for a total of 24 months to qualify

**Receive an attractive interest rate of 6.5%**

**1% bonus interest**
Maintain a balance of Rs. 25,000/- or above

**2% bonus interest**
Maintain a balance of Rs. 50,000/- or above



வர்த்தகி சிறப்புற எமது வாழ்த்துக்கள்

# மைதிலி

## நகைமாடம்

நங்கையரின் ஒரே ஆசை தங்களை அழகு படுத்துவது அதற்கு தங்க ஆபரணங்கள் தான் முன்னணி வகிக்கிறது அதற்கும் இதோ இருக்கிறது புதிய நகைமாடம் அதுதான்

**மைதிலி நகைமாடம்** புதிய இடம் கண்கவர் காட்சியகம்

விரும்பிய தெரிவுக்கு நங்கையர் நாடிவரும் இடம்

89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-2227902

79Z, செட்டியார் தெரு,
கொழும்பு.
T.P 0112396239



வர்த்தகி சிறப்புற எமது வாழ்த்துக்கள்





அழகுக்கு அழகு கலைவாணிதான்

வீணை ஏந்திநிற்கும் அழகும் அழகுதான் அதை விஞ்சி அழகோ

ஆபர்ண அணி கலன்கள் அழகுக்கு அழகு

22 கரட்டில் விரும்பிய டிசைன்களில்

நங்கையர் தேடி வரும் இடம்



# நியூ நகுலா

## ஜுவல்லறி

தங்கப்பவுண் நகை வியாபாரம்

74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021-2225511

# Bank of Ceylon

## உங்கள் பிள்ளையின் உயர் கல்விக்காக இப்போதே சேமிக்கத் தொடங்குங்கள்

உங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்தை ஒளி மயமாக்குவதே உங்களது ஒரே எதிர்பார்ப்பு. அவர்களுக்காக "ரண் கெகுளு" கணக்கொன்றை ஆரம்பித்து பணத்தை சேமியுங்கள்.

18 வயதுக்குக் குறைந்த சகல பிள்ளைகளுக்கும் வயது வந்தோர்களால் இக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

பணம் மூலமோ அல்லது அவர்களுக்குக் கிடைக்கும் "ரண் கெகுளு" கணக்கு வவுச்சர்கள் மூலமோ இக் கணக்கை ஆரம்பிக்கலாம். ஆகக் குறைந்த ஆரம்ப வைப்பாக ரூபா 200/= ஐ வைப்புச்செய்ய வேண்டும்.

சாதாரண சேமிப்பு கணக்குகளை விட 1% வட்டி அதிகம்.

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் "ரண் கெகுளு" கணக்குகளை வைத்திருப்பவர்களுக்கு தேசிய ரீதியில் 1000 பேருக்கும் மாவட்ட ரீதியாக 250 பேருக்கும் ரூ. 10,000/= வீதம் பணப் பரிசுகள் வழங்கப்படும். (இதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சை திகதிக்கு முன்பு "ரண் கெகுளு" கணக்கில் குறைந்தபட்சம் ரூ. 2500/= நிலுவையாக இருக்க வேண்டு)

பிள்ளைகளுக்கு மட்டுமின்றி கணக்கை ஆரம்பித்தவருக்கும் இலவச ஆயுட் காப்புறுதி வழங்கப்படும்.

கணக்கை வைத்திருக்கும் குழந்தைக்கு இலவச வைத்திய காப்புறுதி.

பாரதூரமான விபத்து மற்றும் குறித்துரைக்கப்பட்ட 10 நோய்களில் ஒன்று தொடர்பாக, பிள்ளைக்கு ரூபா. 100,000/= வரையான இலவச காப்பீடு வழங்கப்படும். அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றால் நாள் ஒன்றுக்கு ரூபா 600/= வீதம் 30 தினங்களுக்கு

கணக்கை ஆரம்பிப்பவருக்கு 70வயது வரை இலவச ஆயுள் காப்புறுதி. (கணக்கை ஆரம்பிப்பவர் 60 வயதுக்கு குறைந்தவராக இருக்க வேண்டும்)

கணக்கை ஆரம்பித்தவருக்கு கணக்கிலுள்ள நிலுவையை போல் 10 மடங்கு அவசர விபத்து காப்பீடு இலவசம்.

ஆகக்கூடியது 500,000/-

(ஏற்பட்ட விபத்துக்கமைய காப்புறுதி தொகை வழங்கப்படும் பல கணக்குகளை ஆரம்பிப்பவருக்கான காப்பீடு அகக்கூடியது 1,000,000/-)

(இதற்கான தகுதியை பெற சம்பவம் நிகழ்வதற்கு முன்பு 6 மாதங்களாக "ரண் கெகுளு" கணக்கில் குறைந்தபட்சம் ரூபா 5,000/= பேணப்பட வேண்டும்.அத்துடன் சம்பவம் நிகழ்ந்து 6 மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைக்கு கோரிக்கையைசமர்பிக்க வேண்டும்).

பிள்ளைக்கு 18 வயதானதும் "ரண் கெகுளு" கணக்கு சுயமாக 18+ இளைஞர் சேமிப்பு கணக்குக்கு மாற்றப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து அருகிலுள்ள இலங்கை வங்கி கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்க.

(முன்னறிவித்தலின்றி "ரண்கெகுளு" கணக்கின் விதிகளையும்

நிபந்தனைகளையும் திருத்தும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு)

BANK OF CEYLON BOC ரண் கெகுளு



# சிறி மதனா நகை மாளிகை

**காலத்தால் அழியாத — கற்பனைக்கு எட்டாத அற்புத படைப்புக்கள்**

**நவீன உலகத்திற்கேற்ப இணையற்ற**

**புத்தம் புதிய டிசைன்களில்**

தங்கப் படைப்புக்கள் தங்கத்தின் தரம் என்றும் நிரந்தரம்

தங்கம் என்றால் தரம் தவறாமல் நாடுமிடம் நகுலா நகை மாடம்

177/M, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

177/3, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

# HNB

**Start of a learning Journey....**
**Start of a brighter future...........**

HNB Singithi Lama

உங்கள் செல்லப் பிள்ளையின் ஆற்றல்களை வளர்க்க எழுத்து, பேச்சு, பாடல், சித்திரம் ஆகியவற்றில் மட்டுமன்றி இன்னுமொரு விடயம் குறித்தும் நீங்கம் கவனம் செலுத்த வேண்டும். அதுதான் சேமிப்பு.

சேமிக்கும் பழக்கத்தை சிறுபிராயம் முதலே கற்றுக்கொடுப்பீர்களாயின் அவர்களின் எதிர்காலம் நிச்சயமாக வளமானதாகும். அதனை வளர்க்க உங்களைப்போலவே நாமும் அக்கறையுடன் செயற்படுகின்றோம்.

உங்கள் பிள்ளை பாடசாலை செல்ல ஆரம்பித்த நாளிலிருந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் சிங்கிதி சிறுவர் கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள். ஆரம்ப வைப்பின் 50% வீதத்தினை நாம் பரிசாக தருகின்றோம். (அதிகூடிய பரிசுத்தொகை ரூ. 1,000/= ஆகும்)

அதாவது நீங்கள் ஆரம்பத்தில் ரூ. 2,000/= வைப்பிலிடும் பட்சத்தில் நாம் தரும் ரூ. 1,000/= பரிசுத்தொகையுடன் உங்களின் ஆரம்ப வைப்புத்தொகை 7. 3,000/= ஆக உயரும்.

ரூ 500/= ஐ வைப்புச் செய்து சிங்கிதி சிறுவர் கணக்கொன்றை ஆரம்பித்து உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு சிறந்த அடித்தளத்தை அமைத்து கொடுப்பதுடன், சிறந்த பரிசுகளையும் பெற்றிடுங்கள்.

மறுபக்கத்திலுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு, வைப்புத்தொகையின் அதிகரிப்பிற்கேற்ப பரிசுகளை பெற்றுக்கொள்ளலாம். வைப்புத்தொகையானது ரூ. 15,000/= க்கு மேற்படும் பட்சத்தில் பரிசு வவுச்சர்களை பெற்று, உங்கள் பிள்ளைகள் விரும்பும் பொருட்களை கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

அது மட்டுமல்லாது இலங்கையின் மாபெரும் சேமிப்புச் சீட்டிழுப்பான 'HNB பத்தும் விமன" சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்பையும் இக்கணக்கின் மூலம் உங்கள் பிள்ளைகள் பெற்றிடுவர்.

மழலை மொழியில் கொஞ்சி விளையாடிய செல்லக்குழந்தை பள்ளி செல்லும் முதல்நாள் ஆனந்தம் மிக்கது. பள்ளிப்பாடத்தோடு அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் படைக்க, இந்த முதல் காலடிதான் அத்திவாரம். உங்கள் பிள்ளை செல்லும் இந்த அறிவுப் பயணத்தில் வெற்றிகள் பலசேர்த்து பிரகாசமாய் மிளர்ந்திட ஹற்றன் நஷனல் வங்கி அவர்களின் முன்னேற்றத்தின் பங்காளியாக இருக்கின்றது.


**எமது வர்த்தகி வெளிவர எம்மை**

**ஊக்குவித்த விளம்பர**

**அனுசரணையாளர்கள்**

**அனைவருக்கும்**

**எமது நெஞ்சம்**

**நிறைந்த நன்றிகள்**

**உரித்தாகுக.**



*Printed by : Mathi Colours Nallur 021 2229285*